
# இறையியல் களஞ்சியம்

சமகால இறையியல் நோக்கு...

# கொரோனாவும் தேர்தலும்



இதழ் 63

மலர் - 20

யூலை- 2020

இலங்கை கிறிஸ்தவ இறையியல் கல்லூரி
மருதனார்மடம் - சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் களஞ்சியம்

## காலாண்டு சிறப்பு வெளியீடு

# IRAI – IYAL KALANJIAM

## TAMIL THEOLOGICAL JOURNAL

மலர் 20. ஆனி - 2020 இதழ் 63

இலங்கை கிறிஸ்தவ இறையியல் கல்லூரி

மருதனார் மடம் - சுன்னாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர் | : | அருட்பணி A. கமலகுமாரன் |
| துணையாசிரியர் | : | அருட்பணி M.D. போல்சுரேஸ் |
| ஆசிரியர் குழு | : | அருட்பணி A. கமலகுமாரன் |
| | | அருட்பணி J. தேவருட்செல்வம் |
| மாணவர் குழு | : | சகோ. T. சுயந்தன் |
| | | சகோதரி S. சுதாசினி |
| | | சகோதரி P. கலாவதி |
| நிர்வாகி | : | அருட்பணி A. கமலகுமாரன் |
| அச்சுப்பதிப்பு | : | துர்க்கா பிறிண்டேர்ஸ். |
| | | மல்லாகம். |
| வெளியீடு | : | இலங்கை கிறிஸ்தவ இறையியல் கல்லூரி |
| | | மருதனார்மடம் - சுன்னாகம். |
| | | (தனிப்பட விநியோகத்துக்கு மட்டும்) |
| Publication | : | Christian Theological Seminary of Sri Lanka |
| | | Maruthanarmadam – Chunnakam. |
| | | (For Private Circulation Only) |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஆசிரியர் பார்வையில்....

2. "பின்-கொரோனா வைரஸ் (கோவிட் - 19) காலம்" நோக்கிய ஒரு தேடல்

அருட்பணி S.D.P.செல்வன்

3. கிறிஸ்தவ தெரிவும் பாராளுமன்றத் தேர்தலும் (2020)

அருட்பணி: J.தேவருட்செல்வம்

4. இயற்கை அனர்த்தங்களும் சமய அடிப்படை வாதமும் ஓர் திருமறை ஆய்வு

அருட்பணி. அருளம்பலம் ஸ்டீபன்

5. அறிவு சார்ந்து தெரிவு செய்யப் போகின்றோமா? அனுதாப வாக்குகளை அள்ளிக் கொடுக்கப் போகின்றோமா?

அருட்பணி: D.S.மதியாபரணம்

6. உண்மையுள்ள அரசியல் வாதி யார்?

அருட்பணி : அருளம்பலம் ஸ்டீபன்

7. தேர்தல் – ஒரு பொறுப்பு சார் போக்கு பற்றிய நோக்கு

அருட்பணி S.D.P.செல்வன்

8. கொரோனா வைரஸ் : கிறிஸ்தவ தன்னிலை மாற்றம்

அருட்பணி : ராஜன் றோகான்

(எழுத்தாளர்களின் கருத்துக்கள் அவரவரையே சாரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பின் வாசகர்களே!

இம்முறை வெளிவருகின்ற இறையியல் களஞ்சியமானது விஷேட தலைப்புகளைத் தாங்கி வருகின்றது என்பதை அறிந்து கொள்ளும் அதே நேரத்தில், 2020ம் ஆண்டில் இலங்கை நாட்டை பெரிதும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய கொரோனா வைரஸ் என்னும் நோயின் தாக்கத்தில் இருந்தும், சமகாலத்திலே பேசும் பொருளாக இருக்கும் 2020ம் ஆண்டின் பாராளுமன்ற தேர்தல் செயற்பாடுகளினையும் கிறிஸ்தவர்களாக எவ்வாறு புரிந்து கொள்ளப் போகின்றோம் என்பதனை பற்றிய இறையியல் சார்ந்த கட்டுரைகள் உள்ளடங்கியிருப்பது வரவேற்கத்தக்கது.

கிறிஸ்தவர்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற கொரோனா வைரஸ்சினுடைய பரவுதலை எதிர்கொள்ளுகின்றோம். இதன் பின்னணியில் இருக்கின்ற பிரச்சனைகளை எவ்வாறு அணுகுகின்றோம். அத்தோடு தேர்தலில் கிறிஸ்தவர்களாக எங்களுடைய பங்களிப்பு என்ன? அதே நேரத்தில் ஏன் தேர்தலிலே பங்கெடுக்க வேண்டும், போன்ற பல்வேறு விதமான சிந்தனையாக்கங்கள் கொண்ட யதார்த்த சூழ்நிலைகளை அணுகுகின்ற மனிதர்களாகவும், ஆண்டவர் இயேசுவின் அடியவர்களாக, சீடர்களாக வாழும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டியதும், புரிந்து கொள்ள வேண்டியதுமான பல்வேறு விடயங்களை இந்த சிறப்பு இதழினூடாக பெற்றுக் கொள்ள முடியும்.

எனவே இக்கட்டுரைகளினை வாசித்து எதிர்கால நகர்வுகள், வாழ்வின் பயணங்கள் போன்றவற்றை சிந்திக்கவும், செயல்படுத்தவும் உங்கள் எல்லோரையும் அன்போடு அழைக்கின்றோம்.

**பதிப்பாசிரியர**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "பின்-கொரோனா வைரஸ் (கோவிட் - 19) காலம்" நோக்கிய ஒரு தேடல்

**அருட்பணி S.D.P.செல்வன்**

**அறிமுகம்:**

பின்-நவீனத்துவ காலம், பின்-முள்ளிவாய்க்கால் காலம்... போல பின்-கொரோனா வைரஸ் காலத்தை நோக்குவது தவிர்க்க முடியாததாகி விட்டது. இது தொடர்பான இறையியலாக்கம் சார்ந்த கருத்துருவாக்கத்துக்கான தேடலை, இன்றைய, கொரோனா வைரஸ் காலத்திலேயே நோக்குவது பொருத்தம். இறையியலாக்கம் என்பது இறையைப் பற்றிய வெறும் கற்றல் அல்ல மாறாக இது இறை – மனித பயணம். எனவே திறந்த மனதுடன் மனுக்குல வரலாற்றை மறக்காமல், கொரேனா வைரஸ் மூலம் ஏற்பட்ட (தொடர்ந்தேட்சையாக ஏற்பட்டு வரும்) யதார்த்த அனுபவங்களை முன்வைத்து, இறையுடனான மனுக்குல பயணத்தில் ஈடுபடுவதும், தொடர் விழிப்புணர்வுறலுக்குள்ளாவதும் அவசியம்..

தீமைகளை எப்படி எதிர்கொள்வது? அதிர்ச்சிக்குள்ளாக்கும் தீமைகளில் ஒன்றான கொரோனா தொற்றை எப்படி நோக்குவது. அச்சப்படல், அச்சத்தில் உறைந்துபோதல், அச்சத்தால் விலகியோடல் போன்றவற்றை கடந்து "எதிர்கொள்ளல்" எனும் போக்குநிலைவழி வாழ முயற்சிப்பது இன்றைய காலத்தின் தேவை. தொற்றுநோய்ப் பரவல் ஆபத்தானது தான். அதற்காக ஆபத்தை நினைத்து நினைத்து மனம்நொந்து அச்சமுற்று இயல்பை இழப்பது ஆரோக்கியமல்ல. "நல்லதை நோக்கி நகர்வதும் தீயதை விட்டு அகல்வதும்" மனித இயல்பு.[1] இதனால் கொரோனா வைரஸ் தொற்று ஏற்படாமலிருக்க செயற்படுவது அனைவரதும் மனிதம் சார் இயல்பான பொறுப்பு. இதனை சமூக உணர்வுடன் அனைவரும் அவரவருக்குரிய இயலுமையின்படி மேற்கொள்ள வேண்டும்.

"உங்களால் பறக்க முடியாவிட்டால் ஓடுங்கள், ஓடமுடியாவிட்டால் நடவுங்கள், நடக்கவும் முடியாவிட்டால் தவழுங்கள். இலக்குகளை நோக்கி சென்றுகொண்டிருக்கிறீர்கள் என்பதே முக்கியமானது" எனும் மாட்டின் லூதர் கிங் அவர்களின் அழைப்பும்,"அச்சமில்லை அச்சமில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சமென்பதில்லையே" எனும் பாரதியாரின் துணிவூட்டலும் கொரோனா வைரஸ் உட்பட தீமைகளை எதிர்கொள்ள அனைவருக்கும் வலுவூட்டட்டும்.

## இறையாட்சி மைய கருத்துருவாக்கப்போக்கு
## (Reflection based on the vision of God's Reign)

மிகமிக பாதிப்புக்குள்ளாக்கப்பட்டோருடைய இருப்பை முக்கியத்துவப்படுத்தும் இறையாட்சி மையம் சார்ந்த போக்கு இறையியலாக்கத்தின் போக்காக அமைவது மிகவும் பொருத்தமானது.

> இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது. மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள் (மாற்கு 1:15,16)
>
> எதை உண்போம்? ஏதைக் குடிப்போம்? ஏதை அணிவோம்? எனக்கவலை கொள்ளாதீர்கள். (மத்தேயு 6:32)
>
> அனைத்துக்கும் மேலாக அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள் (மத்தேயு 6:33)
>
> உமது ஆட்சி வருக[2] (லூக்கா 11:2)

உயிரியாகிய கடவுளின் (யோவான்1:14) கருத்துருவாக்கம் ஆரோக்கியமானது. இவர் மானிடர்களில் ஒருவராக மனுவுருவானார். இறைமகன், தாவீதின் மகன், மரியாவின் மகன் என பலரும் இயேசு கிறிஸ்துவை அழைத்தபோதும் மானிடமகன் என இவர் தன்னை அழைத்துக்கொண்டார். இறையாட்சியை பறைசாற்றிய இவர் மிகமிக அதிகமாக பாதிப்புக்குள்ளாக்கப்பட்டோருடன் அவரை அடையாளப்படுத்தினார். அரசியல் சமூக பொருளாதார சமய கலாசார... கட்டமைப்புகள் ஊடாக அதிகமாக கைவிடப்பட்ட யதார்த்தத்துக்குள் தள்ளிவிடப்பட்டிருந்த கலிலேயாவில் குடியிருந்தவர்களுடன் தன்னை அடையாளப்படுத்திய இயேசு, கைவிடப்பட்டிருந்த அனைவரோடும் தன்னை அடையாப்படுத்த முயற்சித்தார். இதனால் இயேசுவின் கருத்துருவாக்கப்போக்கு இறையாட்சி மையமானது. இந்த இறையாட்சி மைய தூரநோக்கு யதார்த்தமாக மிகுந்த அதியுச்ச பாதிப்புக்குள்ளாக்கப்பட்டோருடன் தன்னை இணைத்துக்கொண்டார். எனவே இறையாட்சி மைய, அதிபாதிப்புக்குள்ளாக்கப்பட்டோர் குவிய இறையியலாக்கத்தில் ஈடுபடுவது பொருத்தம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இறையியலாக்கத்துக்கான முறையியல்:**

(Reality), யதார்த்தம்

(God), கடவுள்




பற்றுறுதிச்சமூகம் (Faith Community) என்பவற்றுக்கிடையேயான தொடர்ந்தேட்சையான சந்திப்பின் மூலம் பிறப்பதே இறையியல். கொரோனா வைரஸ் பாதிப்பு உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள இன்றைய சூழ்நிலையில் யதார்த்தம் தழுவிய இறையியலாக்கத்தை நோக்குவோம்.

**யதார்த்தம் Reality:**

உலகளாவிய ரீதியில் அனைவரும் வீடுகளுக்குள் முடக்கப்பட்டுள்ளனர். கொரோனா வைரஸ் (கோவிட் 19) கிருமி முழு உலகையும் அச்சுறுத்தியுள்ளது. இனம், மொழி, மதம், கல்வித்தரம், சமூக தராதரம், சொத்துக்கையிருப்பு, நிறம், பால், கட்சி, கருத்தியல், பதவி அங்கீகாரம், ஆதிக்கப்போக்கு...போன்ற மனிதரால் உருவாக்கப்பட்ட எல்லாவிதமான அடையாள முத்திரைகளையும் கடந்து சாவு ஆட்சி செய்கிறது. அணுக்குண்டுகளால் உலகை அழிக்கும் வலுவுள்ள நாடுகளும் இயலாமையை புரிந்துகொள்ள வேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டு விட்டன. எனினும் இந்த இயலாமை நிலையை எதிர்கொள்ளும் விதம் வேறுபட்டுத்தான் காணப்படுகின்றது. ஊரடங்குச்சட்டம் அமுலில் இருப்பினும் சிலர் அன்றாட தேவைகளை நிறைவு செய்வதில் எந்த பிரச்சினையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்கொள்ளவில்லை. இலங்கையில் மீன்பிடி, விவசாயம் செய்வோர் அவர்களுடைய முயற்சிகளில் ஈடுபடலாம் என அனுமதிக்கப்பட்டிருப்பினும் கையிருப்பில் பணம் இல்லாமை (ஏழைகள்) பல்வேறுபட்ட சிக்கல்களை எதிர்கொள்ளச் செய்துள்ளது.

விசேடதேவைக்குரியோரது நிலைமை மிகவும் வேதனைக்குரியது. இன்னொருவருடைய உதவியின்றி எல்லாவற்றையும் செய்ய முடியாத நியைிலுள்ள விசேட தேவைக்குரியோர் அவர்களது இயலாமையை எண்ணி வேதனையடைவதையும் காணமுடிகிறது. இந்த உடல் உள பாதிப்புகளை மேற்கொள்ள அவரவர்களுடைய குடும்பத்தவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் பாராட்டுக்குரியது.

அத்தியவசிய சேவைகளை உறுதிசெய்யும் நடவடிக்கைகள் உலகின் பல நாடுகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மருத்துவ வசதிகள், உணவு... போன்றவை சவால்களுக்கு மத்தியல் மக்களை அடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் சில குறைபாடுகள் தவிர்க்கமுடியாதவையாக உள்ளன.

தொற்று ஏற்படுமாயின் சாவு ஏற்பட்டு விடும் எனும் உண்மை தவிர்க்க முடியாததாக இருப்பினும் சாவை எதிர்த்து முறையாக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் நம்பிக்கையை தந்துள்ளன. சீனாவில் தொடங்கிய கொரோனா வைரஸ் தொற்று, இத்தாலியை பாரியளவில் பாதித்தது. ஸ்பெயின் நாடும் பெரும் பாதிப்பை சந்தித்தது. ஈரான், பிரான்ஸ், அமெரிக்கா என பல நாடுகளிலும் இது மிகத் தீவிரமாகப் பரவ சாவுகள் அதிகரித்து வருகின்றன. இருப்பினும் ஆரோக்கியமாகிவருவோரது எண்ணிக்கையும் குறிப்பிடத்தக்கதே. ஒப்பீட்டளவில் நிச்சயமற்ற நிலைமை உலகளாவிய ரீதியில்தொடர்ந்து அகதிகரித்து வருகிறது. இவற்றுக்கு மத்தியில் நம்பிக்கையுடன் கொரோனா தொற்றை தவிர்க்க முயற்சிகளை பொறுப்போடு முன்னெடுப்பதும் அதிகரித்து வருகின்றமை நம்பிக்கையை வளர்க்கிறது.

பின்வரும் புள்ளிவிபரங்கள் உலகளாவிய மற்றும் இலங்கையின் யதார்த்தநிலையை முன்வைக்கின்றன:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புள்ளிவிபரம்: 02.04.2020 17.58 GMT**

| நிலை | உலகு | | இலங்கை | |
|---|---|---|---|---|
| | தொகை | வீதம் | தொகை | வீதம் |
| ஆரோக்கியமானோர் | 210,191 | 80% | 21 | |
| நோய்த்தொற்றுக்குள்ளானோர் - கடுமையாகாத நிலையிலுள்ளோர் | 701, 193 | 95% | 126 | |
| நோய்த்தொற்றுக்குள்ளானோர் - ஆபத்தான நிலையிலுள்ளோர் | 37,003 | 5% | 5 | |
| மொத்தம் | 999,701 | | 151 | |
| இறந்தோர் | 51,314 | 20% | 4 | 0.2% |

கொரோனா வைரஸ் தொற்றினை அடிப்படைவாதப் போக்கில் நோக்குவது அர்த்தமற்றது, ஆபத்தானது. கடந்த ஆண்டு இயேசு கிறிஸ்துவின் உயிர்த்த நாளன்று நடைபெற்ற குண்டுவெடிப்புகள் முஸ்லீம்களால் இனத்தவரால் மேற்கொள்ளப்பட்டதால் முஸ்லீம்களை சந்தேகத்துடன் நோக்கியது போல, யாழ்ப்பாணம் அரியாலை பிலடெல்பியா ஆலய வழிபாட்டுக்கு வந்திருந்த சுவிட்சர்லாந்து பாஸ்டருக்கு கொரோனா வைரஸ் தொற்று என்பதால், கிறிஸ்தவர்கள் முக்கியமாக ஆவிக்குரிய சபைகள் என அழைக்கப்படுவோர் சந்தேகத்துடன் சிலரால் நோக்கப்படுகின்றனர்.[3] பேருவலை மற்றும் புத்தளம் எனும் இடங்களில் முஸ்லீம்களுக்கு ஏற்பட்ட கொரோனா தொற்றை மனதில் வைத்து ஒரு கிறிஸ்தவர்,"கொரோனாவை பரப்பும் முஸ்லீம்களுக்காக மன்றாடுங்கள்" என்றார். பற்றுறுதியுடன் (விசுவாசத்துடன்) இருப்போரை கொரோனா அணுகாது என இன்னொரு கிறிஸ்தவர் குறிப்பிட்டார். இவை பிறரை எப்படி நோக்குகிறோம்? கடவுளை எப்படி புரிந்துள்ளோம்? எம்மை எப்படி கணிக்கிறோம்? என்பவற்றுடன் தொடர்புடையது. அடிப்படைவாதம் ஒரு கொல்லும் தொற்றும் கொரோனா வைரஸ் என குறிப்பிடுவது மிகவும் பொருத்தமே.

கொரோனா வைரஸினால் ஏற்பட்ட அச்சுறுத்தலைப் போன்ற மோசமான இன்னொரு அச்சுறுத்தல் வடக்கில் நீதித்துறைக்கு ஏற்பட்டது. மிருசுவில்லில் எட்டு பொதுமக்களை கொலை செய்தமைக்காக, திரு. சுனில் ரத்நாயக்க எனும் இராணுவ சிப்பாய் குற்றவாளி என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது. இவரது மேன்முறையீட்டை உச்ச நீதிமன்றமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்நீதி மன்றமும் தள்ளுபடி செய்திருந்தது. இலங்கை ஜனாதிபதி இவருக்கு மன்னிப்பு வழங்கி நீதிமன்ற தீர்ப்பு நடைமுறைப்படுத்தப்படுவதை நிறுத்தினார். மார்ச் 26இல் சர்வதேச மன்னிப்புச்சபை இதனை கண்டித்தது. சர்வதேச குற்றவியல் மன்றே தமிழர்களுக்காக நீதியை உறுதி செய்யவேண்டும் என தமிழ் சிவில் சமூக அமையம் அவர்களது கண்டன அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர். கொரோனா வைரஸ் தொற்றினை நீக்க பல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் அரசு ஏன் ஜனநாயக சட்டம் சார் வழிமுறைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பதும் முக்கியமான இன்னொரு விடயம். கொரோனா வைரஸ்சுக்கு எதிரான யுத்த வெற்றி மையமான தேர்தல் வெற்றி நோக்கி ராஜபக்ச அரசு முன்னேறுகிறது என ஒரு அரசியல் ஆய்வாளர் இதனை குறிப்பிட்டிருந்தார்.

**கடவுள் God:**

கடவுளை, கொரோனா வைரஸ் தொற்று ஆபத்து சூழ்நிலையில் எப்படி நோக்குகிறோம்? எமது யதார்த்தத்தில் எத்தகைய கருத்துகள் உள்ளன. கொரோனா பற்றி பைபிளில் குறிப்பிடப்பட்டுள்ளது, வெளிப்படுத்தல் புத்தகம் கூறுவது இதைப்பற்றித்தான், கடவுள் தான் கொரோனா வைரஸ் தொற்றுநோயை அனுப்பியுள்ளார், இது கடவுளின் திட்டம், கடவுள் சோதிக்கிறார், நம்பிக்கை அற்றவர்களுக்குத் தான் கொரோனா தொற்று ஏற்படும், இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு இது அடையாளம், உலக முடிவு நெருங்கிவிட்டது, ஏனைய மதத்தவர் கிறிஸ்துவை அறிய இது ஒரு சந்தர்ப்பம்... என பல கருத்துகள் தற்போது கடவுளைப் பற்றி முன்வைக்கப்படுகின்றன. திகில் உன்னை அணுகுவதில்லை (ஏசாயா 54:14), ஆண்டவர் உன்னை உள்ளங்கைகளில் வரைந்திருக்கிறார், கலங்காதே நீ மறக்கப்படுவதில்லை (ஏசாயா 44:21), கர்த்தர் சகல நோய்களையும் உன்னை விட்டு விலக்குவார் (இணைச்சட்டம் 7: 15), கர்த்தர் நம்மை நிச்சயமாய் தப்புவிப்பார் (2 அரசர் 18:30) போன்ற வசனங்களை மேற்கோள்காட்டி கிறிஸ்தவரை மட்டும் பாதுகாக்கும் கடவுளை சிலர் முன்வைக்க முனைகின்றனர். "சிங்கத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரைக்காக மட்டுமே மான்கள் படைக்கப்பட்டிருந்தால் அதற்கு வேகமாக ஓடும் கால்களை படைத்திருக்க மாட்டான். அது போல்தான் பிரச்சினைகளை கொடுக்கும் இறைவன் சமாளிக்கும் திறனையும் கொடுக்கிறான், துணிந்து செல்...” எனக் குறிப்பிட்ட ஒருவர் கடவுளே கொரோனாவை அனுப்பினார் அது கடவுள் நம்பிக்கை உள்ளவர்களை மட்டும் அழிக்காது என கூற முயற்சித்தார். ஆண் - ஆண், பெண் - பெண் திருமணங்கள் கடவுளுக்கு பிடிக்கவில்லை, இதனால்த்தான் கடவுள் கொரோனாவை அனுப்பியுள்ளார் என்றார் இன்னொருவர். மேற்குறிப்பிடப்பட்ட கிறிஸ்தவ அடிப்படைவாத கருத்துக்கள் முக்கியமாக பைபிளை கடவுளாக வணங்குவோர் மலிந்த இன்றைய யதார்த்தத்தில் கடவுள் யாரையும் அழிப்பவரல்ல அவர் நல்லவர் அவர் எங்களில் அன்பு செய்பவர் என்றார்

## பற்றுறுதிச் சமூகம் Faith Community:

இறையாட்சியின் பண்புகளுடன் கிறிஸ்து இயேசுவின் மனுவுருவாதல் மைய வாழ்வை வாழ முயற்சிக்கும் இன்றைய இயேசு சமூகங்களின் வாழ்க்கை முறை மற்றும் செயற்பாடுகளை இங்கு குறிப்பிடலாம்.

“கொரோனா தொற்றுநோய் கடவுள் தந்த சாபம், எல்லாரும் கிறிஸ்தவர்களாக மதம் மாறிவிட்டால் உடனே இந்நோய் மறையும்” எனும் கருத்தரது பகிர்வுகளை செய்வோர் கடவுளின் சமூகங்களல்ல மாறாக கள்ளச்சந்தைகள்.

“ஒருவருக்கும் மற்றவருக்கும் இடையே குறிப்பிட்ட தூரத்தைப் பேணி நோய்த்தொற்றை விலக்குங்கள்” என்பது நன்கு தெரிந்த கிறிஸ்தவர்கள், ஞாயிற்றுக்கிழமை வந்ததும் வழிபடவேண்டும் அல்லது வழிபாட்டை நடத்தி காட்டவேண்டும் என நெருக்கமாக நின்று வழிபடுவது ஒருபோதும் அர்த்தம் தராது குழப்பத்தையும் துயரத்தையுமே தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொரோனா வைரஸ் கோவிட் 19 – புரிதலுக்கான ஒரு தேடல்:**

வத்திக்கான் வானொலி கொரோனாவுடன் தொடர்புபடுத்தி இந்த ஆண்டு பெரியவெள்ளிக்காக பின்வரும் மன்றாட்டை முன்வைத்துள்ளது:

கோவிட் 19 - புனித வெள்ளியன்று சிறப்பு மன்றாட்டு

"என்றென்றும் வாழும் எல்லாம் வல்ல இறைவா, எங்கள் நெருக்கடிகளிலும், ஆபத்துக்களிலும் எங்கள் தஞ்சமாய் இருப்பவரே, நம்பிக்கையுடன் உம்மிடம் வேண்டுகிறோம், நோயினால் தாக்கப்பட்டோரை கருணையுடன் நோக்குவீராக, இறந்தோருக்கு முடிவில்லா அமைதி வழங்குவீராக, அழுது புலம்புவோருக்கு ஆறுதலும், நோயுற்றோருக்கு நலமும், இறக்கும் நிலையில் இருப்போருக்கு அமைதியும், நலப்பணியாளர்களுக்கு சக்தியும், எங்கள் தலைவர்களுக்கு ஞானமும், அனைவருக்கும் அன்புடன் உதவி செய்யும் துணிவும் வழங்கியருளும். இவற்றின் விளைவாக, நாங்கள் உமது புனித பெயருக்கு மகிமை தருவோமாக."[4]

இந்த மன்றாட்டு, எம்மோடு, எங்கள் துன்பங்களோடு ஒன்றுபடும் கடவுளை முன்வைக்கின்றது. இம்மானுவேல்[5], கடவுள் நம்மோடு என்பது எமது சூழ்நிலையில் கடவுளை புரிய உதவுகிறது. இரண்டு வயதுக்குட்பட்ட ஆண் குழந்தைகள் கொல்லப்பட்டபோது, மத்தேயு நற்செய்தி முன்வைக்கும் கருத்துருவாக்கம், அனைத்தையும் இழந்து உயிரை காக்க ஓடிய அகதி திருக்குடும்பத்தை – அகதியாக்கப்பட்ட கடவுளை முன்வைத்தது என்பதை நாம் மீட்டுப்பார்க்கலாம்.

"ஆண்டவரே, இந்த தொற்றுநோயை நிறுத்தும்" என்பதே திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் மன்றாட்டின் சாரம். பிறருடன் நல்லுறவு பேணுவதை வலியுறுத்தும் திருத்தந்தை நோய்த்தொற்றுக்குள்ளானவர்கள், அவர்களை பராமரிப்போர், அவர்களுக்கு மருத்துவப்பணிகளை மேற்கொள்வோர், உறவுகளை இழந்தோர்... போன்றோரோடு ஒரு நெருக்கத்தை பேண வேண்டும் என்று கூறியுள்ளார். [6]நபர்களுக்கு இடையே பேணவேண்டிய தூரத்தை கடந்து திருத்தந்தை முன்வைக்கும் நெருக்கத்தை புரிந்துகொள்வது அவசியம். கடவுள் நம்மோடு என்பதை கடந்து "நாம் அடுத்தவரோடு" என்பது இங்கு முக்கியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விண்ணுலகிலிருக்கிற எங்கள் தந்தையே... உமது ஆட்சி வருக..." எனும் இயேசு சமூக மன்றாட்டை இணைந்து ஏறெடுக்க உலக கிறிஸ்தவர்கள் அனைவரையும் திருத்தந்தை அழைத்திருந்தார்.[7] தொற்று நோயை இணைந்து எதிர்க்க இயேசு கற்பித்த மன்றாட்டு இன்றும் அர்த்தம் தருகிறது.

கொரோனா வைரஸ்சினால் ஏற்பட்ட நெருக்கடிநிலையில் திருச்சபையானது நம்பிக்கையையும் ஆறுதலையும் தருகிறது என்றார் கன்டபரிஅதிபேராயர் உயர் அருட்பணி ஜஸ்டின் வெல்பி அவர்கள். தேவையிலுள்ளவர்களுக்கு உதவுவதை வலியுறுத்திய அதிபேராயர் அவர்கள் நோயத்தொற்றுக்குள்ளானோருக்கு உதவுவோருக்கு நன்றி தெரிவித்தார். இயலாமைநிலையில் உள்ளவர்களுக்கு உதவுவதை அவர் தொடர்ந்து வலியுறுத்தினார். நபர்களுக்கு இடையே தூரத்தை பேணும் அதே நேரம், இயலாமையில் உள்ள அவர்களுக்கு உணவுப்பொதி ஒன்று கிடைக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதை வலியுறுத்தினார். "கொரோனா வைரஸ் கடவுளிடமிருந்து வந்த தீர்ப்பா?" எனும் தலைப்பில் அருளுரையாற்றிய பாஸ்டர் றொபேட் ஜெ.்.ப்ரஸ் அவர்கள் கொரோனா வைரஸ் தொற்று, திருவெளிப்பாடு கூறும் ஒரு வாதையல்ல என்றார்.[8] அனைத்து இயற்கை பேரழிவுகளும் பாவத்தை சுட்டுகின்றன என தொடர்ந்து குறிப்பிட்டார்.சுவிசேசகர் ரிக் வைல்ஸ் அவர்கள், கொரோனா வைரஸை ஒரு "மரண தேவதை" என்று அழைத்தார், இது பாவத்திற்கு பதிலடியாக அனுப்பப்பட்டது[9] - "கடவுள் இந்த கிரகத்தில் இருந்து நிறைய பாவங்களை அகற்றப் போகிறார்," என்று அவர் எச்சரிக்கை செய்தார். திருவெளிபாடு நூலை எதிர்காலத்தில் நடைபெறவுள்ளவற்றை கூறும் சாத்திரப்புத்தகமாக நோக்குவது இறையாட்சி விழுமியங்கள் சார்ந்ததா? பாவங்களுக்காக தண்டிக்கும் ஒருவராக கடவுளை நோக்குவது எவ்வளவு தூரம் பொருத்தமானது?

கடவுள் புரிந்துகொள்ள முடியாத ஒரு மறைபொருள். இயற்கையை, உலகை, அகிலத்தை (காற்று-நெருப்பு, பூமி-நீர்...) படைத்தவர் கடவுளே. அவரை முழுமையாக புரிந்துகொள்ள முடியாது. ஆனால் அவர் அழிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொரோனா வைரஸ் தொற்று நோயை அகற்றும் வல்லமையுடையவர். அனைவரையும் மீட்கும் கடவுள் அவர் என்பது சிலரது சிந்தனைப்போக்கு. கொரோனா தொற்றின் தோற்றம் என்ன? மருத்துவர்களின் கருத்துப்பகிர்வின்படி கொரோனா வைரஸ் தொற்று நோய் விலங்கிலிருந்து மனிதருக்கு ஏற்பட்டது. கடந்த நூற்றாண்டில் பிளேக்நோய், 5 கோடி மக்களை அழித்த ஸ்பானிஷ் ஃப்ளு (1928) என்பவை அழிவுகளை தந்துள்ள என்பது வரலாறு. தற்போது 31.12.2019 அன்று, சீனாவில் ஹுபேய் பிராந்தியத்தின் வுஹான் நகரதில் இருந்து அறிக்கையான, புதிய கொரோனா வைரஸ்நோய் இன்று உலகம் முழுவதும் பரவி வருகிறது. கோவிட்-19 எனப்படும் கொரோனா வைரஸ் பாதிப்பு சீனாவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் உலகளாவிய ரீதியில் பல நாடுகள் இந்தப்பாதிப்பினால் ஆபத்தான சூழ்நிலையிலுள்ளன.

இயற்கை சமநிலை பேணப்படுவது அகில இருப்புக்கு முக்கியம். சமநிலை சீர்குலையும் போது ஏற்படும் விளைவுகள் அழிவை தருகின்றன. இன்று உலகில் வாழும் மனிதர்களாலும் இதற்கு முன்பு வாழ்ந்தவர்களாலும் பல தீமைகள் முன்னெடுக்கப்பட்டன. அவை அகிலத்தின் இருப்பை கேள்விக்குள்ளாக்கின, சமநிலையை சிதைத்தன. இதனால் பல தீமைகள் அன்றாடம் வெளிப்பட்டுக்கொண்டு வருகின்றன. அவற்றுள் ஒன்றே கொரோனா வைரஸ் தொற்று நோய்.

தொற்று நோய்கள் ஆய்வு வளர்ச்சியடைந்துவரும் துணைத் துறை. இவை பற்றிய முன்னறிவிப்புகள், கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முக்கியமானவை. இதற்கு சர்வதேச ஒத்துழைப்பு உலகளாவிய சுகாதார நிகழ்ச்சி நிரலில் நீண்ட காலமாக இருந்து வருகின்றது. எனினும் இவற்றின் மீதுள்ள மேற்கு நாடுகளின் அதிஉச்ச ஆதிக்கம் பலவீமானது என்பது தற்போது அம்பலமாகியுள்ளது. உலக சுகாதார உறுதிப்பாட்டை நாடுகள் இணைந்து மேற்கொள்வது முக்கியம். சந்தை மையம், இலாபகுவிப்பு, அனுவாயுத ஈடுபாடு... என பலவிடயங்களும் கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டும். சுற்றுச்சூழல் அதிக கரிசனையுடன் முக்கியமாக கூட்டு கரிசனையுடன் கையாளப்பட வேண்டும். அப்பொழுது தான் இயற்கை சமநிலை பேணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவியல் - தத்துவயியல் - ஆன்மீகவியல் - இறையியல் உடான "சிந்தனை - ஈடுபாட்டு போக்கு — ஓர் தேடல்: எது பொருத்தம்?

எத்தகைய கருத்துருவாக்கம் அனைவருக்கும் ஆரோக்கியமானது? எத்தகைய சிந்தனையாக்கம் எல்லாருக்கும் அர்த்தம் தரும்? இறையாட்சியின் பண்புகளின் அடிப்படையில் அதீத பாதிப்புக்குள்ளானோருடன் கிறிஸ்து இயேசு வைத்திருந்த தோழமையின் போக்கின்படி உருவாகும் அறவியல், தத்துவயியல், ஆன்மீகவியல், இறையியல் ஈடுபாட்டு வாழ்வுக்கு முக்கியமானது.

**கேள்விக்குள்ளாக்குதல்:**

கடவுள், திருவிவிலியம், மனிதவாழ்வு, உலகம், சமயம்... பற்றி நிலவும் கருத்துகள் எவ்வளவு தூரம் இன்றைய கொரோனா தொற்றுநோய் காலத்துக்கு பொருத்தம்? இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ள மற்றும் பாதிப்பு ஏற்படக்கூடாது என முற்காப்புடன் உள்ளவர்களுக்கு நிலவும் கருத்துகள் எப்படிப்பட்ட அர்த்தத்தை தருகிறது?

கேள்விக்குள்ளாக்குதல் நீண்ட வரலாறு கொண்டது. புத்தர், மகாவீரர், இயேசு கிறிஸ்து, முகம்மது நபி, சோக்கிரட்டீஸ்... என்போர் யதார்த்தத்தின் ஒளியில் அவர்களது காலத்தில் நிலவிய கருத்துகள், கட்டமைப்புகளை கேள்விக்குள்ளாக்கினர். கேள்விக்குள்ளாக்குதல், சவால்கள் மத்தியிலும், ஆரோக்கியமான கருத்துருவாக்கங்களை வெளிக்கொணரும் ஈடுபாடுகள் தொடர வழிவகுத்தது.

கடவுள் யார்? தீமை செய்பவர்களை கைது செய்து விசாரனையேயின்றி தண்டனைகளை (நோய், வறுமை, துன்பம், சாவு...) வழங்குபவரா? பயமா கடவுளாக சித்தரிக்கப்படுகிறார்? திருவிவிலியம் கடவுளா? அல்லது குறிப்பிட்ட காலத்தில் நம்பிக்கையோடு வாழ்ந்த சமூகங்களின் அனுபவத்தொகுப்பா? மனிதவாழ்வின் நோக்கம் பிறப்பு – சாவு எனும் யதார்த்தம் சாராததா? இன்றைய யதார்த்தத்தில், அனைவராலும் புரிந்துகொள்ளக்கூடிய, அறமைய வாழ்வுக்கு கொடுக்கும் அழுத்தத்தை விட, பலருக்கும் புரியாத சாவுக்கு அப்பாற்பட்டவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(மோட்சம், நரகம்...) பற்றி கூறி பயமுறுத்துவது அர்த்தம் தருமா? அனைத்து உயிரிகளும் பேண்தகுநிலையுடன் தொடர்ந்து வாழ பொருத்தம்மிக்க நாம் வாழும் உலகம் ஏன் முக்கியத்துவப்படுத்தப்படுவதில்லை. உலக வாழ்வை கடந்து போகவேண்டும் என்பது ஏன் அதிகம் வலியுறுத்தப்படுகிறது? உலகம் பொறுப்பு மிகு கரிசனையுடன் நோக்கப்படாமல் மீட்கப்பட வேண்டியவர்கள் இருக்கும் இடமாக நோக்கப்படுவதும், உலகத்திலிருந்து மனுக்குலத்தை மட்டும் மீட்க உலகுக்கு வந்த தற்கொலை குண்டுதாரியாக (பாவப்பரிகாரம்) இயேசுவை புரிந்துகொள்வதும் அர்த்தம் தருமா? அகிலத்தை படைத்த தோட்டக்காரராக உருவகப்படும், தோழமையுணர்வு மிகுந்த (தொடக்கநூல் 2) கடவுளை முக்கியத்துவப்படுத்தாமலிருப்பது ஏன்? சமயங்கள் யதார்த்தமயமாக இருப்பதைவிட யதார்த்தம் கடந்ததாக (பௌதீக அதீதம்) கையாளப்படுவது ஏன்?

**யதார்த்தமயமான வாழ்வு சார் கருத்துருவாக்கம்:**

சாதாரணமான மனிதராக வந்த (மனுவுருவாதல்) கடவுள் ஒரு யதார்த்தவாதி. என் இறைவா, என் இறைவா ஏன் என்னை கைவிட்டீர்? என கடவுள் பற்றிய கருத்துருவாக்கத்தை கேள்விக்குள்ளாக்கினார். பலி மைய வழிபாட்டியலை விமர்சித்தார். மதத்தின் பெயரால் நடைபெற்ற ஏமாற்று நடவடிக்கைகளை, ஆதிக்கவாதத்தை, ஒடுக்குமுறைகளை கண்டித்தார். மனித மறுப்பு அடிப்படைவாதத்தோடு நோக்கி கோபப்பட்டார்.

யதார்த்தவாதியாக வாழ்ந்தால் கொலை செய்யப்பட்ட இயேசுவின் வாழ்வு யதார்த்தவாதிகளாக வாழ அழைப்பு விடுக்கிறது. இந்த அழைப்பு அங்கீகரிக்கப்பட்டால் சோதனைகள்,வேதனைகள், சாவு நிச்சயம் வரும். இயேசுவின் யதார்த்தவாதம், அன்று நிலவிய (இன்றும் நிலவும்) அனைத்து கருத்துருவாக்கங்களுக்கும் மாற்றாக இருந்தது. இதனை இறையாட்சி என பெயரிட்டார், பறைசாற்றினார். இதனை மையமாக வைத்து யதார்த்தவாதிகள் சமூகத்தை உருவாக்கினார். இதற்குள் சுயநலவாதம், மறுதலிப்புகள், காட்டிக்கொடுப்புகள் என்பன மலிந்திருந்தன. இயேசுவின் உயிர்ப்பு, அன்பு, சமத்துவம், நீதி, ஒற்றுமை... என ஆரோக்கியமான இறையாட்சி மைய மனித நேய விழுமியங்களுடன் பாரிய மாற்றங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வைத்தன. எனினும் அதிகாரப்போட்டி, ஆக்கிமிப்பு, சுயநல ஆசி போன்ற தீமைகளின் வழியில், இயேசுவை பின்பற்றுவோர் என தம்மை அடையாளப்படுத்துவோர், நிறுவனமாகிவிட்டனர். ஆனாலும் மிகச்சிறிய ஒரு சமூகம் (எஞ்சியோர்) இயேசு முன்வைத்த யதார்த்தவாதத்துடன் இன்றும் போராடிவருகிறது.

"துன்பம், சாவு" யதார்த்தம் உலகளாவிய ரீதியில் கொரோனா வைரஸ் தொற்றினால் தொடரும் சமகால யதார்த்தத்தில் எமது கருத்துருவாக்கங்களை யதார்த்தமயமாக்குவது அனைவருக்கும் மிகவும் பொருத்தம்.

**சாவு நித்திய உண்மை:**

"பொய்மைக்கும் புரட்டுக்கும் மௌனச்சாட்சிகளாய் இருப்பதை விட புதுமைக்கும் புரட்சிக்கும் இரத்தச்சாட்சிகளாய் மாறுங்கள்" என்றார் ஈ.வெ.ரா. பொய், புரட்டு, மௌனம்... என்பவற்றைக் கடந்து கொரோனா பற்றிய உண்மைகளை எப்படி அறிவது? கொரோனா வைரஸ்தொற்று எப்படி முழு உலகையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.? உலகை கைபேசிகளுக்குள் முடக்கிய மனுக்குலத்தை வீட்டுக்குள்ளே முடக்கியமை எப்படி சாத்தியமானது? புதிராகிப்போனது என்னவென்றால் மனுக்குல கண்டுபிடிப்புகள், அறிவு, கட்டமைப்புகள் என்பவற்றால் கையாள முடியாத நிலை யதார்த்தமே. பொய், புரட்டு, புதுமை, புரட்சி... என வரையறுக்கப்பட்ட முயற்சிகளை கடந்தும் வாழ்க்கையின் எல்லை உள்ளது., முக்கியமாக சாவின் எல்லை மனித எல்லைகளை கடந்துள்ளது. சாவு நித்திய உண்மை. அனைத்தும் சாவின் முன் மௌனமாகி விடுகின்றன.

தமிழ் பண்பாட்டு விழுமிய மையத்திலிருந்து நோக்கும்போது,"சுடலை ஞானம்" அதிகம் அர்த்தம் தரும் ஒன்று. இது வாழ்வு மையமானது. நாளைக்கு எனக்கும் சாவு உண்டு, சாவு தவிர்க்க முடியாத ஒன்று என்பதை உணரச் செய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வலுவுள்ளது மட்டுமே பிழைக்கும்:**

அனைத்துமே சாவின் முன் தோற்றுப் போனாலும், ஒப்பிட்டடிப்படையில், மாறிவரும் உலகில் வலுவுள்ளது மட்டுமே நின்றுபிடிக்கும். கொரோனா வைரஸின் (COVID 19) தாக்கத்துக்கு உள்ளானவர்களுக்கு வைத்திய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது இத்தாலியில் யாருக்கு முன்னுரிமை என்பது தீர்மானிக்கப்படவேண்டியதாக உள்ளது.

**வலுவுள்ளதாகினால் தப்பலாம்:**

வீட்டுக்குள் இருங்கள், கைகளை கழுவுங்கள்,... போன்றவை தப்புவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய வழிகள். இயல்பாக நோயெதிர்ப்பு சக்தி இருப்பின் அச்சமில்லை. நோயெதிர்ப்பு சக்தி குறைவான வயோதிபர் மற்றும் நோயாளிகள் தப்ப வலுவுள்ளதாக வேண்டும். இங்கு பணம், பலம்... போன்றவை செல்வாக்குச் செலுத்துகின்றன.

மேற்குறிப்பிட்ட மூன்றும் அறவியல், ஆன்மீகவியல், இறையியல் அனைத்திலும் உள்ளன. சாவு தவிர்க்க முடியாதது. எனினும் வலுவுள்ளவர்களாக மனிதர்களை மாற்றி விட்டதால் ஒப்பீட்டடிப்படையில் தப்பி வாழலாம்.

யோவான் 9 ஆம் அதிகாரத்தில் இயேசு பிறவியிலேயே பார்வையற்ற ஒருவரைப்பற்றி முன்வைக்கப்பட்ட வினாக்களுக்கு எப்படி விடையளித்தார்: பார்வையற்றவராய் இவர் பிறக்கக் காரணம் இவர் செய்த பாவமா? அல்லது இவரது பெற்றோர் செய்த பாவமா? (9:2). .இவர் செய்த பாவமும் அல்ல, இவரது பெற்றோர் செய்த பாவமும் அல்ல, கடவுளின் செயல் இவர் வழியாக வெளிப்படும் பொருட்டே இப்படிப்பிறந்தார் (9:3) என்பது கிறிஸ்து இயேசுவின் பதில்.

அனைத்தையும் படைத்து, அவற்றை நல்லதாக கண்ட கடவுள் (தொடக்க நூல் 1ஆம் அதிகாரம்) ஏன் மனிதரை படைத்ததற்காக வருந்தினார் (தொடக்கநூல் 6:1 – 8)? உலகில் நடைபெறும் அனைத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்தமற்றதாவது எப்படி? திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படும் அதிசயிக்கத்தக்க மனித கண்டுபிடிப்புகள் அர்த்தமற்று நிற்பது ஏன்? மனித தீமைகளே அனைத்துக்கும் காரணம்.

கொரோனா... போன்றவற்றால் ஏற்படும் அழிவுகள் கடவுளின் திட்டம், கடவுளுடன் இருப்பவர்களை இந்த தொற்று தாக்காது...என கூறி கடவுளை ஒரு அழிப்பவராக காட்டுவது எவ்வளவு தூரம் யதார்த்தம் சார்ந்தது? கடவுள் எப்போதும் நன்மை நடைபெற செயற்படுபவரே. கடவுள் ஒரு சிலருக்கு மட்டும் உதவும் ஒரு பாரபட்சம் பார்ப்பவரல்ல. கடவுள் தரும் மழை வெய்யில் அனைவருக்கும். கடவுள், உலகை அழித்து, அவரது வருகையை உலகினருக்கு அடையாளமாக்கியுள்ளார் என கூறுவது எவ்வளவு பொருத்தம்?

கொரோனா வைரஸ்... போன்றவை மையமான அழிவுகள் மர்மமாக்கப்படவேண்டிய கருத்துருவாக்கங்கள் அல்ல மாறாக மனித பொறுப்பை வலியுறுத்தும் காத்திரமான கருத்துருவாக்கங்களாக வேண்டும். சுற்றுச்சூழல் தொடர்பான அழிவை விட்டுவிட்டு இதனை நோக்க முடியாது. அபிவிருத்தி எனும் பெயரால் ஏற்படுத்தப்படும் சுற்றுச்சூழல் அழிப்புகள் ஏராளம். இந்த அழிவுகள் காரணமாக ஏற்படும் அழிவுகள் ஏராளம் ஏராளம். இவை இயற்கை சமநிலையை குலைக்கின்றன. இதனால் ஏற்படும் தாக்கங்களை விட்டுவிட்டு கொரோனா வைரஸ் தந்த அழிவை நோக்க முடியாது. என்ன நடந்தாலும் அதனை நல்லது நடக்க பொருத்தமானதாக்கி நோக்கப்படவேண்டும். (யோவான் 9:2).

**தொகுப்பு:**

இன்றைய யதார்த்த அழிவுகள் நாமும் எமது மூதாதையரும் செய்துள்ள தீமைகளின் விளைவுகள். இவற்றை மேற்கொள்ள ஒரு சிலர் மனம்மாறுவது மட்டும் போதாது. ஏற்படுத்தப்பட்ட சமநிலைக்குலைவு சரிவர உரிய மாற்றுக்களை தேடுவதும் இதயபூர்வமாக அவற்றில் ஈடுபடுவதும் முக்கியம்.

இறையாட்சியின் பண்புகளின் அடிப்படையில் அனைத்தையும் எதிர்கொண்டு நன்மைக்காக இதயபூர்வமாக இணைந்து உழைப்பதே (முடக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யதார்த்தநிலையில் ஏற்றெடுக்கப்படும் மன்றாட்டுகள்[10](முதல் சுகாதார ஒழுங்குகளை பொறுப்புடன் பேணியபடி மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் வரை) இன்றைய காலத்தின் தேவை. தனிப்பட்டவர்களாக மட்டுமல்ல சமூகமாக பொறுப்புடன் கொரோனா தொற்று பரவாமல் உழைப்பதுடன் இயற்கை சமநிலையை பேணும் உலகம் இதயங்களிலும் மூளைகளிலும் உருவாக வேண்டும். வேண்டும். அப்போதுதான் எதிர்கால உலகம் நம்பிக்கையுடன் வாழலாம்.

**மரணம் என்பது நித்திய உண்மை.**
**தொற்று என்பது சாத்திய உண்மை**
**எதிர்ப்பு சக்தியே இருப்பியல் உண்மை**
**மாற்று சக்தியே தோழமை உண்மை**

**பின்னிணைப்பு - 01**(ஏப்ரில் 29, 2020 இல் வெளியான *காணொலியின் எழுத்துவடிவம்*):

**“ஒரு பாஸ்டர்,“கொரோனா வைரஸ் கோவிட் 19 ஐ” யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வந்தார்.” இந்த விடயத்தை எப்படி நோக்குகிறோம்?**

**அறிமுகம்:**

“டொக்டர், எனக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுவிட்டது என்பதை யாருக்கும் சொல்ல வேண்டாம்.” கொரோனா வைரஸ் கோவிட் 19 தொற்றுக்குள்ளான ஒரு தாயார், அவரைப் பரிசோதித்த வைத்தியரிடம் அமைதியாக ஆனால் உறுதியாக விண்ணப்பித்தாராம். “ஏனம்மா? சொல்லக்கூடாது?, உங்களுக்கு ஒன்றும் மோசமாக நடந்துவிடாது, பயப்பட வேண்டாம். சுகம் வந்திடும்” என்றாராம் வைத்தியர். அதற்கு மறுமொழியாக அந்த தாயார்,“டொக்டர், சனம் எங்களை ஒதுக்கி வச்சிடும். ஆட்கள், எங்களை சேர்க்கமாட்டினம்.”

ஒதுக்கி வைப்பது தவறு. ஆனால் அதற்காக கொரோனா தொற்றுத் தடுப்பு சுகாதார ஒழுங்குமுறைகளை ஒதுக்கி வைப்பது பொருத்தமானதல்ல. பொறுப்பற்ற முறையில் தொற்றுத்தடுப்பு ஒழுங்குகளை பின்பற்றாமலிருப்பது சரியானதல்ல.

தெரிந்தவற்றைப் பற்றி தெளிவாக கதைப்பதை விட தெரியாதவற்றைப் பற்றி தேவையற்றவற்றை கதைப்பதன் மூலம் எமக்கு மத்தியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படும் ஆரோக்கியமான அமைதியை குலைப்பது யாருக்கும் எந்த நன்மையையும் தராது.

"கடவுள் நம்பிக்கை" என்பது சிலரது சொத்தல்ல மாறாக அது அனைவரதும் ஆரோக்கியமான வாழ்க்கையை உறுதி செய்ய வேண்டும். எனது நம்பிக்கை அல்லது எனது நம்பிக்கையின்மை என்னோடு வாழ்பவர்களுக்கு நன்மை தராமல் அழிவை தருகின்றது என்றால் அதனை ஆரோக்கியமானது என எப்படி கூறுவது?

**கொரோனா வைரஸ் கோவிட் 19 தொற்றுநோய்க்காலம்:**

கடந்த மார்ச் மாதம் 15 ஆம் திகதி அன்று யாழ்ப்பாணம் அரியாலை பிலடெல்பியா ஆலயத்தில் நடைபெற்ற ஒரு வழிபாட்டை, சுவிட்சர்லாந்து நாட்டிலிருந்து வந்து, நடத்திய ஒரு பாஸ்டர் கோவிட் 19 நோய்த்தொற்றுடையவர் என்பதால் அன்று அந்த வழிபாட்டுக்கு சென்றிருந்தோர் யாழ் மருத்துவமனைக்கு வரவேண்டும் என்பது சுகாதாரத்துறையால் விடுக்கப்பட்ட ஒரு செய்தி. இச்செய்தியின் நோக்கம் நோய்த்தொற்று பரவாமல் இருக்க மேற்கொள்ளப்பட்ட ஒன்றே.

**இச்செய்தி எப்படி நோக்கப்பட்டது?**

"கிறிஸ்தவர்கள் யாழ்ப்பாணத்துக்கு கொரோனா கோவிட் 19 தொற்றுநோயை கொண்டு வந்துவிட்டனர்." கிறிஸ்தவர்கள் தொற்றுநோயை பரப்புகின்றனர்...என இச்செய்தியை நோக்கியமையும் கிறிஸ்தவர்களுக்கு எதிரான ஒரு கட்டுக்கதை கட்டவிழ்த்துவிடப்பட்டதும், அது இலங்கையின் பல பகுதிகளிலும் பரவியமை எந்த அடிப்படையிலும் ஆரோக்கியமானதல்ல. சிலர் கேள்விக்குள்ளாக்கியிருந்தனர் என்பதை குறிப்பிட வேண்டும். ஆனால் அது புறந்தள்ளப்பட்ட செய்தியாக பெரும்பாலான இடங்களில் இருந்தது.

**சமயங்களும் நாங்களும்:**

"எங்கள் அனைவருக்கும் அருள் தாரும்" என மன்றாடுவதை விட "எங்கள் ஒவ்வொருவருக்கும் ஆசி தாரும்" என மன்றாடுவது தான் ஒப்பீட்டடிப்படையில் மேலோங்கியுள்ளது. நான், எனக்கு... என ஆரம்பித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது குடும்பம், எனது இனம், எனது மதம்... என்னும் கட்டமைப் தான் அனைத்தையும் நோக்கும் உலகநோக்குக்குள் நாங்கள் ருக்கிறோம். இதனால் எங்கள் கருத்துருவாக்கங்கள் மூன்று விதமாக அமைவதை நோக்கலாம்.

"நான் மட்டும் சரி நீ பிழை, எனவே என்னை பின்பற்று" இதனை தனிமுதல்போக்கு என அழைக்கலாம்.

"நீ சரி, ஆனால் நான் உன்னை விட அதிகம் சரி, எனவே என்னைப்பின்பற்று" இதனை உள்ளடக்கும் போக்கு என பெயரிடலாம்.

"நானும் தவறு நீயும் தவறு வா சேர்ந்து திருந்துவோம், நீயும் சரி நானும் சரி வா சேர்ந்து வாழுவோம்" இதனை பன்மைப்போக்கு என கூறலாம்.

இந்த கருத்துருவாக்கப் போக்குநிலைகள் சமயப்பரப்பு உட்பட அனைத்து சிந்தனை - ஈடுபாட்டு பொறிமுறைகளிலும் அதிகமாக மேலோங்கியுள்ளன.

பன்மைப்போக்குத்தான் ஒப்பீட்டடிப்படையில் அனைவருக்கும் பொருத்தம். நாம் அனைவரும் ஆரோக்கியமான கருத்தோட்டங்களுடனும் ஈடுபாடுகளோடும் இடைப்பட அனைவரையும் அனைவரும் அங்கீகரிக்க வேண்டும்.

எமது பார்வையில் நல்லவை வரையறுக்கப்படும்போதும் எமது நோக்கில் தீயவை வரையறுக்கப்படும்போதும் எப்படி நோக்குகிறோம்? "நல்லவை என்றால் அதற்கு காரணம் எனது வட்டம். தீயது என்றால் அதன் பொறுப்பு உனது வட்டம்" எனும் எண்ணஅலை மாறி அனைத்தையும் அனைவரும் நோக்கி,பொருத்தமானதை நோக்கி, பயணிக்க முற்படவேண்டும்.

**கிறிஸ்தவ அடிப்படை வாதம்:**

பன்மைப்போக்கை நிராகரிப்பதை சமய வெளியில் அடிப்படைவாதம் என கூறலாம். "உலகம் அழியப்போகிறது, போர், பஞ்சம், தொற்றுநோய்... போன்றவை இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு அடையாளம். கிறிஸ்தவ மதத்தை தழுவாதோர் அழிந்துபோவார்கள்" எனும் கருத்துப்போக்கு சில கிறிஸ்தவர்களிடம் உண்டு. இது பன்மைப்போக்கை நிராகரிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவ அடிப்படை வாதம். "அன்புமிகு கடவுளை அழிப்பவராக நோக்குவது ஆரோக்கியமா?" எனும் யதார்த்தமய கேள்வியை கேட்பது இங்கு பொருத்தம்.

**தொகுப்பு:**

சீனாவிலிருந்து கொரோனா தொற்று தொடங்கியதால் சீனா அழியவேண்டும் என எண்ணுவதோ, சுகாதார நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பை மறுத்ததால் அமெரிக்கா அழியும் என கூறுவதோ, முதன்முதலில் இலங்கையில் கொரோனா தொற்று சீனப்பெண்ணொருவருக்கு ஏற்பட்டதால் சீனப்பெண்கள் நோய்த்தொற்றுக்கு காரணம் என திட்டுவதோ, முதன்முதலில் கொரோனா நோய்த்தொற்று ஏற்பட்ட இலங்கையர் ஒரு உல்லாசப்பயணிகளின் வழிகாட்டி என்பதால் உல்லாசப்பயணிகள் வழிகாட்டிகளே நோய்த்தொற்றுக்கு மூலகாரணம் என கூறுவதோ ஆரோக்கியமானதல்ல. தவறுகள் நிச்சயம் திருத்தப்படவேண்டும் அதற்காக அனைவரும் உழைக்கவேண்டும்.

கொரோனா தொற்று ஏற்பட்டோரை ஒதுக்கி, தள்ளி வைப்பதால் யாருக்கும் எந்த நன்மையும் ஏற்படப்போவதில்லை. எனக்கு கொரோனா தொற்று ஏற்பட்டால் நான் அதனை எப்படி நோக்குவேன்? எனது குடும்ப அங்கத்தவர் ஒருவருக்கு தொற்று எனின் நான் அவரை ஒதுக்கி வைப்பது எவ்வளவு தூரம் பொருத்தமானது?

எனவே,"கொரோனாவை ஒரு பாஸ்டர் கொண்டுவந்தார்" என கூறிக்கொண்டிருக்காமல் அனைவரும் பாதுகாப்பாக இருக்க, பொருத்தமான சுகாதார மற்றும் மனித உரிமைகள் விடயங்களில், அவரவருடைய நம்பிக்கைகளின் அடிப்படையில் முயற்சிப்பதே இன்றைய தேவை.

குறுகிய நோக்கில் பார்க்காமல் பரந்த நோக்கில் பார்ப்போம்
யாரையும் நிராகரிக்காமல் இணைந்து இயங்குவோம்.
பொறுப்புக்கு அழுத்தம் கொடுப்போம்.
பொருத்தமானதை செய்ய முன்வருவோம்.
தீமைகளை நிராகரிப்போம், நன்மைவழி நடந்திடுவோம்.
கொரோனா வைரஸ் கோவிட் 19 அச்சுறுத்தல் அழியட்டும்.
கூட்டுறவை உறுதி செய்யும் மனிதநேய புரிதல் வளரட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பின்னிணைப்பு – 02:**

மன்றாட்டு:

அச்சத்தை அகற்றி

உயிர்ப்பை உறுதி செய்யும்

ஆரோக்கியத்தின் ஆண்டவரே.

உமது ஆட்சி வருக.

தீமைகள் வழி போகாமல்

நன்மைகள் வழி வாழ

அருள்தாரும்.

சாவின் வழி சாராமல்

வாழ்வின் வழி நிற்க

அருள்தாரும்.

நாம் நீர் வாழும் ஆலயம்.

நாம் நீர் தங்கும் கோவில்.

சிந்தனைகள் நலமாகட்டும்.

செயற்பாடுகள் வலுவாகட்டும்.

இறையாட்சி வழி

அனைவரும்

ஆரோக்கியமாக

பண்படுத்தும்

ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொரோனா வைரஸ் கோவிட் 19 அச்சுறுத்தல் கால குடும்ப மன்றாட்டு

குடும்பங்களாக எம்மை உருவாக்கிய கடவுளே (தொடக்கநூல்;1:26-27;2:திருத்தூதர் பணிகள் 10:2), உமது அருளுக்காகவும் வழிகாட்டலுக்காகவும் நன்றிகள். பொறுப்பற்று சுயநலமாக வாழ முனையும் எங்களை மனம்மாறச்செய்யும். அனைவரையும் உமது பிள்ளைகளாகவும் எமது சகோதரர்களாகவும் நோக்கும் மனங்களை தாரும்.
தீமைகளின் விளைவாக ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தலை எதிர்கொள்ள வலுவூட்டும். தீமைகளை நோக்கி அஞ்சாமல், நம்பிக்கையோடு நன்மைவழியில் மேற்கொள்ள வலுவூட்டும் (உரோமையர் 12:21).
வீடுகளுக்குள் முடக்கப்பட்டுள்ள, இந்தக் காலத்தில், நம் உறவுகளை ஆழமாக்க உதவியருளும்.
வெளியே செல்லும்போது, தொற்று ஏற்படாதிருக்க, நாம் உரியவற்றை செய்ய உதவியருளும்.
இந்நெருக்கடி காலத்தில் அடிப்படை வசதிகளின்றி கலங்குவோரை கவனியும். அத்தியவசிய தேவைகளை பூர்த்தி செய்ய உதவ எம்மை பாவியும். இந்த அவசரகால சேவைகளில் ஈடுபட்டுள்ளோருக்கு தேவையான பராமரிப்பை அளித்தருளும். நாங்கள் அனைவரும் நீர் வாழும் ஆலயங்களாக (1 கொரிந்தியர் 6:19) அருள்தாரும். துன்புறுவோரை குணமாக்கும் (யாக்கோபு 5:15). இறைவேண்டலில் நிலைத்திருக்க உறுதிப்படுத்தும் (திருத்தூதர் பணிகள் 2:42).
விழிப்பேற்படுத்தும், துணிவேற்படுத்தும், அன்பேற்படட்டும், ஆக்கமேற்படட்டும். அன்பின் குடும்பங்களாக வாழ அருள்தாரும் (உரோமையர்12:9 – 10). இறையாட்சியை முன்னுரிமைப்படுத்த வாழ வழிகாட்டும் (மத்தேயு 6:33).

**இறையாட்சி நோக்கி வேண்டுகின்றோம் (மத்தேயு 6:10), ஆமென்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- https://www.psychologytoday.com/us/blog/out-the-darkness/201308/the-real-meaning-good-and-evil
- **இயேசு சமூக மன்றாட்டு**
- **பின்னிணைப்பு** - 01
- https://www.vaticannews.va/ta/vatican-city/news/2020-04/a-votive-mass-in-time-of-pandemic-new-prayer-good-
- மத்தேயு 1:23 - 24
- https://www.vaticannews.va/en/pope/news/2020-03/pope-coronavirus-interview-repubblica-pandemic-covid-coronavirus.html
- [7]https://www.americamagazine.org/faith/2020/03/22/pope-francis-calls-christians-worldwide-combat-coronavirus-pandemic-midday-prayer
- https://www.motherjones.com/coronavirus-updates/2020/03/one-of-trumps-favorite-pastors-says-all-natural-disasters-can-ultimately-be-traced-to-sin/

**ஆக்கம்: அருட்பணி**
**S.D.P.செல்வன்,**
**புனித மரியாள் ஆலயம்,**
**கோப்பாய்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறிஸ்தவ தெரிவும் பாராளுமன்றத் தேர்தலும் (2020)

**அருட்பணி: J.தேவருட்செல்வம்**

### அறிமுகம்

1ம் உலகப் போரின் பின்புலத்தை சீச்செஸ்ரர் ஆயர் (Bishop of Chichester) G.K.A.Bell தனது நூலின் பின்வருமாறு குறிப்பிடுகிறார். அந்த நூலின் பெயர் "Christianity and world order" என்பதாகும்.

1ம் உலகப் போரின் பின்னணியில் ஓர் குழப்பமும் சலனமும், தடுமாற்றமும் ஐரோப்பா முழுவதும் காணப்படுகிறது. யுத்தம் ஐரோப்பா முழுவதையும் அழித்து விட்டது. 1914ம் ஆண்டு 1ம் உலகப் போரின் ஆரம்பம் அதுவே புதிய யுகத்தின் ஆரம்பமுமாகும். அது சௌகரியமான உலகில் பாரிய அதிர்ச்சியை உருவாக்கி விட்டது. மறு கட்டுமானத்துக்கு இடமில்லை, உண்மையான இலக்கை உலகம் இழந்து விட்டது. ஐரோப்பிய ஒருமைப்பாட்டிற்கான உலக இயக்கம் எழுச்சியடையவில்லை. எங்கும் பயமும் கோபமும் தென்பட்டது. வெற்றியாளர்களின் வல்லமை அதிகம் வலுப்பெற்றது. ஆனால் குழப்பங்கள், தடுமாற்றங்கள், மத்தியிலும் புதிய ஒழுங்கைக் கொண்டு வருவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டடன. வெற்றியாளர் மனதில் ஓர் மாற்றம் தேவை, அவசியமானது.

ஆனால் மேலும் மேலும் ஏமாற்றமும் அழிவும் தென்பட்டது. தெருவோரங்களில் வேலையில்லா இளைஞர்கள், சல்லாபித்துக் கொள்கின்றனர். ஒவ்வொரு ஐரோப்பிய தேசத்திலும் அநீதியும் தடுமாற்றமும் காணப்படுகின்றது. உலகில் எதுவுமே பெறுமதியற்றதென்ற உணர்வு தென்படுகிறது. சமயம் தன் பிடியை இழந்து விட்டது[10]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவிக்குரிய பிணைப்புகள் எல்லாம் சிதைந்து விட்டன. இது வரைக்கும் தேசங்களைக் கட்டுப்படுத்தி வந்த கொள்கைகளும், பாரம்பரியங்களும் உருகிப் போயின. அதிக துன்பத்தை அந்த உலகம் அனுபவித்துக் கொண்டிருந்தது. ஆனால் அடுத்த 20 வருடங்களில் மறுபடியும் ஓர் உலகப் போர் எழுந்தது. அது 2ம் உலகப் போர்.

"There are two demons of unemployment and war always present in this world in spite of the world's wealth, in spite of the longing for peace by which the immense majority of human beings in all civilized countries are possessed".[10]

நவீன உலகத்தில் இரு சாத்தான்கள் உள்ளன. அவை வேலை வாய்ப்பின்மையும், யுத்தமுமாகும். உலக செல்வங்கள் மத்தியிலும் நீண்ட கால சமாதானத்தை ஏற்படுத்த விளையும் மக்கள் சமூகமொன்றின் அபிலாஷைகளுக்கு மத்தியிலும் இவ்விரு சாத்தான்களும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

யுத்தத்தினால் பாரிய விளைவுகள் ஏற்படுவது திண்ணம். அவற்றின் விளைவாக வேலை வாய்ப்பின்மை உருவாகும். இச்சூழலினால் ஐரோப்பாவின் கிறிஸ்தவ தேசங்களுக்கிடையில் சுயாதீனமும், சமத்துவமும் (Freedom Equality) கருத்தியலாயின இவ்விரு கருத்தியல்களையும் பண்பாடாக பராமரிக்க முடியாத பட்சத்தில் 20 ஆண்டுகளில் மறுபடியும் ஓர் உலகப் போர் எழுந்தது ஆச்சரியமானது. ஆனால் 2ம் உலகப் போருக்கு முன்பு சூசியாவில் வர்க்க பேதமற்ற சமூக அமைப்பும் (classless Society) ஐரோப்பாவில் உயர் குடிகளின் சர்வாதிகார ஆட்சியும் எழுந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்சபையும் அரசும்
## (Church and state)

The very term ecclesia derived from the word used for greek assemblies of citizens was considered as a state. Ancient language had no for a religious grouping distrust from the political organization.[10]

திருச்சபை என்பது யூதேய சமயத்தின் பாரம்பரியத்தில் எழுந்து வந்த கிரேக்க, யூத மற்றும் புறசாதி மக்களின் திருப்பேரவையாகும். எந்த சமயங்களிலும் காணப்படமுடியாத இவ்விறை அமைப்பு இறைவனை மையமாக கொண்ட உலகக் கோத்திரங்கள். அனைத்திற்குமான கோத்திரக் கூட்டமைப்பாகும். யூத சமயத்தில் Confederation / Amphitectorty எனும் கோத்திரக் கூட்டமைப்பு, பிற்காலத்தில் ரூசியா தேசங்கள் அமைத்தையும் குறித்து விளக்கியது. பண்டைய மொழிகளில் அரசியல் நிறுவனங்களிலிருந்து சமயக் குழுவினரை வேறுபடுத்திக் கொள்வதற்கு சிறப்பான பதங்கள் இருக்கவில்லை. திருச்சபைக்கும் அரசுக்கும் உறவுகளை பேணுவதற்கு எபிரேயு திருமறை தரும் விளக்கங்கள் பின்வருமாறு,

01. திருச்சபையும் அரசம் வேறு வேறான சமூகங்கள் அல்ல, இரண்டும் ஒன்றே. இது திருச்சபைக்குள்ளான பார்வையே. வெளியாளரின் பார்வையே இரண்டையும் வேறுபடுத்துகிறது.
02. அரசு என்பது இறைவனின் ஆட்சியமைப்பு (Theocracy) யாவே இஸ்ரவேலின் அரசன், அவன் தனது சித்தத்தை தேசிய தலைவர்கட்கும், தீர்க்கர்கட்கும், ஏனைய அரசர்கட்கும், ஆசாரியருக்கும் வெளிப்படுத்துகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. அரசாட்சி என்பது இறைவனின் வரம்.(gift of Yahweh) அரசர்கள் கடவுளின் பிரதிநிதிகள், அவருடைய மக்களுக்கு இந்தப் பண்டைய நம்பிக்கையிலிருந்தே மேசியா பற்றிய நம்பிக்கை எழுந்தது.

04. அரசர்களின் முடியாட்சி பற்றிய எதிர்பார்ப்பு மக்கபேயரின் எழுச்சியுடன் உருவானது. இது ஹஸ் மோனிய (Harmonium Rile) ஆட்சிக்கு வழிவகுத்தது. ஆனால் யூத மக்களின் பெரும்பான்மையினர் Leviticus Monarchy உபாகம முடியாட்சியை எதிர்பார்த்திருந்தனர்.

05. மக்கபேயரின் எழுச்சியின் பின்னர் மறைந்து போக அவர்களின் உணர்வுடன் எழுந்து போராடியவர்கள் செலோத்தேயர்கள் (zealots). இக்கால கட்டத்தில் கிறிஸ்தவம் பாலஸ்தீனம் முழுவதிலும் பரவி விட்டது. சதுசேயரின் அரசியல் சந்தர்ப்பவாதங்கட்கு மத்தியில், பரிசேயர்கள் அவர்கட்கு எதிராக இஸ்ரவேலின் எதிர்காலம் ஓர் அரசமைப்பாக அல்ல, திருச்சபை அமைப்பாகவே செயற்பட வேண்டுமென விரும்பினர். அந்த அரசு உலக அமைப்பை, குறித்ததல்ல, இறைவன் தாமே இஸ்ரவேலருக்கு அளிக்கும் இறையரசாகும்.

06. ஆனால் அப்போஸ்தலர் காலம் மிளிர்ந்த போது, கிறிஸ்து இறையரசைக் குறித்து பிரசங்கிக்கிறார். ஆனால் இஸ்ரவேல் அரசிற்கும், திருச்சபைக்கும் பெரும் பிரிவினை உருவாகியது. இக்காலத்தில் சமய அடிப்படையில் எழுந்த புரட்சிகள் அரசியல் விடுதலை நோக்கமாகக் கொண்டிருந்தன.

பழைய ஏற்பாட்டு எபிரேய நூல்கள் திருச்சபையின் கட்டுமானத்தில் பெரும் பங்களிப்பு வழங்கியுள்ளன. அத்துடன் அவை முடியாட்சிக்கும் சாதகமாகப் பேசுகின்றன. அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பிய அரசுகளின் உருவாக்கத்தின் வரலாற்றுச் சான்றுகளையும், இறையியல் அழுத்தங்களையும் கொடுத்துள்ளன. போப்பு மார்க்கம் உருவாகவும், ஆசாரியத்துவ முறைமைகள், அரசு அமைப்பிற்குள் ஒரு காலத்தில் உள்ளீர்க்கப்படவும் பிற்பாடு அவ்வரசுகளுக்கு அடங்கி திருச்சபை செயற்படவும், எபிரேய நூல்கள் சாதகமாக செயற்பட்டிருக்கின்றன.

முடியாட்சி என்பது இஸ்ரவேலில் பரிசுத்தமான அரசமைப்பிற்கு ஒரு சான்றாக விளங்கியது. முடியாட்சிக் காலத்தில் இஸ்ரேலிய திருப்பேரவை ஒரு அரச திருச்சபையாகவும் (State Church) அதே வேளையில் ஒன்றுபட்ட தேசிய திருச்சபை (United Nation – Church) யாகவும் செயற்பட்டு வந்தது.[10]

காலப் போக்கில், சிறையிருப்பின் யுகத்தின் போது முடியாட்சி அழிக்கப்பட்டுப் போக ஆசாரியத்துவ முறைமை உத்தியோக முறைமையாக உருவானது. இந்த ஆசாரியத்துவ முறைமையே இஸ்ரவேலி, அரசை இன்றும் வழிநடத்தி வருகின்றது. சிறையிருப்பிற்குப் பின்னான எபிரேய மக்களின் தாயக மீட்சி பற்றிய வரலாறுகளை நோக்கும் போது அரசாட்சி ஸ்தாபகத்தை முறியடிப்பதும், மேலும் பாரசீக ஆளுனர்களின் நோக்கம் அரசமைப்பிற்கும், ஆசாரியத்துவ முறைமைக்கும் ஓர் உடன்பாடு உருவாவதைத் தடுப்பதாகும். எபிரேய குடிசார் ஆளுனராக இருந்த செருபாபேலின் மர்மமான முறையிலான தலைமறைவு / கடத்தல் இதை வலியுறுத்துகின்றது (எஸ்ரா 2:2, சகரியா 3:8 – 10, 4: 9 – 15) அரசன் இல்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்ரலேலிய கோத்திரங்களுக்கான தலைமைத்துவமும், அரசியல் முனைப்புகளும் செயலற்றுக் காணப்பட்டன.[10]

## ஈழத் தமிழரின் பார்வையில் தேர்தல்:

இலங்கையில் ஈழத்தமிழரின் கடந்த கால வரலாறுகள், ஈழப்போர் சிதறடிப்பு, மீளவும் அரசியல் போராட்டத்தில் சிங்கள சார்பு தலைமைத்துவத்திற்குள் அமிழ்ந்து போகும் முனைப்பு இவையே சம கால அரசியல் விடயங்களாகும். இனி நடக்கவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலில் நாம் மேற் குறிப்பிட்ட எமது போரின் விளைவுகளை சிந்தித்துப் பார்க்க வேண்டும். இனி நமது இனத்தின் இருப்பைத் தக்க வைப்பதற்கான முயற்சியில் நாம் முழுமூச்சாக செயற்பட ஒன்றிணைவதே மிகச் சிறந்த வழிமுறையாகும்.

ஆனால் தமிழ்க் கட்சிகள் தமக்கிடையே ஒற்றுமையை உருவாக்கிக் கொள்ள முடியாமல் திணறுகின்றன. தாயகக் கோட்பாட்டை ஒரு சில கட்சிகள் தம் இலட்சியமாகக் கொண்டு போடியிடுகின்றன. அதற்கு உதாரணமாக முன்னாள் முதலமைச்சரின் தலைமையிலான கட்சியைக் குறிப்பிடலாம். புலம் பெயர் தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்று போட்டியிடும் ஆளுமையில் தமிழ்க் காங்கிரஸ் இத்தேர்தலில் போட்டியிடுகின்றது. அத்துடன் மிக நீண்டகால தமிழர்களின் சுயாட்சியை மையமாகக் கொண்டு தமிழர்களின் வாக்குகளை பெற தமிழர் தேசிய முன்னணி பாடுபடுகின்றது. இம் மூன்று கட்சிகளும் தமிழ்த் தலைமைத்துவத்தை கொண்டிருப்பின் ஒன்றுபட்டு இம் மூன்று தலைவர்களும் ஏன் தமிழ் மக்களைச் சந்திக்க முடியாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கட்சிகள் தவிர ஏனைய சிங்களக் கட்சிகளின் தலைமைத்துவத்தின் கீழ் போட்டியிடும் தமிழ்க் கட்சிகள் தமிழ் மக்களுக்கு செய்ய நினைப்பது என்ன? நன்மையா? தீமையா? இது பற்றி தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும்.

சுயாதீனமாக போட்டியிடும் சுயாட்சிக் குழுக்கள் மற்றும் ஒடுக்கபட்ட சிறுபான்மைத் தமிழர் சார்பாக போட்டியிடும் கட்சிகளின் வாக்குகள் நிச்சயமாகவே சிதறடிக்கப்படும் என்பதில் ஐயமில்லை.

கடந்த பொதுத் தேர்தலில் தமிழர்கட்கு வடக்கு கிழக்கில் ஒன்பது (09) ஆசனங்கள் கிடைத்தன. ஆனால் இப் பொதுக் தேர்தலில் அது ஏழு ()7) ஆகக் குறைந்து விட்டது. ஏனெனில் வடகிழக்கில் மக்கள் குடித்தொகை குறைவாகக் காட்டப்படுகிறதே காரணமென அரசு கூறி வருகின்றது.

## இறையியல் விளக்கம்:

பொதுத் தேர்தலில் கிறிஸ்தவர்களாகிய நாம் மேற் குறிப்பிட்ட மூன்று தமிழர் கட்சிகளும் ஒன்று சேரப்படுவதன் மூலமும், அதே தலைமைத்துவ கட்சிக்கு வாக்களிப்பதன் மூலமும் குறைந்தது ஐந்து (05) ஆசனங்களையாவது பெற்றுக் கொள்ள முடியும்.

மேலும் வாக்களிப்பதுடன் எமது கடமை முடிந்து விடவில்லை. எதிர்காலத்தில் இஸ்ரவேலிய மக்கள் தம் போராட்ட காலத்தில் எதிர்கொண்ட சவால்களைக் கற்றுக் கொள்வதுடன் எவ்வாறு எபிரேய கடவுள் அம்மக்களை அவர்களின் ஒடுக்கு முறையிலிருந்து எவ்வாறு மீட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார் என்பதை (உ_பா 26) இறையியல் ரீதியாகப் புரிந்து கொள்ள வேண்டும். அதனால் ஈழத்தமிழரின் வாழ்வை இஸ்ரவேலின் வரலாற்றுடன் ஒப்பிட்டு கற்றுக்கொள்வதுடன் நாம் ஒன்றுபட்ட தாயகத்தை (வட – கிழக்கு) மீட்கவும் பாடுபட இத்தேர்தல் களத்தை நமக்கு ஏற்புடையதாக்கிக் கொள்வோம்.

**அடிக்குறிப்புக்கள்**

01. G.K.A.Bell (Bishop of Chichester)
Christianity & world – order, Penguin books, New York, USA, 1940
pg 11 -12

02. Ibid, Pg 13

03. T.M. Parker, Christianity and the state in the light of History, London, 1955, Pg 1

04. Edwyn Bevan, Jerusalem Under the High Priests, London,1904, Pg 99

05. T.M. Parker, Christianity and the state in the light of History, London, 1955, Pg 11

**அருட்பணி: J.தேவருட்செல்வம்**
**விரிவுரையாளர்,**
**கிறிஸ்தவஇறையியில் கல்லூரி,**
**மருதனார்மடம், சுன்னாகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை அனர்த்தங்களும் சமய அடிப்படை வாதமும் ஓர் திருமறை ஆய்வு

அருட்பணி : அருளம்பலம் ஸ்டீபன்

## அறிமுகம்

ஒரு தனிமனிதனும் சமூகமும் தாம் வாழும் சூழலில் இறைவனின் தன்மையையும் அவரின் செயற்பாட்டையும் அறிந்துகொள்ள முற்படுவதே இறையியல் என நாம் அழைக்கின்றோம். இதன் உருவாக்கத்தில் இறை வெளிப்பாடு, திருமுறை, பாரம்பரியம், அனுபவம், வரலாறு பிற சமயங்கள் போன்றவைகள் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இவ் ஆய்வு கட்டுரையில் கொரோனா வைரசின் தாக்கத்தில் மத்தியில் இறைவனின் தன்மை,செயற்பாடு போன்றவற்றை சூழல் சார்ந்த பின்னணியில் ஆய்வு செய்ய விருமபுகின்றேன். இதனை சூழல் சார்ந்த இறையியல் என அறிமுகப்படுத்தினாலும் இது சர்வதேசம் சார்ந்த ஒன்றாகும்.இதற்கு ஆதாரமாக கடவுளின் வெளிப்பாடு திருமுறை பிற சமயங்கள் அனுபவம் போன்ற ஆதாரங்களை பயன்படுத்த விரும்புகிறேன்.

## பின்னணி

கடந்த இரு தசாப்தங்களாக இலங்கையில் பல்வேறுபட்ட இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக சுனாமி, நிசாப்புயல், பறவைக் காய்ச்சல்,பன்றிக் காய்ச்சல், வெள்ளப்பெருக்குகள், மண்ணரிப்பு, சிக்கன்குனியா போன்றவற்றை குறிப்பிடலாம். எனினும் 2019ஆம் ஆண்டு சீனாவில் உருவாக்கி ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா கண்டங்களில் பெருமளவு தாக்கத்தை பொருளாதாரத்திலும் அரசியலிலும் சமூக கலாசாரத்திலும் சமய சிந்தனைகளிலும் கொரோனா வைரஸ் ஏற்படுத்தியதை நாம் மறந்து விட முடியாது. இன சமய பால் வயது ஏழை பணக்காரன் பேதமின்றி அனைவரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கொடிய அரக்கன் உயிர்கொல்லி இவ்வுலகை ஆட்டிப்படைத்து முடக்கியும் சுருக்கியும் உள்ளது. இதனால் இன்று வரை 175000 பேர் உயிர் இருந்தும். 25 000 000 மேற்பட்ட மக்கள் தொற்றுக்கும் உள்ளாகியுள்ளனர். இவைகள் ஒருபுறம் இருக்க. இந்நிகழ்ச்சி இறை சிந்தனையில் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தைப் பற்றிய இக்கட்டுரையில் குறிப்பிட விரும்புகிறேன்.

## திருமறை கூறும் இறைவன் யார்?

திருமறையில் இறைவன் குறிக்கப்பட்ட ஓர் மக்களின் கடவுளாக காட்டப்படுகிறார். தொடக்க நூலில் 12:1-3, விடுதலைப் பயணம் 19 :1-10,ஏசாயா 49:6, போன்ற பகுதிகளை நாம் குறிப்பிடலாம். எனினும் இறைவனின் அனைத்து உலகத் தன்மையையும் செயற்பாட்டையும் நாம் காணலாம். (படைப்பாளர்- தொடக்க நூல் 1:25-27, காப்பாளர்- தொடக்க நூல் 9:11, ஆசி வழங்குபவர்- தொடக்க நூல்12:1-3, விடுதலையாளர் – ஆமோஸ் 9:7, அனைவரையும் தூதுப்பணியில்- ஏசாயா 45:1, பாரபட்சமற்றவர் – மத்தேயு 5:45,46,) போன்ற அனைத்துலக தன்மை பண்புகளையும் நாம் காணலாம். இப்பேர்ப்பட்ட இறைவனை எமது துன்பச் சூழலில் எவ்வாறு நாம் புரிந்து கொள்வது?

## அனைத்துலக கடவுளும் துன்ப சூழலும்

ஆசிய தேசங்களில் உருவாகியுள்ள சமயங்கள் துன்பங்களுக்கு பல்வேறுபட்ட காரணங்களை விடைகளாக் கூறுகின்றன. குறிப்பாக இந்து சமயத்தில் கர்ம கோட்பாடுகளும் விதி கோட்பாடுகளும் துன்பத்திற்கான மூலங்கள் என கூறப்படுகின்றது. (நாம் முற்பிறப்பில் செய்த பாவங்கள் இக்கால வாழ்வை தீர்மானிக்கின்றன நிகழ்கால செயற்பாடுகள் எமது எதிர்காலத்தை தீர்மானிக்கின்றன) இவைகள் தனிமனிதனுக்கு மாத்திரமின்றி சமூகங்களுக்கும் பொருத்தப்பட்டுள்ளது. பௌத்த சமயத்தின் படி ஆசைகளின் காரணமாக ஒரு மனிதன் பிறக்கின்றான். இந்த ஆசைகளில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுபடும் போது அவன் நிர்வாண நிலையை அடைகின்றான். எனவே துன்பங்களுக்கு காரணம் மனித ஆசைகளே ஆகும். இவைகளின் ஒளியில் திருமறை துன்பங்களை குறித்துக் கூறும் கருத்தியல்களை ஆராய்வோம்.

## திருமறையும் துன்பவியல்

திருமறை துன்பவியல்களை குறித்து பல்வேறுபட்ட சிந்தனைகளை முன்வைத்துள்ளது. எனினும் சமூகப் பாவத்தின் விளைவே துன்பத்துக்கு அடித்தளமாக விளங்குகின்றது.

என்ற கருத்தை திருமறையில் நாம் காணலாம். குறிப்பாக இஸ்ரயேல் மக்களின் ஆண் குழந்தைகளை எகிப்திலே பார்வோன் என்ற அரசினால் கொல்லப்பட்டமை (விடுதலைப் பயணம் 1:22) இயேசு பிறந்தபோது ஏரோது 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளை பெத்தலகேமில் கொலை செய்தமை. (மத்தேயு 2:1-17) போன்ற நிகழ்வுகள் பார்வோன் மற்றும் ஏரோது ஆகியோரின் தனிப்பட்டவர்களின் பாவங்களினால் ஒரு சமூகம் தண்டிக்கப் பட்டதை நாம் காணலாம்.(யோவான் 9:1-3) உள்ளபடி பிறவியில் பார்வை இழந்து பிறந்த மனிதனின் தனிப்பட்ட பாவத்தினால் அல்லது பெற்றோரின் பாவத்தினால் இந்நிலை ஏற்பட்டது என்பது குறித்து இயேசுவிடம் சீடர்கள் வினாவிய போது: இயேசு தனிப்பட்ட பாவத்தை கண்டித்து சமூகத்தின் நிலையை அதிகளவு வலியுறுத்துகின்றார். இயேசுவின் மரணத்தை உற்று நோக்கும் போது அது வரலாற்றிலேயே சமயத் தலைவர்களினதும் அரசியல் தலைவர்களினதும் சமூக பாவத்தின் விளைவாகவே ஏற்பட்டது எனலாம். (மாற்கு 3:6) ஆனால் இக்காலத்திலேயே இவ் மரணத்துக்கு விசுவாசம் மூலாம் இடப்பட்டுள்ளது. எனினும் சமூக பாவம் என்னும் எண்ணக்கரு இன்று செழுமை இறையியலினால் மூடப்பட்டுள்ளது. குறிப்பாக (தனிப்பட்ட பாவங்களுக்கு இறைவன் தண்டனை அளிக்கிறார் மாற்கு 2:1-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12)அனைத்து துன்பங்களையும் தனிப்பட்ட மாட்சிமையில் நிறைவுபெறும் யோவான் 15:1-10,அனைத்தும் தேவ சித்தத்தின்படி நிறைவேறும் யோவான் 5:36), போன்ற கருத்துக்கள் சமூக பாவத்தை பலவீனப்படுத்தி சமய அடிப்படை வாதத்தை தூண்டிவிடுகின்றது.

**சமய அடிப்படை வாதமும் கொரோனா வைரசும்**

உலகிலேயே காணப்படும் சமயங்கள் ஒவ்வொன்றும் ஏனைய சமயங்களில் தங்கி வாழவும் அவற்றின் கருத்தியல்களை வளர்க்கவும் அபிவிருத்தி செய்யவும் அழைக்கப்பட்டுள்ளது. ஆனால் இன்று இச்சமய சிந்தனைகளுக்கு இடையே போட்டி தன்மைகள் ஏற்றத்தாழ்வுகள் உருவாக்கப்பட்டு சமயங்களுக்கு இடையே முரண்பாடுகளும் உரசல் நிலைகளும் உருவாகி உள்ளதை நாம் காணலாம்.

குறிப்பாக வைரஸ் தாக்கத்தினால் மக்கள் துன்பத்தை அனுபவிக்கும் போது கடவுள் ஏன் கிறிஸ்தவ மக்களை இதிலிருந்து பாதுகாக்கவில்லை? என கேள்வி எழும்புகின்றன. உதாரணமாக தென்கொரியாவில் ஒரு கிறிஸ்தவ பெண்மணி மூலம் ஆலய வழிபாட்டில் கலந்துக்கொண்ட 1200 பேருக்கு மேற்பட்டவர்களுக்கு வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை நாம் உதாரணமாக கூறலாம். மேலும் அதிகளவு உயிர் இழப்புகளை சந்தித்த நாடுகளான அமெரிக்கா,இத்தாலி,ஸ்பெயின், பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற நாடுகளில் கிறிஸ்தவ நாடுகளே எனவே இறைவனின் பாதுகாக்கும் பலத்திற்கு என்ன ஏற்பட்டுள்ளது? என்ற வினாக்கள் எம்மிடையே எழுகின்றது. மேலும் “இல்லை இல்லை இயேசுவிடம் வாருங்கள் அவர் கொரோனா வைரஸில் இருந்து எங்களை பாதுகாப்பார்” என உதயன் பத்திரிகையில் வெளியிடப்பட்ட ஓர் துண்டு பிரசாரத்தையும் அதனை வெளியிட்ட மதகுரு மக்களின் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளானதையும் நாம் மறந்து விடக்கூடாது. எனவே இத்தகைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்நிலையில் இறைவன் பாரபட்சமான முறையில் ஓர் குறிக்கப்பட்ட சமயத்தினைரக் காப்பதும். இன்னுமோர் மக்களின் அழிவில் மகிழ்வதும் இறைவனின் பட்சபாதமற்ற பண்பிற்கு பங்கும் விளைவிக்கின்றது. உதாரணமாக இஸ்ராயேல் மக்கள் செங்கடலைக் கடந்து சென்ற வேளையில் கடவுள் எகிப்தியரை அழிந்து இஸ்ரயேலரைப் பாதுகாக்கின்றார். இதற்கு நன்றி பாடலை மோசே பாடுவதே (விடுதலைப் பயணம் 15:1-18) நாம் காணலாம். இதன் மூலம் தன்னால் படைக்கப்பட்ட ஓர் இனத்தை இறைவன் அழித்து இன்னொரு இனத்தை காக்கின்றார்? இல்லையேல் தாம் பாதுகாக்கப்பட்டது இறை செயல் என இஸ்ரேல் மக்கள் உணர்கின்றார்களா? என்ற வினாவை நாம் எழுப்ப வேண்டும்.மேலும் நினிவே பட்டணம் நிகழ்வை நாம் எடுத்து நோக்கும் போது,அம்மக்களை வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் அறியமுடியாத மக்களை எவ்வாறு அழிப்பது என இறைவன் புலம்புகின்றார். (யோனா 4: 11) இங்கே நாட்டு மக்களின் அழிவில் மகிழ்பவர் இறைவன் அல்ல மாறாக யோனாவே. ஏனெனில் கி.மு 721 ஆம் ஆண்டு இஸ்ரயேல் மக்களின் வட அரசு அசீரியர்களால் அளிக்கப்பட்டது.இப்பொழுது நினிவே நாட்டு மக்களின் அழிவில் மகிழ வேண்டும் என எண்ணியிருந்த யோனாவிற்கு பேரதிர்ச்சியை கொடுத்தது. இதனொளியில் இறைவன் பக்கம் சார்ந்து செயல்படுபவர் அல்ல.இன்றைய சமய அடிப்படைவாதம் இறைவனை குறித்து சரியான புரிந்துணர்வை எமக்கு புரிய வைப்பதில்லை.

## சமய அடிப்படைவாதமும் நியாயத்தீர்ப்பு

சமய அடிப்படை வாதத்தினால் பிழையாகப் நடைபெறும் இன்னுமொரு காரியம். ஒருவரை ஒருவர் நியாயந்தீர்ப்பது ஆகும். நியாயத் தீர்த்தல் இறைவனுக்குறிய பணி என்பதை திருமறை தெளிவாகக் காண்பிக்கிறது. (மத்தேயு 13: 36- 43) எனினும் தற்பொழுது நடைமுறையில் உள்ள வைரஸ் தாக்கத்தினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிப்புற்ற மக்களுக்கு இறைவன் தண்டனை அளித்துள்ளார். என்கின்ற செய்தி பரவலாகப் பரவி வருகின்றது.குறிப்பாக மேற்குலக நாடுகள் இறை நம்பிக்கையை இழந்தமை மற்றும் ஓரினசேர்க்கை போன்றவற்றை அனுமதித்தமையே இன்று மேற்குலக நாடுகளில் தீமை அதிகளவு பரவுவதற்கு காரணங்களாக அமைகின்றது. என குற்றம் விடுவோர் ஏராளமாக உள்ளனர். இதற்காக அவர்கள் திருமறை வசனங்களை ஆதாரமாக பயன்படுத்துகின்றனர். உதாரணமாக ஏசாயா 26: 20,21 அடித்தளத்தில் வைரஸின் தாக்கம் கடவுளின் சினத்தால் ஏற்பட்டுள்ளது என கூறுகின்றனர் மேலும் ஊரடங்கு உத்தரவினால் நாம் அறைக்குள் முடங்கி கிடப்பதும் திருமறை நியாயப்படுத்துகின்றது. கடவுள் செயலுக்கு தண்டனை வழங்குகின்றார். என எண்ணினால் அவருக்கு முன்பாக மீந்து இருப்பவன் யார்? உண்மையிலேயே மேற்கூறப்பட்ட பகுதி இஸ்ரவேல் மக்கள் பாபிலோனுக்கு அடிமையாக செல்லுவதற்கு முன்னர் இறைவன் அவர்களை மன திரும்புமாறு ஏசாயா மூலம் எடுத்துக்கூறிய பகுதி ஆகும்.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி புனித செபஸ்தியார் ஆலயம், புனித அந்தோனியார் ஆலயம், சீயோன் தேவாலயம் ஆகிவற்றில் நடைபெற்ற குண்டு வெடிப்பின் காரணமாக உள் நாட்டவர்கள் வெளிநாட்டவர்கள் உட்பட பலர் கொல்லப்பட்டும், அங்கவீனர்கள் ஆக்கப்படம் இருந்தனர். இந்த சம்பவத்திற்கு எதிராக இறை கோபாக்கினை மக்கள் மீது இறங்கி உள்ளது என அனேகர் நியாயப்படுத்தினர். (எசேக்கியல் 6: 1-6) பகுதியை உதாரணமாக காண்பித்து உரோமன் கத்தோலிக்க மக்களின் சிலை வழிபாட்டில் காரணமாகவே இக் குண்டு வெடிப்பு நடைபெற்றது என காரணம் காட்டினர். ஆனால் சீயோன் தேவாலயம் மக்கள் சிலை வழிபாட்டில் ஈடுபடுவது இல்லை. மேலும் விக்கிரக 1ம் என்பது இறைவனையும் மனிதனையும் பிரிக்கும் அனைத்து காரியங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கியுள்ளது. ஆனால் இது ஆளுக்கு ஆள் வேறுபடுகின்றது.எனவே தேவையற்ற முறையில் நியாயம் இருப்பதை நாம் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

சீனாவில் ஏற்பட்ட தவறான உணவுப் பழக்கமே இதற்கான காரணம் என் திருமறை வசனங்களை ஆதாரமாகக் காட்டி வாதிடுவோர் உண்டு. உதாரணமாக லேவியர் 20:20-25,வரையுள்ள பகுதியில் இறைவன் ஒரு சில உணவுகளை உண்ண வேண்டாம் என கட்டளை கொடுத்து இருக்கும்போதே அவைகளை உண்டதன் விளைவாகவே இத்தகைய தீமைகள் உண்டாயின என வாதிடுவோர் உண்டு.ஆனால் பேதுரு கண்ட காட்சியில் இறைவன் அவனை நோக்கி நீ எல்லாவற்றையும் அடித்து புசி என்னால் படைக்கப்பட்டவைகளை அசுத்தமும் தீட்டும் என கூறியவர் யார்? என சவால் விடுகிறார். (திருத்தூதர் பணி 10:15) இயற்கைச் சமநிலையில் பிறப்பும் அழிவும் மாறி மாறி நடைபெறும் ஓர் இயற்கை நிகழ்வாகும். இதனொளியில் எங்களுடன் வாழுமாறு இவ்வுலகத்தில் கடவுளால் படைக்கப்பட்ட சகோதரனோ அல்லது சகோதரியோ செய்யும் தவறினால் நாம் தண்டிக்க படுகின்றோம். இதனையே சமூக பாவம் என அழைக்கின்றோம். இதனொளியில் ஒருவரின் பாவம் இன்னும் ஒருவரை தாக்குகின்றது என்பதே யதார்த்தமாகின்றது. எனவே எந்த ஒரு அழிவையும் இதன் ஒளியில் பார்த்தாள் நாம் இறைவனையோ இறைவனால் படைக்கப்பட்ட படைப்பு களையோ நியாயம் தீர்க்கும் மாதிரியில் இருந்து விலகி இருக்க முடியும்.

**சமய அடிப்படை வாதமும் அறநெறி கொள்கைகளும்**

இயற்கை அழிவுகள் தொற்று நோய்கள் ஏற்படும் வேளையில் மனிதாபிதமான நிவாரண பணிகள் பல்வேறு முறையில் இடம்பெறுவதை நாம் காண்கின்றோம். இப்பணிகள் அன்பின் அடையாளங்களாக அமைதல் வேண்டும். (யோவான் 13: 34,35) மேலும் இவற்றின் ஊடாக நாம் இயேசுவின் அன்பு கட்டளைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றுபவர்களாகவும் (மாற்கு 12:28-35)நியாயத்தீர்ப்பில் இருந்து எம்மை காத்துக் கொள்ளும் ஓர் ஊடகமாகவும் பயன்படுத்தலாம். (மத்தேயு 25:36-41) ஆனால் இவற்றை உபயோகித்து சமய முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ள கூடாது.

நாம் வரலாற்றில் செய்த தவறுகளை மறுபடியும் புதுப்பித்துக் கொள்ள கூடாது. அன்று கிறிஸ்தவத்தை அறிவிப்பதற்கு கல்வி சுகாதாரம் சமூகப் பணி ஆகியவற்றை ஊடகங்களாக பயன்படுத்தப்பட்டன. ஆனால் இன்று இவைகளை ஊடகங்களாக இலகுவில் பயன்படுத்தி விட முடியாது. ஆனால் மறுகரையில் இன்று கிறிஸ்தவர்களால் திருச்சபைகளுக்குள், திருச்சபை மக்களுக்கு நிவாரண பணிகளை மேற்கொள்ளும் போது ஆதார நோக்கங்கள் காரணமாக புகைப்படங்கள் எடுக்கப்படுகின்றன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒரு தாயார் புகைப்படத்தில் நிற்பதற்கு மறுப்புத் தெரிவித்தார். ஏனெனில் நான் எனது ஏழ்மைத் தன்மையை நான் இன்னும் ஒருவருக்கு விற்பதற்கு ஆயத்தம் இல்லை. இக் கூற்று திருச்சபையை சவால் விடுகிறது.எனவே சமய அடிப்படைவாதம் பல சந்தர்ப்பங்களில் மனித மாண்பை மறைத்து சமயங்களுக்கு இடையே போட்டி நிலைமையையும் முரண்பாடுகளையும் ஏற்படுத்துவதே நாம் காணலாம்.

அண்மையில் பல ஊடகங்களில் வெளிவந்த தகவல்களின் அடித்தளத்தில் கிறிஸ்தவ சமயத்தின் வளர்ச்சிக் கொள்கைகளை நோய்களின் பின்னணியில் ஏற்பட்டுள்ளது என கூறப்பட்டது. இதற்கு உதாரணமாக கி.பி 166 ஆம் ஆண்டு உரோமிய மாற்கு அவுரோலியன் காலத்தில் ஏற்பட்ட கொள்ளை நோயின் பின்னணியில் கிறிஸ்தவம் உரோமில் வளர்ச்சியடைந்தது. என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. ஆனால் உண்மையில் முதல் மூன்று நூற்றாண்டுகளில் உரோமில் ஏற்பட்ட கலாபனைகளின் விளைவாகவே கிறிஸ்தவ சமயம் பரவியது. அவர்கள் துன்பங்களை அனுபவிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது அவர்கள் காட்டிய பொறுமை துன்புறுத்தியாவர்களை சிந்திக்க வைத்தது. இதனால் திருச்சபை பிதா தெர்த்தூலியன் அவர்கள் கிறிஸ்தவர்களின் இரத்தமே திருச்சபையின் வித்து என குறிப்பிடுகின்றார்.

**முடிவுரை**

திருமறையில் நாம் காண்கின்ற கடவுள் குறிக்கப்பட்ட அரசியல் பொருளாதார கலாசார சமய சூழலில் மனுவுரு எடுத்த இறைவன் ஆவார். இதன் மூலம் உலகில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் அவர் அதன் ஒரு பகுதியாக காணப்படுகின்றார். எனினும் அவரது இயலா தன்மையையும்,பலமற்ற தன்மையையும் அவர் மனிதரில் தங்கி வாழும் தன்மையையும் நாம் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். கடவுளின் சர்வ வல்லமையுள்ள தன்மை என்பது சர்வாதிகாரத் தன்மை அல்ல. மாறாக அவர் தமது வல்லமையை மனிதர்களுடன் பகிர்ந்து கொண்டுள்ளார். மனிதர்கள் இவ்வளவு தவறாகப் பகிர்ந்து கொள்ளும்போது உலகில் பாவம் பெருகுகின்றது. இந்த சமூக பாவத்தின் விளைவு துன்பமாகும் - இவ் விளைவினால் ஏற்படும் துன்பத்தில் இறைவனும் பங்கு எடுக்கின்றார்.

இந்நிகழ்வு மனிதனின் இயலாத தன்மையை எமக்கு எடுத்து காண்பிக்கின்றது. விஞ்ஞான வளர்ச்சி தொழில்நுட்ப வளர்ச்சி போன்ற வளர்ச்சிகள் ஏற்பட்ட போதிலும் இந்நிலையில் மனிதன் தனது இயலா தன்மையை உணர்ந்து உள்ளான் இந் நிலை மரணத்துக்கு முன்னரான வாழ்வை குறித்து மனுக்குலத்தை சிந்திக்க அழைக்கின்றது.

மனிதர் மீது கொண்ட அன்பின் அடையாளமாக இயற்கை காணப்படுகின்றது. இது இறைவனால் அருளப்பட்ட ஓர் கொடையாகும். இறைவன் இயற்கையை பாதுகாத்து பராமரிக்கும் பொறுப்பை மனிதனிடம் கொடுத்தார். (தொடக்க நூல் 1:28) உக்கிராணக்காராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் மனிதரை நியமித்து போதிலும் அவன் ஆளும் நபராக மாறியதால் இயற்கைக்கு செவிசாய்க்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அதனால் இயற்கை மனிதனுக்கு தனது எதிர்ப்பை வெளியிட்டது. இத்தகைய பாவத்தை இறைவன் மனுக்குலத்திற்கு மன்னித்த போதிலும் இயற்கை தனது எதிர்ப்பை துரிதப்படுத்தியது. இதன் விளைவுகளில் ஒன்று இன்றைய கொரோனா வைரஸ் தாக்கம் ஆகும். எனினும் மீந்திருக்கும் கொள்கையின் அடித்தளத்தில் முற்றாக இடம் பெறாமல் இருப்பது மனுக்குலத்தின் காட்டுகின்ற அன்பும் எதிர்கால நம்பிக்கையும் ஆகும்.

**ஆக்கம் : - அருட்பணி அருளம்பலம் ஸ்டீபன்,**
**இலங்கை இறையியல் கல்லூரி,**
**பிலிமத்தலாவ.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறிஸ்தவ தெரிவு

### அறிவு சார்ந்து தெரிவு செய்யப் போகின்றோமா? அனுதாப வாக்குகளை அள்ளிக் கொடுக்கப் போகின்றோமா?

**அருட்பணி: D.S.மதியாபரணம்**

கிறிஸ்தவ தெரிவு எனும் தொனிப் பொருளில் இறையியல் களஞ்சியம் வெளியீடு செய்கின்ற காலம் இலங்கைத் தேசம் பாராளுமன்ற தேர்தலை எதிர்நோக்கியிருக்கும் காலம். நாடு முழுவதிலும் கொரோனாவின் கொடூரத்தை மறந்து அரசியல் பிரமுகர்கள், வாலிபர்கள், பெண்கள், முதியவர்கள் என எல்லாரும் பரப்புரைகளிலே இறங்கியுள்ளாரகள்.

225 பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்ய ஆயிரக்கணக்கானவர்கள் போட்டிகளில் இறங்கியுள்ளார்கள். இந்தப் போட்டி சமூகங்களை கூறுபோட்டு குழி தோண்டிப் புதைக்கின்றது.

அன்று யுத்த காலத்தில் போராளிகள் என்ற பெயரிலும் இன்று அரசியல் கட்சிகள் என்ற பெயரிலும் சமூகத்துக்கும், சாதிக்கும் ஒரு கட்சி என்று, அல்லது சமயங்களுக்கு ஒரு கட்சி என்று உருவானாலும் ஆச்சரியயப்படுவதற்கு ஒன்றுமில்லை. இப்படியான கட்சிகளை உருவாக்க பெரும்பான்மை அரசியல் கட்சிகள் ஆயத்தமாகவும் இருக்கலாம்.

யுத்தம் முடிந்து பத்து வருடத்தில் எம் கட்சிகள் சாதித்தவை என்ன? என்று நாம் கேட்கும் அதே நேரத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்த நாமும் எம்மை கேட்க வேண்டும். நாம் யாரைத் தெரிவு செய்தோம். பல வேளைகளில் நாம் செய்யும் தெரிவுகள் அனுதாப வாக்குகளாக மாறுகின்றன. அறிவு சார்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்குகளை போடுவதில்லை. இதற்கு அரசியல் கட்சிகளா பொறுப்பு? அல்லது வாக்குப் போடும் நாமா பொறுப்பு?

அறிவியல் ஆர்வமுள்ளவர்களை நாம் தெரிவு செய்வது எமது தலையாய பொறுப்பு. திரும்பவும் அனுதாப அலைகளைக் குறித்து எழுதுகிறேன். இந்நாட்டின் பிரதமர் கௌரவ S.W.R Do பண்டாரநாயக்கா சுட்டுக்கொல்லப்பட்ட போது அவரது பாரியார் திருமதி சிறிமாவே பண்டாரநாயக்கா அனுதாப வாக்குகளினால் அரசியலுக்கு வந்து உலகின் முதல் பெண் பிரதமர் என்ற பெயரைத் தட்டிக் கொண்டாலும், பின்னர் அறிவியல் சார்ந்த அரசியலை ஆரம்பித்தார். ஒரு நாட்டின் உள்ளூர் வளங்களைக் கொண்டு எப்படி அபிவிருத்தி அடையலாம் என்பதனை தன் அறிவியலுக்கூடாக ஆரம்பித்தார். அது தான் “தன் நிறைவு பொருளாதாரக் கொள்கை” அந்நாட்களில் பஞ்சமிருந்தது என பலர் கூறினாலும் அவ் அறிவியல் சார்ந்த கொள்கையை பின் வந்த அரசியல் தலைவர்கள் நாம் தெரிவு செய்து அனுப்பும் பாராளுமன்ற உறுப்பினர் அறிவியல் சார்ந்த ஆட்சியை நடாத்தி இருந்தால் இந்நாடு இவ்வளவு அழிவுகளையும், பொருளாதாரத்தில் சந்தித்திருக்காது இன்று நாம் காணும் சோம்பேறு பொருளாதார கொள்கை வலுவடைந்திருக்காது இன்று பாராளுமன்றம் செல்பவர்கள் என்ன செய்யப் போகின்றார்கள் என்பதை விட நாம் யாரை அனுப்புகின்றோம் என்பதை சிந்திக்க வேண்டும். நாம் திரும்பவும் எம்மைப் பார்த்துக் கேட்போம். அறிவியல் சார்ந்தவர்களுக்கு எம் வாக்குகளைக் கொடுத்தோமா? அல்லது ஏமாற்றுக் காரர்களுக்கும் பொய்யர்களுக்கும் பொன்னான வாக்குகளை மண்ணாக்கிறோமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று உலகமும் சரி அல்லது நம் நாடும் சரி, தீமையைத் தான் அதிகம் பார்க்கிறோம். அதற்குத்தான் முன்னுரிமை கொடுக்கின்றோம். உதாரணமாக இயேசு சொல்லிய மத் 13:26 – 30 கோதுமையும் களைகளும் உவமையில் பண்ணையாளரின் பார்வை கோதுமையின் பக்கம் இருக்க பணியாளர்களின் பார்வை முழுவதும் களைகள் பக்கம் இருந்தது. அதாவது இந்த உவமையின் படி தீமையான எண்ணங்கள் மேல் இருந்தது. அப்படித்தான் இன்றைய அரசியல் கட்சிகளும் தாங்கள் பாராளுமன்றம் சென்றால் என்ன செய்வோம் என்று கூறுவதைக் குறைத்து, மற்றைய கட்சிகளை குறை கூறுகின்றார்கள். குறை கூறும் படலத்தை அரங்கேற்றும் கட்சிகளை இந்நாட்களில் நிராகரிக்க வேண்டும்.

நாம் தெரிவு செய்து அனுப்புபவர்கள் அறிவியல் சார்ந்து பணிகளையாற்ற வேண்டும். உதாரணமாக ஆயிரக் கணக்கான படித்தவர்கள் இருக்கின்றார்கள். இவர்களின் கல்வித் தகைமைக்கேற்ப தொழில்களை உருவாக்க அறிவை பயன்படுத்த வேண்டும். அல்லது ஆயிரக்கணக்கான விதவைகள் இருக்கின்றார்கள் என பத்து வருடங்களாக பேசும் நாம் தெரிவு செய்த உறுப்பினர்கள் கோழி, ஆடு, மாடு, வளர்ப்புக்கள் என பேசி காலத்தை ஓட்டினார்கள். இது அறிவைச் சார்ந்த அரசியல் அல்ல, நம் நாட்டு உள்ளூர் உற்பத்திகளை பெருக்கி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கூடாக கைம்பெண்களின் பொருளாதாரம் உயராதா? இதைக் குறித்து அறிவு சார்ந்தவர்கள் பேச வேண்டும். இப்படியானவர்களை கிறிஸ்தவர்கள் தெரிவு செய்ய வேண்டும். திருமறையில் ஒரு எடுத்துக்காட்டைக் கூறுகின்றேன். திருத்தூதர்கள் பணியில் (அப் 6: 1 - 7) வரையான பகுதியில் கிரேக்க மொழி பேசுவோர் தம் கைப் பெண்கள் அன்றாடப் பந்தியில் முறையாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனிக்கப்படவில்லையென எபிரேய மொழி பேசுவோருக்கு எதிராக முணுமுணுத்தனர். அப்போது பன்னிரண்டு திருத்தூதர்களும் சீடர்களை அழைத்து நாம் இறைவார்த்தையை கற்பிப்பதை விட்டு விட்டு பந்தி விசாரிப்பு செய்வது முறையல்ல, அதனால் உங்களிடம் நற்சான்று பெற்றவர்களும், தூய ஆவி அருளும் வல்லமையும், ஞானமும் நிறைந்த ஏழு பேரை தெரிவு செய்தார்கள்.

தெரிவுகள் என்பதற்கு இது நல்ல எடுத்துக் காட்டு, கைம் பெண்களை கவனிப்பதற்குக் கூட நற்சான்று பெற்றவர்கள் ஆன்மீகப் பெலன் உள்ளவர்கள், அறிவுள்ளவர்களைத் தெரிவு செய்கிறார்கள். இன்று பாராளுமன்றத்தில் நற்சான்று பெற்றவர்கள் இறை நம்பிக்கை உள்ளவர்கள் அறிவு உள்ளவர்கள் உள்ளார்களா சிந்திக்க வைக்கின்றது. திருமறையில் இஸ்ரவேல் மக்களின் வரலாற்றைப் படித்தால் காலத்துக் காலம் இறைவன் பெலவீனமானவர்களை பல்துறை வித்தகராக்கி தன்நோக்கத்தை நிறைவேற்றுகின்றார். உ-ம் யாவோக்கோவின் மகன் யோசேப்பு, தலைவனாகிய மோசே, தாவீது போன்றோர்களும் இறைவாக்குனர்கள், ஆண், பெண் நீதித் தலைவர்கள் போன்றோர் நல்ல உதாரணமாகும்.

நாம் யாரைத் தெரிவு செய்யப் போகிறோம் ஊழல் செய்தவர்களையும், பாலியல் துஸ்பிரயோகம் புரிந்தவர்களையும், வன்முறையாளர்களையும், கொலையாளிகளையும், பொய்யர்களையும், நீதி மன்றங்களில் வழக்குகள் உள்ளவர்களையும் இன, மத, மொழி பேசி காழ்புணர்ச்சிகளை உருவாக்குகின்றவர்கள் என அடுக்கிக் கொண்டே போகலாம். இவர்களா நம் தெரிவு? நாம் சிந்திக்காது விட்டால் இனி வாழ்வே இல்லை என்றே ஆகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இடத்தில் சபை இறை பணியாளர்களுக்கு ஓர் அறை கூவலை விடுகின்றேன் எங்கள் சபை மக்கள் ஏமாந்து போகாதபடி அறிவுள்ளவர்களைத் தெரிவு செய்ய உற்சாகப்படுத்துவோம். குருமாரே கொள்கையில்லா அரசியலின் பின்னால் நிற்கும் போது மக்களை யார் வழிநடத்துவது என்பதும் ஒரு கேள்வி என மக்கள் சிந்திக்க தொடங்கி விட்டார்கள்.

இன்று பல இந்து ஆலயங்கள், பௌத்த விகாரைகள் அமைந்த இடங்கள் என்றும் பல இந்து ஆலயங்கள் சிங்கள அரசர்களினால் கட்டப்பட்டது என தொல்பொருள் ஆராய்ச்சி மையம் கூறுகின்ற இச்சூழலில், எம் நிலை அல்லது நாம் தெரிவு செய்து அனுப்பும் உறுப்பினர்கள் இக்கொள்கைகளை தடுத்து நிறுத்துவார்களா? பொறுத்திருந்து பார்ப்போம்! எம் தெரிவுகள் அறிவியல் தெரிவாக இருக்கட்டும்

**அருட்பணி D.S.மதியாபரணம்,**
**இயக்குணர்,**
**வன்னி மிஷன்,**
**முறிகண்டி,பாரதிபுரம் திருச்சபை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையுள்ள அரசியல் வாதி யார்?

**அருட்பணி : அருளம்பலம் ஸ்டீபன்**

நாம் அனைவரும் எமது பிரதேசத்தில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்யும் ஓர் காலகட்டத்தில் வந்துள்ளோம். எமது வாக்குகள் அனைத்தும் ஜனநாயகத்தின் ஓர் வெளிப்பாடு ஆகும். மேலும் ஜனநாயகம் மிகவும் பெறுமதி உள்ள ஒன்றாகும். இந்த தீர்மானமிக்க கால கட்டத்தில் பெறுமதியுள்ள வாக்குகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பது எல்லோர் மனதிலும் எழுகின்ற ஓர் கேள்வியாகும். எனவே உண்மையான ஓர் அரசியல்வாதி என்பவன் யார்.? என்பதைக் குறித்து ஒரு சில குறிப்புக்களை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

**இறைவன் ஓர்அரசியல் வாதி**

அரசியல் என்ற பதம் இன்று பல்வேறுபட்ட சூழ்நிலைகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. உண்மையில் பொலிடேஸ் என்றகிரேக்க சொல்லில் இருந்து Politics என்ற ஆங்கில சொல் பிறந்துள்ளது. ஓர் நகரத்தில் காணப்படும் தீமைகளுக்கு எதிராக ஓர் மனிதன் செயற்படுவதே அரசியல் என்பதன் அர்த்தம் ஆகும். திருமறையில் தன்னை வெளிப்படுத்தும் கடவுள் ஓர் அரசியல் வாதியாக வெளிப்படுத்தப்படுகின்றார். விடுதலைப்பயணம் 3:7இல் இறைவன் எகிப்திலே அடிமைத்தனத்தில் வாழும் மக்களின் விடுதலைக்காக செயற்படுவதை நாம் பார்க்கின்றோம். இச்செயற்பாடு குறிக்கப்பட்ட மனுக்குலத்திற்குள் மட்டும் கட்டுப்படுத்தப்படாமல் அனைவருக்கு முரியதாக அமைவது வியக்கத்தக்க ஒன்றாகும்.(ஆமோஸ்9:7)

இறைவனால் அனுப்பப்பட்ட இயேசுவும் இத்தகைய பணியிலே தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். இதனை தனது நாசரேத்தூர் அறிக்கையில் தெளிவாக காண்பித்தார். (லூக்கா4:16-21). இதன்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் விடுதலைப் பணியை தொடந்து நடாத்துவதற்கு கடவுள் தன்னை தெரிந்து கொண்டார் என இயேசு முழுமையாக நம்பினார். இதன் மட்டில் இப்பணியை தொடந்து ஆற்றுமாறு சீடர்களை உலகிற்கு அனுப்பினுயுள்ளார் (யோவான்20:21). இதனொளியில் நாம் நம்பும் கடவுள் ஓர் அரசியல்வாதி என்பதை நாம் மறந்து விடக்கூடாது. எனவே இவ்வரசியல் வாதியாகிய இறைவன் எம்மிடம் எதிர்பார்க்கும் அரசியல் பண்புகள் எவை என்பதை சுருக்கமாக ஆராய விரும்புகின்றேன்.

## நீதியின் பக்கம் நிற்றல்

திருமறையில் வெளிப்படும் இறைவன் எப்பொழுதும் ஒடுக்கப்படும் மக்களுடன் தன்னை அடையாளப்படுத்துவதை நாம் பார்க்கலாம். இதனை நிரூபிக்கும் வகையில் ஆண்டவர் இயேசு தன்னிடமிருந்த அதிகாரங்கள் அனைத்தையும் வெறுமையாக்கினார் (பிலிப்பியர்2:5-11). மேலும் ஒடுக்கப்பட்டவர்களோடு தன்னை அடையாளப்படுத்தி (மாற்கு 10:12-14), ஒடுக்குபவர்களுக்கு எதிராக குரலெழுப்பினார்(மாற்கு10:17-22). இதனொளியில் ஒடுக்கப்பட்ட மக்கள் சார்பில் குரலெழுப்பி ஒடுக்குபவர்களின் குரல் வளையை நசுக்குகின்ற தலைமைத்துவங்களை நாடுவதே இறைவன் எதிர்பார்க்கும் முக்கியமான அரசியல் பண்பாகும்.

## இறையாட்சியை நோக்கிய பயணம்

எபிரேய மொழியில் "மல்குத் யாவே"எனவும்,கிரேக்க மொழியில் "பசிலய்யா"எனவும் இறையாட்சி அழைக்கப்படுகின்றது. மனித ஆட்சியின் வீழ்ச்சியில் எழுந்த சிந்தனையே இறையாட்சி ஆகும். மனுக்குல ஆட்சி மீது களைப்புற்ற மக்கள் இறையாட்சியில் இறைவனின் ஆளுகைக்குள் தங்களை முழுமையாக அர்ப்பணிக்கும் நிலையே இதுவாகும். இவ்வாட்சி நல் விழுமியங்களை குறிப்பாகநீதி, நேர்மை, உண்மை, ஒப்புரவாகுதல், அமைதி, மன்னிப்பு போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்புகளை மையமாகக் கொண்ட ஓர் ஆட்சி ஆகும். இவ்வாட்சியின் விழுமியங்களை தன்னகத்தே ஒவ்வொரு அரசியல் வாதிகளும் கொண்டிருக்க வேண்டும் எனபிரதான அரசியல் வாதியாகிய இறைவன் எதிர்பார்க்கின்றார்.

## இறைவாக்கு உரைக்கும் பணி

ஒவ்வொரு அரசியல் வாதியும் இறைவாக்கு உரைக்கும் தன்மையை கொண்டிருக்க வேண்டும் என இறைவன் எதிர்பார்க்கின்றார். இதனையே ஆண்டவர் இயேசு தனது வாழ்வில் எடுத்துக்காட்டினார் (லூக்கா13:332). இயேசு மக்களை நோக்கி, "இன்றைக்கும் நாளைக்கும் நான் உங்களுடன் இருந்து புதுமைகளை செய்வேன். நாளை மறுதினம் உங்களிடத்தில் இருந்து புறப்பட்டு செல்லுவேன்".என்பதை நீங்கள் அந்த நரிக்கு போய்ச் சொல்லுங்கள் எனக் கூறி ஏரோதுவின் ஆட்சியை விமர்சித்தார். இயேசு ஏரோதுவின் ஆட்சியின் ஓர் பகுதியாக மாறாமல் அவரின் செயற்பாடுகளை விமர்சிக்க தயங்கவில்லை. இதனையே இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் ஜேர்மனியில் வாழ்ந்த இறையிலாளரான பொன் கொபர் வலியுறுத்துகின்றார்.எனவே இத்தகைய பண்புகளுள்ள அரசியல் வாதிகளை இறைவன் நேசிக்கின்றார்.

## பொதுநலம் நோக்கிய வாழ்வு

அரசியல் வாதியாகிய கடவுள் எப்பொழுதும் பொது நலத்தன்மையுள்ளவராக காணப்படுகின்றார். ஆண்டவர் இயேசுவும் இத்தகைய பண்புகளோடே வாழ்ந்தார். அவர் புதுமைகளை ஆற்றிய பின்னர் எப்பொழுதும் தான் அதை புரிந்ததாக தம்பட்டம் அடிக்கவில்லை. மாறாக அனைத்து மாட்சியும் இறைவனுக்கே செலுத்தப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். மாற்கு 5:19 இல் பிசாசு பிடித்தவரை நோக்கி,"இறைவன் உனக்கு இரங்கிசெய்த இந்த புதுமையை உன் வீட்டாரோடு நீபகிர்ந்து கொள்"என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு தனக்குரிய மாட்சியை அவர் எடுக்கவில்லை எனவே சொந்த புகழுக்காக, குடும்ப நலன்களுக்காக செயற்படுவோர் இறைவனின் பார்வையில் நல்ல அரசியல் வாதிகளாக கருதப்பட மாட்டார்கள்.

**மறைமுக நிகழ்சித்திட்டம் அல்லாத அரசியல்**

இன்றைய அரசியல் வாதிகளில் பெரும்பாலானோர் மறைமுக நிகழ்ச்சி திட்டங்களின் அடித்தளத்திலேயே தமது பொருத்தனைகளையும், பணிகளையும் ஆற்றி வருகின்றனர். ஆனால் இவைகளில் இறைவன் பிரியப்படுபவர் அல்ல. உதாரணமாக மாற்கு 7:24-30 வரையுள்ள பகுதியில் ஆண்டவர் இயேசு நோயுற்றிருந்த கானானிய பெண்மணியின் மகளை குணமாக்குகின்றார். இத்தகைய நன்மையை புரிந்த பின்னர் அவர் தாயையோ அல்லது மகளை யோயூத சமயத்திற்கு வரும்படி அழைக்கவில்லை. அதாவது தன்னுடைய வல்ல செயல்களை மற்றவர்களை தன்பக்கம் இழுக்கும் கருவியாக பயன்படுத்தவில்லை. எனவே ஒவ்வொரு அரசியல் வாதியும் நன்மை செய்வதிலே இலக்குள்ளவனாக இருக்க வேண்டுமே தவிர தனது கட்சியை சார்ந்தவர்களுக்கு மாத்திரம் நன்மை செய்யும் பண்பை கொண்டிருப்பார்களே எனில் அவர்கள் இறைவன் பார்வையில் சிறந்த அரசியல் வாதிகளாக கருதப்பட மாட்டார்கள்.

**மற்றவர்களை மதிக்கும் பண்பு**

ஓர் அரசியல் வாதிதன் தோட்டத்தில் மலரும் மல்லிகை தான் மணம் வீசும் என்ற நம்பிக்கையில் இருந்து விலகி மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணம் வீசும் என்ற பண்புள்ளவனாக மாற வேண்டும். மாற்கு 9:38-42 வரையுள்ள பகுதியில் ஒரு முறை இயேசுவின் சீடர்கள் அவரிடத்தில் வந்து"ஐயா உம்முடைய நாமத்திலே இன்னுமொருவர் பேய்களை துரத்துவதை நாம் கண்டோம். அவரை நாம் தடுக்க முற்பட்டோம்"என்றார்கள். அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி "தடுக்க வேண்டாம் என் நாமத்தினாலே யார்யார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மைகளை செய்கின்றார்களோ அந்த நன்மைகள் வளர பணியாற்றுங்கள்"என்றார். எனவே ஒவ்வொரு அரசியல் வாதியும் மற்ற அரசியல் வாதிகள் செய்யும் பணிகளை பாராட்டவும், வளர்க்கவும் அழைக்கப்படுகின்றனர். அதுவே இறைவன் விரும்பும் அரசியல் வாதிகளுக்குரிய மிகச்சிறந்த பண்பாகும்.

## நன்மை செய்து தீமை அனுபவித்தல்

ஆண்டவர் இயேசு மக்கள் மீதுகொண்ட அன்பின் நிமித்தம் அவர்களுக்கு பல்வேறுபட்ட நன்மைகளை செய்து வந்தார். ஆனால் சமய தலைவர்களும் அரசியல் வாதிகளும் ஒன்றிணைந்து அவர்மீது பொய்க்குற்றம் சுமத்தி அவரை சிலுவையில் அறைந்தனர். உண்மையான அரசியல் வாதிக்கு கிடைக்கும் பரிசு மரணமாகும். அவர் தன்மக்களுக்காக தன் உயிரை கொடுக்கின்றான். உண்மையான அரசியல் பண்புகளை கொண்டு வாழ்ந்த ஆண்டவர் இயேசுவை சிலுவையில் அறைந்து சிலுவையின் மேல் "அவன் யூதரின் அரசன்" என எழுதினார்கள். எனவே உண்மையான அரசியல் வாதி மக்களிடமிருந்து சேவையை பெறுபவனாக அல்லாமல் மக்களுக்கு சேவையை வழங்கி மக்களுக்காக மரிக்கவும் ஆயத்தமாக வேண்டும். இதனையே உண்மையான அரசியல் பண்பு என எசேக்கியல் இறைவாக்கினரும் கூறுகின்றார் எசேக்கியல் 34:10 இல் ஓர் அரசியல்வாதி தன்னிடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள மந்தைகளை அடித்துப் புசித்து இன்பம் காணாமல் மந்தையை வலுவூட்டவும் அதனை அரவணைக்கவும் அழைக்கப்படுகின்றான். இதுவே உண்மையான அரசியல் வாதியின் பண்பாகும்.

## கணக்கு ஒப்புவித்தல்

உண்மையான ஒரு அரசியல் வாதிதான் செய்யும் ஊழியம் தொடர்பாக கணக்கு ஒப்புவிக்கும் தன்மையுடையவராக கருதப்படுகின்றார். அதாவது இதனை ஒரு ஊழியமாக அவர் கருத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். இவ்வூழியத்தை அவர் நேசிக்க வேண்டும். இறுதி தீர்ப்பு எமது செயல்களின் அடித்தளத்திலேயே நிச்சயிக்கப்படுகின்றது. எனமத்தேயு 25:31-46 வரையுள்ள பகுதியில் காணப்படுகின்றது. அதாவது நான் பசியாயிருந்தேன் எனக்கு ஆகாரம் தந்தீர்கள் தான் தாகமாயிருந்தேன் எனக்கு தண்ணீர் தந்தீர்கள் நான் ஆடையின்றி இருந்தேன் எனக்கு ஆடை தந்தீர்கள் நான் சிறையிருந்தேன் என்னை வந்து பார்த்தீர்கள் இந்த சிறியவர்களுக்கு எதை செய்கின்றீர்களோ அதனை எனக்கே செய்தீர்கள் என்கின்றார் ஆண்டவர். எனவே மக்கள் சேவை மகேசன் சேவை ஆகும். அரசியல் வாதிகள் ஒவ்வொருவரும் மகேசனுக்கு கணக்கு கொடுக்கவேண்டும்.

**ஆக்கம்: அருளம்பலம் ஸ்டீபன்**
**இலங்கை இறையியல் கல்லூரி**
**பிலிமத்தலாவ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் – ஒரு பொறுப்பு சார் போக்கு பற்றிய நோக்கு

அருட்பணி S.D.P.செல்வன்

## 1. அறிமுகம்:

தேர்தல் என்பது என்ன? தெரிவு. ஓப்பீட்டடிப்படையில் ஆரோக்கியமான யதார்த்தத்தை உறுதி செய்ய மேற்கொள்ளப்படும் முயற்சி. பொருத்தமானவர்களை ஒரு நாட்டின் அரச இயந்திர பொறிமுறையை, முறையாக ஒழுங்குகளுடன் இயக்க, அதிகம் பொருத்தமானவர்களை தெரிவு செய்ய, குடிமக்கள் அனைவரும் மேற்கொள்ளும் ஒரு கூட்டு நடவடிக்கையே தேர்தல். குடிமக்கள் நலனை பேண அல்லது குடிமக்களை ஏமாற்றி தமது ஆதிக்கத்தை உறுதி செய்ய, சில தனியாட்கள் மற்றும் அவர்களுடனுள்ள ஒரு கட்சி அல்லது சில கட்சிகள், மிகுந்த அர்ப்பணிப்புடன் வாக்குறுதிகளை முன்வைத்து, பேரம்பேசுதலில் ஈடுபடும் ஒரு சந்தர்ப்பம். "பொறுப்புடன் அனைவரும் அனைத்திலும் ஈடுபட்டு வாழவேண்டும்" எனும் நிலைப்பாடுடையோர் முதல்,"அரசியல் என்பது சாக்கடை" எனும் நிலைப்பாட்டை எடுத்தோர் வரை அனைவரும் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் நலன் பேணலை உறுதி செய்ய அல்லது ஏமாற்றப்படலை அங்கீகரிக்க, ஜனநாயக கட்டமைப்பு ஊடாக அங்கீகாரம் (ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிப்பு அல்லது பங்கேற்காமை)வழங்கலை (வாக்களித்தல்) வெளிப்படுத்த குடிமக்களுக்கு தரப்படும் சந்தர்ப்பம்.

மக்கள் நலன், நாட்டில் ஆரோக்கியமான யதார்த்தம், பொருத்தமான தலைமைத்துவம், பேண்தகு பொறுப்புக்கூறல்... போன்றன பேணப்படுவது அனைவருக்கும் அவசியம். இலங்கையில் எதிர்வரும் ஆகஸ்ட் 05, 2020 இல் பாராளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ள இன்றைய சூழ்நிலையில் குடிமக்களாக பொறுப்புடன் பொருத்தமான நடவடிக்கைகளில் ஈடுபடுவது அவசியம்கொவிட் 19 தொற்று மீண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவும் நிலை இலங்கை உட்பட பல நாடுகளில் ஆரம்பித்துவிட்டது என்னும் செய்தி தேர்தலுடன் தொடர்புபடுத்தி எப்படி நோக்கப்படுகிறது? வாழ்வை உறுதி செய்யும் பொறுப்புப் போக்கு அரசியல்வாதிகளிடம் மட்டுமல்ல சாதாரண மக்களிடமும் ஏன் அருகி வருகிறது?

## 2. யதார்த்தம்:

### 2.1. கொவிட் 19 தொற்று புள்ளிவிபரங்கள் - ஜுலை 15, 2020 02.06 GMT

| நிலை | உலகு | | இலங்கை | |
|---|---|---|---|---|
| | தொகை | வீதம் | தொகை | |
| ஆரோக்கியமானோர் | 7,847,226 | 93% | 1988 | சனத்தொகை 21,416,733 |
| நோய்த்தொற்றுக்குள்ளானோர் - கடுமையாகாத நிலையிலுள்ளோர் | 4,969,432 | 99% | 666 | |
| நோய்த்தொற்றுக்குள்ளானோர் - ஆபத்தான நிலையிலுள்ளோர் | 59,579 | 1% | 1 | |
| இறந்தோர் | 581, 221 | 7% | 11 | |
| தொற்றுகள் | 13,457,458 | | 2665 | |

கொவிட்19 தொற்றுத் தவிர்ப்பு நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்படுகின்றனவா? சாவு அச்சுறுத்தலை கணக்கெடுக்காத நிலை பொருத்தமானதா? இது எத்தகைய அடையாளத்தை தருகிறது?

### 2.2. தேர்தல் தொடர்பாக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் - ஒரு கண்ணோட்டம்

தேர்தல் ஆகஸ்ட் 05 இல் நடைபெற திட்டமிடப்பட்டது. கொவிட் 19 தொற்றுத் தவிர்ப்பு நடவடிக்கைகள் இறுக்கமாக கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது. முடக்கம் மற்றும் ஊரடங்கு அமுல் செய்யப்படாவிட்டாலும் பொறுப்புடன் அனைவரும் முற்காப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கைகளில் ஈடுபவடவேண்டும் என சுகாதாரத்துறை வலியுறுத்தி வருகிறது. ஆனாலும் பொறுப்புடன் வாழ்வு உறுதி செய்யப்படுகிறதா? கொவிட் 19 தொற்றை கடந்து, தேர்தலை மையப்படுத்தி நோக்கும் போது ஆரோக்கியமான யதார்த்தம் உறுதி செய்யப்பட இன்றைய சூழ்நிலையில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் பொருத்தமானவையா? இதனை ஆய்வுக்குட்படுத்த சில சமகால முன்னெடுப்புகளை நோக்குவது பொருத்தமானது:

### 2.2.1. தேர்தல் பற்றிய சில விபரங்கள்

| பாராளுமன்ற தேர்தல் - 2020 ஆகஸ்ட் 05 | | | | |
|---|---|---|---|---|
| மாகாணங்கள் | தேர்தல் மாவட்டங்கள் | ஒதுக்கப்பட்ட இடங்கள் | வேட்பாளர்கள் | வாக்காளர் |
| வடமாகாணம் | யாழ்ப்பாணம்<br>வன்னி | 07<br>06 | 330<br>405 | 571,848<br>287,024 |
| வடமத்திய மாகாணம் | அநுராதபுரம்<br>பொலநறுவை | 09<br>05 | 264<br>152 | 693,634<br>331,109 |
| வடமேல் மாகாணம் | குருநாகல்<br>புத்தளம் | 15<br>08 | 396<br>352 | 1,348,787<br>614,370 |
| கிழக்கு மாகாணம் | மட்டக்களப்பு<br>அம்பாறை<br>திருகோணமலை | 05<br>07<br>04 | 304<br>540<br>189 | 409,808<br>523,979<br>288,868 |
| மத்திய மாகாணம் | கண்டி<br>மாத்தளை<br>நுவரெலியா | 12<br>05<br>08 | 435<br>184<br>275 | 1,129,100<br>407,569<br>577,717 |
| மேல் மாகாணம் | கொழும்பு<br>கம்பகா<br>களுத்துறை | 19<br>18<br>10 | 924<br>693<br>312 | 1,709,209<br>1.785,964<br>972,319 |
| ஊவா மாகாணம | பதுளை<br>மொனராகலை | 09<br>06 | 288<br>171 | 668,166<br>372,155 |
| சப்ரகமுவ மாகாணம் | இரத்தினபுரி<br>கேகாலை | 11<br>09 | 308<br>228 | 877,582<br>684,189 |
| தென் மாகாணம் | காலி<br>மாத்தறை<br>அம்பாந்தோட்டை | 09<br>07<br>07 | 312<br>200<br>190 | 867,709<br>659,587<br>493,192 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல் மாவட்டங்கள் 22 இலுமிருந்து 196 உறுப்பினர்கள் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஏனைய 29 உறுப்பினர்களும் தேசியப் பட்டியல் மூலம், அவர்களது கட்சிகள், மற்றும் சுயேச்சைக் குழுக்கள் பெற்ற வாக்குகளின் விகிதாசாரப்படி நியமிக்கப்படுகின்றனர் 18 வயதிற்கு மேற்பட்ட இலங்கைக் குடியுரிமை பெற்ற ஒவ்வொருவருக்கும் வாக்களிக்கும் உரிமை உண்டு. வாக்காளர் ஒருவர் தமக்கு விருப்பமான ஒரு கட்சிக்கும், அக்கட்சியில் போட்டியிடும் வேட்பாளர்களில் ஆகக்கூடியது மூவருக்கு தனது விருப்பத்தேர்வுகளையும் இடலாம். ஆனாலும் வேட்பாளர் விருப்பத்தேர்வு கட்டாயமானது அல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தேர்தலில் 304 அரசியற்கட்சிகளும் (3652 வேட்பாளர்கள்) 313 சுயேட்சை குழுக்களும் (3800 வேட்பாளர்கள்) போட்டியிடுகின்றன.

### 2.2.2. தேர்தல் பரப்புரைகளிலிருந்து...[10]

- சமயோசித அரசியலை சரணாகதி அரசியலாகக் கருதும் நிலைப்பாடுகளைக் கைவிட வேண்டிய காலமாற்றத்துக்குள் சிறுபான்மைச் சமூகங்கள் வாழ்வதாக...(திகாமடுல்ல மாவட்ட வேட்பாளர் அஷ்பர் - சிறீலங்கா பொதுஜன பெரமுன)
- அரச துறையை செயலற்றதாக்குவதற்கு கடந்த அரசாங்கங்கள் மேற்கொண்டிருந்த தீர்மானங்களை மாற்றி தமது ஆட்சிக் காலத்தில் அரச துறையை பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர், பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
- கொரோனா மோசமாக பரவ ஆரம்பித்துள்ளதால் மக்களின் நலனுக்காக தேர்தலை பிற்போடுவதே உகந்தது பொதுத் தேர்தலை ஒத்திவைக்குமாறு ஐ.தே.க தலைவர் ரணில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கிரமசிங்கவும் ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாஸவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- கொரோனா வைரசினை காரணம் காட்டி சிலர் தேர்தல்களை பிற்போட முயல்கின்றனர். தேர்தலில் வெற்றிபெறமுடியாது என தெளிவாக தெரிந்துள்ளதால் இந்த முயற்சிகளில் அவர்கள் ஈடுபடுகின்றனர்

(பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ்)

- இலங்கையில் 2020 பாராளுமன்றத் தேர்தலுக்கான பிரசாரங்களில் போட்டியிடும் வேட்பாளர்களோ அரசியல் கட்சிகளோ இதுவரை உருப்படியான பொருளாதார நிலைப்பாடுகள் பற்றி குறிப்பிடவில்லை (முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட)
- தமிழ் மக்களும் அரசின் பங்காளராக வேண்டும். இந்த அரசாங்கமே ஆட்சிக்கு வர இருக்கும் நிலையில் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை தமிழ் மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

(பிரபல கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன்)

- எதிர்வரும் காலங்களில் தமிழ், முஸ்லிம் சமூகம் ஒன்றுபட்டு அரசியலில் பயணிக்க வேண்டிய தேவைப்பாடு இந்த கால அரசியலை பொறுத்த வரையில் இருக்கின்றது.

((முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம்.எஸ்.எஸ்.அமீர் அலி, மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர், ஐக்கிய மக்கள் சக்தி கட்சி)

- மக்களுக்கு சேவை செய்து விட்டுத்தான் நான் உங்கள் முன்னால் வந்திருக்கின்றேன். ஆகவே நிச்சயமாக யாழ் மக்கள் என்னுடைய வெற்றிக்கு பங்களிப்பு நல்குவார்கள். நாங்கள் மூன்று பிரதிநிதித்துவங்களை யாழ் மாவட்டத்தில் இருந்து பெற்றுக் கொள்வோம்" என்று சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் முதன்மை வேட்பாளரும், சிவன் பவுண்டேசன் அமைப்பின் இயக்குனருமான கணேஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலாயுதம் தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

- எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் (ஆளும் மற்றும் எதிர்த்தரப்புகளில்) அதழல் முஸ்லிம்களின் அரசியல் சமநிலையைப் பேணும் வகையில் மக்கள் பிரதிநிதிகள் பாராளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்படுவதுடன் முஸ்லிம் சமூகம் சார்பான எம் பி. க்களின் எண்ணிக்கையும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். (கட்டுரை ஆசிரியர் ஏ. எல் நிப்ராஸ்)
- சிவில் செயற்பாடுகளில் இராணுவம் நுழைந்துள்ளதால் ஜனநாயகம் அச்சுறுத்தலில்... -

(அநுரகுமார திசாநாயக்க, ஜே.வீ.பி)
- நாட்டை சர்வாதிகாரத்தின் பக்கம் கொண்டு செல்லும் 20ஆம் திருத்தத்தை ஆதரிக்க மாட்டோம்...(கொழும்பு மாவட்ட வேட்பாளர் சம்பிக்க ரணவாக்க, ஐக்கிய மக்கள் சக்தி)
- தேர்தல் பிரசாரங்களில் விடுதலைப்புலிகளே முக்கியமான பேசுபொருளாக மாறியிருக்கிறார்கள்...(கட்டுரை ஆசிரியர் கபில்)
- இலங்கை தேர்தல் பிரசாரங்களில் மும்முரமாக இந்தியா பற்றிய பேச்சுகள்: மோடி தங்களுக்கு பின்னால் நிற்பதாக கூறுகிறார் சம்பந்தன்

(கட்டுரை ஆசிரியர் மீரா சிறீனிவாசன்)
- இனத்தை காட்டிக்கொடுத்தவர்கள் தமிழ் மக்களின் நலனுக்காக களத்தில் நிற்பதாக கூறுவது நகைப்பு. பேரினவாதிகளின் முகவர்களால் அம்பாறை தமிழர்கள் அநாதைகளாகும் ஆபத்து (முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் எம். இராஜேந்திரன்)
- அரசாங்கத்திடம் அமைச்சர் பதவிகளைப் பெற்றுக்கொள்ளப்போவதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சாளர் சுமந்திரன் அறிவித்துள்ளதாக வெளிவந்துள்ள ஊடக செய்திகள் எனக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. …எமது மக்களை இனஅழிப்பு செய்த ஒரு அரசாங்கத்திடம் இருந்து, இந்த நாட்டில் இனப்பிரச்சினை என்ற ஒன்றே இல்லை என்று திட்டவட்டமாக கூறியுள்ள அரசாங்கத்திடம் இருந்து தமிழ் தேசிய கூட்டமைப்பு அமைச்சர் பதவிகளைப் பெறுவதால் எமக்கான அதிகாரத்தையோ, நீதியையோ அல்லது அபிவிருத்தியையோ அரசு தரும் என்று எதிர்பார்க்க முடியுமா? …ஏற்கனவே நாம் எமது காணிகளை இழந்து விட்டோம். மேலும் காணிகள் பறிபோகின்றன. தமிழ்க்கைதிகள் தொடர்ந்து சிறையில் உள்ளார்கள். இராணுவத்தொகை இன்று வடக்கிலும் கிழக்கிலும் பெருகிவருகிறது. பௌத்தமயமாக்கலும் சிங்களமயமாக்கலும் சிங்களக் குடியேற்றங்களும் துரிதமாக நடந்துகொண்டிருக்கின்றன.

(நீதியரசர் விக்னேஸ்வரன், தலைவர், தமிழ் மக்கள் தேசிய கூட்டணி)

- மாகாண சபை முறையில் கைவைக்க இடமளியோம் (எம்.ஏ.சுமந்திரன், பேச்சாளர், தமிழ் தேசிய கூட்டமைப்பு)
- ஒரு புறம் இராணுவ ஆதிக்கம், மறுபுறம் தூதரகங்களின் ஆதிக்கம், நாட்டின் ஜனநாயகம் அச்சுறுத்தலில் உள்ளது (அனுரகுமார திசாநாயக்க, ஜே.வீ.பி)
- பாராளுமன்றம் சென்று மலையக மக்கள் முன்னணியை மக்கள் கட்சியாக மீண்டும் மாற்றியமைப்பேன் (அனுஷா சந்திரசேகரன், மலையக மக்கள் முன்னணி முன்னாள் தலைவர் அமரர் சந்திரசேகரனின் மகள், சுயேட்சையாக போட்டியிடுகிறார்)
- பொதுத்தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் தமக்குக் கிடைக்கும் என்று கூறிக்கொண்டிருந்த ஆளும் கூட்டணிக்கு இப்போது சாதாரண பெரும்பான்மை பலம் குறித்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சம் வந்துவிட்டது போல தெரிகிறது. (கட்டுரை ஆசிரியர் சத்ரியன்)

- தமிழரின் ஒட்டுமொத்தப் பலம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பே (முன்னாள் பாராளுமன்ன உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன்)
- அரசை மாற்றி சம்பூரை மீட்டது போல் அரசமைப்பை மாற்றி தீர்வு பெறுவோம் (இரா. சம்பந்தன், தலைவர், தமிழ் தேசிய கூட்டமைப்பு)
- அரசியலில் பெண்கள் தலைமைத்துவத்தை அதிகரிக்க வேண்டும் (கபே அமைப்பு)
- தீர்வை தருவது அரசின் கடமை, அதற்காக அடிபணியமாட்டோம் (இரா. சம்பந்தன்)
- மீனே எமது சின்னம், தமிழ் மீட்சியே எமது எண்ணம் (சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ் மக்கள் தேசிய கூட்டமைப்பு)
- பேரம் பேசினார்கள் மக்களுக்காகவல்ல; தங்களுக்காக (அருந்தவபாலன், தமிழ் தேசிய கூட்டமைப்பு)
- பிரபாகரன் பயங்கரவாதி அல்ல (நளின் ஹேவகே, மக்கள் விடுதலை முன்னணி)
- தமிழர்களின் அடையாளங்கள் பறிபோவதை சம்பந்தனால் தடுக்க முடியாது (கருணா, தமிழர் ஐக்கிய மக்கள் முன்னணி)
- எமது ஆட்சியில் பெண்களின் அபிவிருத்திக்கு முன்னுரிமை (சஜித் பிரேமதாசா, ஐக்கிய மக்கள் சக்தி)
- சஜித் பிரேமதாச இனமதவாதியல்ல பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பேச்சுக்கே அவரிடம் இடமில்லை. அவரை நாங்கள் நம்புகிறோம் (வேட்பாளர் ஸ்ரான்லி, ஐக்கிய மக்கள் சக்தி)
- கோத்தபாய ராஜபக்ஷவை எப்படியும் தோற்கடிக்க வேண்டும், அவர் ஆட்சிக்கு வந்தால் எங்களுடைய எதிர்காலத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றுப்புள்ளி என்று கடந்த ஜனாதிபதி தேர்தலில் கூறினர் தமிழ்க் கூட்டமைப்பினர். ஆனால் அதே கூட்டமைப்பு, இன்று கோத்தபாய ராஜபக்ஷவுக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொடுப்பதற்குத் தயார் என்று அறிவித்திருக்கிறது. இது சாதாரண விடயமல்ல (கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தலைவர, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி)

- தமிழ்க் கூட்டமைப்பின் ஒரு அங்கமாக போராளிகளும் இணையவேண்டும் (ரெலோ)
- மாற்றத்தை எதிர்பார்க்கும் இளைஞர் யுவதிகள் எம்முடன் இணைந்துகொள்ளுங்கள் (சி. சிறிதரன்,ஈ.பி.டி.பி)
- ஆயுதப்போராட்டத்தின் தொடரச்சியான ஜனநாயக வடிவம் தான் தமிழ் தேசிய கூட்டமைப்பு, அடிநுனி தெரியாமல் எம்மை விமர்சிப்பவர்கள் இதை உணர வேண்டும் (வேட்பாளர்,ஈ.சரவணபவன், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு)

தேர்தல் தொடர்பாக எத்தகைய கருத்துகள் வெளிப்படுத்தப்பட டுள்ளன? எத்தகைய கருத்துகளுக்கு முன்னுரிமை? மக்கள் நலன் சார்ந்த கருத்துகளுக்கா? அல்லது கட்சி நலன் சார்ந்த கருத்துகளுக்கா? தேர்தல் பரப்புரைகள் ஊடகங்களில் வெளியிடப்படும்போது சில வரையறைகள் உள்ளன என்பது தவிர்க்க முடியாதது தான் எனினும் ஊடகங்கள் முகியத்துவப்படுத்தும் கருத்துகள் எத்தகையவை?

ஒடுக்கப்பட்ட மக்களின் நலனுக்காக பணி எனும் கருத்தை ஏன் எல்லா கட்சிகளாலும் இணைந்து வைக்க முடியவில்லை? வடக்கு கிழக்கு மற்றும் மலையகத்தில் ஏன் கட்சிகளுக்குள்ளும் கட்சிகளுக்கிடையேயும் அதிக முரன்பாடுகளும் நிராகரிப்புகளும்? பிரிவினைகள் கட்டாயப்படுத்தப்பட்டு விதைக்கப்படுகின்றனவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது மக்கள் நலனுக்காக இணைவதை முன்னுரிமைப்படுத்த முடியாத நிலைப்பாடுகளா கட்சிகளில் அதிகம் செல்வாக்குச் செலுத்துகின்றது?

மக்கள் நலனுக்காக உழைக்க வேண்டிய சிவில் சமூகங்கள் ஏன் மௌனமாகி விட்டன? அல்லது அதிக பணிகளை மேற்கொள்ளவில்லை? சமய நிறுவனங்கள், சர்வ மத அமைப்புகள், மக்கள் நலன் பேணும் அமைப்புகள் தேர்தல் தொடர்பாக மக்கள் நலன் சாரந்த ரீதியில் உழைப்பது முக்கியம். பலமான சிவில் அமைப்புகள் இயங்கும்போது கட்சிகள் கூட மக்கள் நலனுக்கு முக்கியத்துவம் கொடுப்பது இயல்பாகவே ஏற்படும்.

## 3. எத்தகைய நிலைப்பாடு பொருத்தமானது?

### 3.1. வாக்களிப்பு ஒரு பொறுப்பு

எனது ஒரு வாக்கு என்ன மாற்றத்தை ஏற்படுத்தும்? எனயோசிப்பதை கடந்து என் வாக்கு மாற்றங்களை ஏற்படுத்த வழிவகுக்கும் எனும் நம்பிக்கை சார் பொறுப்பு அனைவருக்கும் ஏற்படுவது அவசியம். வாக்களிப்புக்கான விழிப்புணர்வு முக்கியமானது. பின்வருவன போன்ற வாக்குரிமை தொடர்பானவற்றை எழுதுவது, முன்வைப்பது, பரிந்துரைப்பது யதார்த்த களத்தில் மிகவும் முக்கியமானது:

> “வாக்குரிமை நமது அடிப்படை உரிமை, நமக்கு கிடைத்திருக்கும் தார்மீக உரிமை வாக்குரிமை, வாக்களிப்பது ஜனநாயக கடமை, வாக்களிப்பது நமது வாழ்வுரிமை, ஜனநாயகம் காக்க வாக்களிப்போம், தவறாமல் வாக்களிப்போம்,சமுதாயத்தை மேம்படுத்துவோம், நமது வாக்கு நாட்டின் போக்கு, வாக்கின் வலிமை தேசத்தின் வலிமை, நமது வாக்கு ஐந்து வருட ஆட்சியின் சக்தி, வாக்களிப்பது ஐந்தாண்டு ஆட்சியை தீர்மானிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமை, வாக்களிப்போம் வாழ்வுரிமை காப்போம், நல்லாட்சி அமைய வாக்களிப்போம், அனைவரும் வாக்களிப்போம் ஜனநாயகத்தை வலுப்படுத்துவோம், சிந்திப்போம் சுயசிந்தனையில் வாக்களிப்போம், சுதந்திரமாக வாக்களிப்போம்,சுதந்திரத்தை பேணி காப்போம், யாருடைய தூண்டுதலும் இல்லாமல் வாக்களிப்போம், மற்றவர்கள் சொல்வதை கேட்காமல் மனசாட்சிப்படி வாக்களிப்போம், எனது வாக்கு விற்பனைக்கு அல்ல, காசு,பணம் வாங்காமல் கண்ணியமாக வாக்களிப்போம், மனதில் உறுதி வேண்டும்,கையூட்டு பெறாமல் வாக்களிக்க வேண்டும்,போலியான வாக்குறுதிகளை நம்பாதீர்! பொறுப்பாக வாக்களிப்பீர், பிடித்த கட்சி என்று பார்க்காதீர்! அதுவே நமக்கு பாதிப்பு, பழகிப்போன சின்னம் என்று பாராதீர்!,பாதகத்தை தேடாதீர், தெரிந்த வேட்பாளர் என்று பாராதீர்!, எச்சரிக்கையாக வாக்களிப்பீர்."[10]

### 3.2 அரசியல் என்பது என்ன?

அனைவரும் வாழ, உரிய ஒழுங்கு நடவடிக்கைகளை பேண, அவர்களால் ஏற்படுத்தப்படும் அமைப்பு ஒழுங்கே. "அரசியல்"என்பது (ஆங்கிலச் சொல் Politics) கிரேக்க வார்த்தை "பொலிஸ்" என்பதிலிருந்து வந்தது. மக்கள் தம் வாழ்வை ஒழுங்காக மேற்கொள்ள, முக்கியமாக கட்டுப்பாடுகள், பங்கிடல் போன்றவையை முக்கியத்துவப்படுத்த பொருத்தமான குடிமக்கள் அமைப்பு அணி தொடர்பான ஒழுங்குகளே அரசியல் மூலம் சுட்டப்பட்டது. இது குறிப்பிட்ட சாராக்கு உரியது (domain) எனும் கருத்துடன் மட்டுப்படுத்தப்படவில்லை. அன்றாட அலுவல்களை மேற்கொள்ள எதனைச் செய்வேண்டும், இதற்கு யாருடன் தொடர்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளவேண்டும். அவர்களுடன் எத்தகைய ஒப்பந்தங்களை மேற்கொள்ளலாம்... என மக்கள் நலனே இங்கு மையப்படுத்தப்பட்டது.

## 3.3. நடைமுறையிலுள்ள சில அரசியல் போக்குகள்:

அரசு, அரசியல்... பற்றிய புரிந்துணர்வு இன்றைய யதார்த்தத்தில் எப்படி நிலவுகிறது? அரசியல் யாருடையதாக்கபபட்டு விட்டது.அரசியலில் ஒரு சாதாரண நபர் அவரது இயலுமையுடன் ஈடுபடுவது சாத்தியமா? இத்தகைய விடயங்களை புரிந்துகொள்ள அரசியல் தொடர்பான பின்வரும் சில கருத்துகளை நோக்குவது பொருத்தம்:

அரசியல் தொடர்பான பல கருத்துகள் வரலாற்றில் காணப்பட்டன. அவை ஒவ்வொன்றும் வாழ்க்கையை உறுதி செய்தனவா? என்பது ஒரு கேள்விக்குறியே.

அறிவுடையோரே ஆளுகைக்கு பொருத்தம் என்பது பிளேட்டோவின் நிலைப்பாடு. மக்களாட்சியை நிராகரித்த இவர் தத்துவயியலாளரின் ஆட்சியை, முடியாட்சியை முன்வைத்தார். பிளேட்டோவின் நிலைப்பாட்டுடன் ஒப்பிடும்போது அரிஸ்டோட்டலின் நிலைப்பாடு பெரிதும் மாறுபட்டு இருந்தது.அரசியற்கொள்கை மற்றும் அரசியலை நடைமுறை அறிவியலாக நோக்கிய மக்கள், வாழ்வின் உயர் நோக்கத்தை கண்டு, மகிழ்ச்சியாக இருக்க, சட்டம் அல்லது அரசியலமைப்பு உருவாக்கத்துக்கான வித்திட்டார்.

கிறிஸ்தவர்களின் சிந்தனைகளில் தாக்கம் செலுத்திய இருநகர் பற்றிய கருத்தை வெளியிட்டார் புனிதர் அகஸ்டீன்.மீட்பிற்காக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும்,நடுத்தீர்வு மைய தண்டனைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் முழுமையாக ஒன்றிணைந்திருந்தாலும் வேறுபாடுகள் உண்டு.பூமிக்குரிய ஆசைகள் மற்றும் செயல்களால் நிறைந்த பூமிக்குரிய நகர் மற்றும் ஆன்மீகத்தால் நிறைந்த கடவுளின் நகர் என இரு நகர்களைப்பற்றி இவர் கதைத்தார். இவர் அரசியல் கருத்துகளை பெரிய அளவில் உருவாக்காதவராக இருப்பினும் இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவர்களின் அரசியல் நிலைப்பாடுகளில் செல்வாக்குச் செலுத்தியுள்ளது.

அரசியலமைப்பு இயற்கைத்தோற்றப்பாடு, பொதுநன்மையை அடைவதற்கு மிகச் சிறந்த அமைப்பு... போன்ற அரிஸ்டோடலின்கருத்துகளை ஏற்றுக்கொண்ட புனிதர் தோமஸ் அக்வைனஸ் கடவுள் மையமாக அவரது நிலைப்பாட்டை முன்வைத்தார். மனித சமூகத்தின் இலட்சியம் நல்வாழ்க்கையாக இருக்க வேண்டும் என்பதை ஏற்றாலும் மக்கட்கூட்டத்தின் இறுதி இலட்சியம் தனிமனிதனி(ரி)ன் இலட்சியத்திலிருந்து எந்த வகையிலும் வேறுபட முடியாது. நன்நெறியை பிரதிபலிக்கும் நல்வாழ்க்கை என்பதற்குப் பதிலாக இறையருளால், நல்வாழ்க்கை மூலம் கடவுளை அடைவதே வாழ்க்கையின் இறுதி இலட்சியமாக அமைய முடியும் என்றார். அரசனுடைய ஆட்சி மற்றும் ஜனநாயகம் என்பவற்றுக்கிடையேயான கருத்துநிலைப்பாட்டில் இருந்த அக்வைனஸ் இறுதியாக முடியாட்சியை ஆதரித்தார். அரசின் ஒற்றுமையை வலியுறுத்தும் அக்வைனஸ் அவர்கள் அதிகாரம் ஒரு மனிதனி(ரி)ன் கைகளில் குவிந்தால் இதை அடைய முடியும் என நம்பினார். பல மனிதர்களின் ஆட்சியை விட ஒரு மனிதனி(ரி)ன் ஆட்சி மிகவும் பயனுள்ளது. ஒவ்வொரு இயற்கை நிர்வாகமும் ஒருவரால் ஆளப்படுவது மற்றும் மனிதர்கள் ஒரு நபரால் ஆளப்படுவது சிறந்தது என்பத இவரது நிலைப்பாடு.

மறுமலர்ச்சிக்காலத்தில் அரசியலில் பாரிய மாற்றங்கள் எழத்தொடங்கின. மத்தியகால நிலமானிய முறை பிரபுக்களின் ஆதிக்கத்தை பேணியது. இது அரசருடைய ஆதிக்கத்துக்கு தடையாக இருந்தது. 14ஆம் நூற்றாண்டில் தேசிய உணர்ச்சியின் வளர்ச்சி மற்றும் ஒற்றுமை மன்னராட்சியை வலுவடையச் செய்தது. தடையற்ற கொடுங்கோண்மை ஆட்சி பிரான்ஸ் மற்றும் ஸ்பெயினில் ஏற்பட்டது. ரியுடர்(Tudor) வல்லரசு இங்கிலாந்தில் தாராள மனப்பான்மையுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தது. ஒரு தேசிய இனம் தனக்குரிதான நாட்டில் சுதந்திரமாக வாழ வேண்டும், அது ஒரு அரசாங்கத்துக்கு கட்டுப்பட்டிருக்க வேண்டும் என்பன தோற்றம் பெற்று வலியுறுத்தப்பட்டன. அறிவு, ஆராய்ச்சி திறன் மத சீர்திருத்தத்துக்கு வழிகோலியது. ஐரோப்பிய ஆதிக்கம் நிலைபெறத் தொடங்கியது.

சீர்திருத்தம் மதத்தில் ஏற்பட அது அரசியல் கருத்தியலிலும் செல்வாக்குச் செலுத்தியது. “பாவமன்னிப்புச் சீட்டு விற்பனையை” எதிர்த்த மாட்டீன் லூத்தர், 99 விடயங்களை வெளிப்படுத்தினார். இது புரட்டஸ்தாந்து கிறிஸ்தவத்துக்கு தொடக்கமானது. ஜேர்மனியில் ஆரம்பித்த சீர்திருத்தம் சுவிட்சரலாந்து (ஸ்விங்லி) பிரான்ஸ்,(ஜோன் கல்வின்),ஸ்கொட்லாந்து (ஜோன் நொக்ஸ்) என பரவியது. இங்கிலாந்து அரசன் ஹென்றி VIII மாட்டீன் லூத்தரை எதிர்த்து,‘சமயக்காவலர்” என புகழப்பட்டார். எனினும் பாராளுமன்ற சட்ட அடிப்படையில் திருத்தந்தையின் அதிகாரம் அகற்றப்பட்டு ‘நாட்டின் அரசரே திருச்சபையின் தலைவர்’எனும் அடிப்படையை அறிமுகப்படுத்தினார் அரசன் ஹென்றி VIII. மேலைநாட்டுப் பண்பாடும், கீழைநாட்டுப் பண்பாடும் வெவ்வேறு வழிகளில் வளர்ச்சியடைந்ததற்கு மதம் ஒரு முக்கிய காரணம் என குறிப்பிட்டுள்ள மகஸ் வெபர் துறவுசார் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவத்தின் சில குறிப்பிட்ட இயல்புகள், மேலை நாடுகளில், முதலாளித்துவம், அதிகாரம், பகுத்தறிவுசார் சட்டமுறை அரசுகள் என்பன வளர்ச்சியடைவதற்கு வழிவகுத்தன என அவரது புரட்டஸ்தாந்து நெறிமுறைகளும் முதலாளித்துவ ஆற்றலும் என்னும் கட்டுரையின்படி குறிப்பிட்டுள்ளார். முதலாளித்துவத்துக்கு கல்வினுடைய ‘முற்குறித்தல்’ போன்ற கருத்துகள் அதிகம் பங்களித்தன என்பது முக்கியம். மனிதர், இயற்கை நெறியில் சமூக நல்வாழ்வு வாழ்வதை அரிஸ்டோட்டலைப் போலவே வலியுறுத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிச்சேட் ஹூக்கர் அரசாங்கங்கள் இதனை அங்கீகரிக்க வேண்டும் என்றார்.

அரசியல் அமைப்புகளை அவை தரும் பயனைக் கொண்டே மதிப்பிட வேண்டும் என்பதை பயனுடைமைவாதம் வலியுறுத்தியது. அதிகமானோருக்கு எது அதிக இன்பத்தை தருகிறதோ அதுவே பொருத்தமானது என்பது வலியுறுத்தப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டு கைத்தொழில் புரட்சிகள் காலத்தில் இக்கருத்து ஆதரிக்கப்பட்டது. சமுதாயத்தின் நலம் என்பது, சமூகத்திலுள்ள ஒவ்வொரு தனியாட்களதும் நலமே. அதிகமாக எத்தனை பேருக்கு நன்மைக்காக செயற்பட முடியுமோ அதனை செய்யவேண்டும் என்றார் ஜோன் பெந்தாம். நாட்டில் மனிதருக்கு நன்மை பெருகாவிட்டால் அவர்கள் புரட்சி செய்ய வேண்டும் என வலியுறுத்தினார் பெந்தம். ஜோன் ஸ்டுவேட் மில் பயனுடைமை வாதத்துக்கு ஆதரவாக இருந்தபோதிலும் 'பயனுடைமை'யை கேள்விக்குள்ளாக்கினார். பயனுடைமை அறத்தின் இலட்சிய பூர்வமான நிறைவு எதில் தங்கியுள்ளது? உனக்கு மற்றவர் எதைச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறாயோ அதை மற்றவர்க்குச் செய்வதிலும் உன்னைப்போல் அயலவரில் அன்பு செய்வதிலுமே தங்கியுள்ளது என்றார் மில். இதனை நடைமுறைப்படுத்த, தனியொருவரது இன்பம் சமூக நலனுடன் இணைய உரிய சட்டங்களும் சமூக அமைப்புகளும் தேவை. மக்களுடைய குணநலன்களை உருவாக்கும் சக்தி கல்வியும் மக்கள் கருத்தும் ஆகும். இது பொதுநலன் மையமாக வேண்டும்.

சட்டத்துடன் தொடர்புபடுத்தி பயனுடைமையை நோக்கப்பட்டது. இதில் ஜோன் ஒஸ்டினின் பங்களிப்பு முக்கியம். இவர்தெய்வ சட்டங்களையும் இயற்கை சட்டங்களையும் புறந்தள்ளி மனிதர் உருவாக்கிய சட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தார். சுதந்திரமானதொரு அரசியல் சமூகத்தில் (அங்கத்தவர்கள் இறையையுள்ள தனிப்பட்டவரோ அல்லது அதிகாரமுள்ள ஒருவரோ அல்லது பலரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக இருக்கலாம்)இறைமையுள்ள ஒருவரோ பலரோ (சபை) அமைக்கும் சட்டமே தனிப்பட்ட வரையறை செய்யப்பட்ட சட்டம். இறைமையானது, சுதந்திரமான அரசியல் சமூகங்களில் குறிப்பிட்ட சிலரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சமஷ்டி அரசில் இது ஒரு சிலரிடம் கூட்டாக உள்ளது.

தனிமனித சுதந்திர அரசியலை தாராண்மைவாதம் வலியுறுத்துகின்றது. பொதுநலத்தை பேணுவதற்காக தனிச்சொத்துடைமை மீது சிலவேளைகளில் கட்டுப்பாடுகள் செலுத்தப்படும். இதன் மூலம் சமூகத்தின் கீழ்நிலையிலுள்ளோர் நலன் முக்கியத்துவப்படுத்தப்படும். தான்தோன்றித்தனமான அதிகாரத்தை எதிர்ப்பது இங்கு முக்கியத்துவப்படுத்தப்படுகிறது. வேகமாகவும் தொடரச்சியாகவும் கைத்தொழில் மயமாகிக் கொண்டு வந்த பொருளாதார சூழ்நிலையில் எழுச்சி பெற்று வந்த கைத்தொழில் வர்க்கம் அரசியல் அந்தஸ்தை பெறுவதே இங்கு பின்னணி. இங்கிலாந்தில் தாராண்மைவாதம் ஒரு மத்திய வர்க்க அரசியல் இயக்கமாக தோன்றயிருந்தது.

சூழ்நிலைகளாலேயே நல்ல குணங்களும் தீயகுணங்களும் தீர்மானிக்கப்படுகின்றன. சமமின்மையிலிருந்தே வறுமை உருவாகிறது. சமமின்மையின் வளர்ச்சி, தொழிலாளர் வர்க்கங்கள் எதிர்நோக்கும் தொடர் வறுமை, முதலாளிகளின் அதிகரித்து வரும் செல்வம் என்பன பல நாடுகளிலும் உள்ள கற்பனா சோசலிஸ்டுகளால் முன்வைக்கப்பட்டது. ஒரு உழைப்பாளி அவரது உழைப்பின் முழு உற்பத்தியையும் பெற முடியாவிட்டாலும் தொழிலாளி துன்பத்துக்குள் முடங்கிப்போவதை தடுக்க ஒழுங்குகள் தேவை என்பது வலியுறுத்தப்பட்டது. உற்பத்தி சாதனங்கள் தனியார் உடைமையாய் இருப்பதே முதலாளித்துவத்தின் கீழ் வெகுஜனங்கள் துன்புற காரணம் என்பது இவர்களால் கூறப்பட்டது. மனித இயல்பினை உருவாக்குவதில் கல்வி முக்கிய பங்காற்றுகிறது. மாக்சிசவாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாட்டு மூலங்களுள் கற்பனா சோசலிஸ சிந்தனைகளும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. முதலாளித்துவத்தை புனர்நிர்மானம் செய்ய எண்ணிய இவர்களது போக்கே குறை என்பது இவர்கள் மீதான ஒரு விமர்சனம்.

மாக்சிசம் முன்வைக்கும் அரசியல் நிலைப்பாடு சமூக மையமானது. சமூகம் தனியாட்களைக் கொண்டதல்ல. ஆனால் இந்த நபர்கள் நிற்கும் உறவுகள், தொடர்புகளின் கூட்டுத்தொகையை வெளிப்படுத்துகிறது. சமூகத்தின் இருப்பினை, உறவிலுள்ள தனியாட்களின் கூட்டில் நோக்கும்படி மாக்ஸ் வலியுறுத்தினார். சில வகையான வர்க்க ஆக்கிரமிப்பின் அரசியல் வெளிப்பாடே அரசு என்பதில் மாக்ஸ் தெளிவாக இருந்தார். பூர்வீகப் பொது உடைமை சமூகம் (வேட்டையாடல், மீன்பிடி... போன்றவற்றில் ஈடுபட்டிருந்த மனிதர்களிடம் அம்பு, வில்... போன்றவை கூட்டுமுறை அடிப்படையில் சொந்தமதாக இருந்தன, இவை தனியார் உடைமைகளாக்கப பட்டிருக்கவில்லை அத்துடன் இலகுவாக உருவாக்கக்கூடியதாக இருந்தது) ஆண்டான் - அடிமை முறைச்சமூகம் (உற்பத்திகள் வளர்ச்சியடைந்த போது, முக்கியமாக தனக்கு மட்டுமல்ல பிறருக்கும் தேவையானதை உற்பத்தி செய்த போது வர்க்க அடிப்படையில் பிளவு ஏற்பட்டது.தோற்க்கடிக்கப்பட்டோர் அடிமைகளாயினர். இவர்களே செல்வத்தை உற்பத்தி செய்தனர்),நிலமானியச் சமூகம் (உழைக்கும் விவசாயிகள் மீது நிலம் வைத்திருந்தோர் ஆதிக்கம் செலுத்தனர். நிரந்தர இராணுவத்துடன் பலமுள்ள அரச இந்திரம் தோன்றியது), முதலாளித்துவ சமூகம் (சர்வாதிகார அரசு), சோசலிச சமூகம் (பாட்டாளிகளின் சர்வாதிகாரம்).[10] வர்க்கங்கள் இல்லாதொழிக்கப்படும் அப்போது தான் சுதந்திரம் பற்றி பேசலாம். அரசு என்று ஒன்று இராது.

அரசு, அரசியல்... பற்றி நிலவுகின்ற கருத்துகளை நோக்கும் போது மார்க்சினுடைய கருத்துப்படி அரசு ஒரு ஒடுக்குமுறை அமைப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்க்க ஆக்கிரமிப்பின் அரசியல் வெளிப்பாடே அரசு. இதனால் இந்த ஒடுக்குமறையில் ஈடுபட போவது எவ்வளவு பொருத்தம் எனும் கேள்வியை கேட்பது அவசியம். எனினும் அரசியல் ஊடாக மாற்றங்களை மேற்கொள்ளலாம் எனும் கருத்து நிலைப்பாட்டை மையப்படுத்தி நோக்கும்போது எத்தகைய முயற்சி சாத்தியம் என்பதை கேட்ப்பது அவசியம். அன்றாடம் நாட்கூலியாக உழைத்து வாழும் சாதாரண குடியானவருக்கு வாக்கு இடுவதை விட வேறெதற்கும் அரசியலில் இடமில்லை. இனம், மதம், மொழி, பணம், செல்வாக்கு, வகுப்பு, சாதி, பால், சமயம்... போன்றவையும் அரசியலில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

அரசு என்பது மக்களை ஆளும் கொள்கையை நடைமுறைப்படுத்தும் அமைப்பாகும். பலவிதமான பண்புகளை கொண்ட அரசுகளை வரலாற்றில் நோக்கலாம். அவற்றுள் முக்கியமான சில பின்வருமாறு:

மரபு வழியில் சிறந்த பண்புகளையுடைய மக்களால் ஆளப்படும் ஆட்சி போற்றப்படுகிறது (Aristarchy). பிரபுத்துவம் (aristocracy), தொழில்நுட்பம் (technocracy) தகுதி (meritocracy).என்பவை உதாரணங்களாக குறிப்பிடப்படுகின்றன. இதற்கு மாறாக ஒரு நாட்டு மக்கள் மீது முழு அதிகாரமும் கொண்ட ஒருவரால் ஆளப்படுகின்றன. எதேச்சதிகார (Autocratic) பண்புகளைக் கொண்ட அரசாங்கங்கள் இவை. சர்வாதிகாரம் (authoritarian, totalitarian) மற்றும் பாசிசம் (Facist) எடுத்துக்காட்டுகள்

அடுத்து ஜனநாயக(Democracy) பண்புகளைக் கொண்ட அரசாங்கங்கள் முக்கியமானவை. ஒரு நாட்டில் உள்ள மக்களை அவர்கள் விரும்பும் பிரதிநிதிகள் மூலம் ஆளப்படுகின்றனர். இங்கு அவர்கள் தேர்தலில் அரசியல் கட்சிகளுக்கு வாக்களிப்பது வழக்கம். ஒரு அரசன் அல்லது அரசி ஒருநாட்டு மக்களை ஆளுவது முடியாட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Monarchy) எனப்படும். அவர்கள் தங்கள் குடும்பத்திலிருந்து தங்கள் பதவியைப் பெறுகிறார்கள், இது பெரும்பாலும் அரச குடும்பம்(Royal family) என்று அழைக்கப்படுகிறது.

தன்னலக்குழு (Oligarichic)ஆட்சி என்பது சக்திவாய்ந்த அல்லது செல்வாக்கு மிக்க ஒரு சிறிய குழுவால் ஆளப்படுகின்ற முறை. இந்த மக்களுக்கு நலமளிக்கலாம் அல்லது துன்பம் விளைவிக்கலாம்.
சிறுபான்மை செல்வந்த குடிமக்களால் மேற்கொள்ளப்படும் ஆளுகை (Plutocracy). இதுஜனநாயகம், முதலாளித்துவம், சோசலிசம் அல்லது அராஜகம் போன்ற எந்த அரசியல் தத்துவமும் சாராதது.
பெயரளவில் குறிப்பிடப்படுவதை கடந்து நடைபெறும் ஆட்சி அடிப்படையில், ஆளுகையை பெயரிடல் பொருத்தம். இலங்கை ஒரு ஜனநாயக சோசலிசக் குடியரசு. எனினும் இங்கு நடைபெறும் ஆட்சி ஜனநாயக விழுமியங்களுடன் நடைபெறுகிறதா என்பதை நோக்குவது மிகவும் பொருத்தம்.

**4. மாற்று அரசியல்**
**4.1. மாற்று அரசியலின் தேவை:**

சமகால யதார்த்தம் நிலவும் யதார்த்த அரசியலின் ஆரோக்கியமின்மையை திரும்பவும் திரும்பவும் தெளிவாக்கி வருகிறது. அமெரிக்கா, இந்தியா, இலங்கை... மட்டுமல்ல இலங்கையின் வடக்கு – கிழக்கு, மலையகம்... எனும் குறிப்பிட்ட இடங்களில் கூட மக்கள் நலன் மைய அரசியல் நடைமுறைப்படுத்தலை காணமுடியவில்லை என்பது சாதாரண மக்களின் தொடர்ந்தேட்சையான வெளிப்பாடு. அத்துடன் ஆரோக்கியமான அரசியல் எதிர்காலத்தில் ஏற்படப்போகின்றதா? எனும் வினாவுக்கும் இல்லை என்ற பதிலே உறுதியாக வெளிவருகிறது. மாற்றுத்தேடலை விட வேறெதுவுமில்லை. சமகாலத்தில் அரசு அரசியல் நிலைத்திருப்பதே யதார்த்தம். மார்க்ஸ் கூறிய சோசலிச சமூகம் இன்னும் வரவில்லை. முதலாளித்துவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தியேயே சமகால வாழ்க்கை. எனவே இன்று நிலவும் அரசியலில் எப்படி ஈடுபடுவது? மக்கள் நலன் பேணும் அரசியலில் எப்படி ஈடுபடுவது?

ஒரு அரசியற் கட்சியின் நோக்கில், தேர்தலை பாவித்து குறிப்பிட்ட கட்சி ஆட்சிக்கு வந்து அரச இயந்திரத்தை இயக்க பங்களிப்பு செய்வதே தேர்தல் அரசியல் மூலம் நடைபெறுகிறது. வாக்களிக்கும் மக்களின் நோக்கில், ஆளுகைக்கு பொருத்தமானவர்கள் தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்ள தேர்தல் ஒரு சந்தர்ப்பம்.

ஒப்பீட்டடிப்படையில் ஜனநாயகத்தில் மக்களின் வாக்குகள் அவர்களின் பெரும்பான்மை விருப்பத்தின்படி ஆளுகை நடைபெற சந்தர்ப்பம் தருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. முக்கியமாக பரப்புரை தேர்தலில் போட்டியிடுவோர் அவர்களது நிலைப்பாடுகளை வாக்களிக்கவுள்ள மக்களுக்கு முன்வைக்க சந்தர்ப்பம். கட்சி நலனுக்கும் மக்கள் நலனுக்கும் இடைப்பட்ட இழுபறிகளை தேர்தல் விஞ்ஞாபனங்களை ஆழமாக நோக்கினால் புரிந்துகொள்ளலாம். எனினும் சில சவால்கள் உள்ளன

சட்டத்தின் ஆட்சி மிகவும் பலவீனமாக உள்ள பல நாடுகளில், சர்வதேச தர அளவுகோலின்படி தேர்தல்கள் சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடப்பதில்லை. இதற்கு முக்கிய காரணம் அந்தச் சந்தர்ப்பத்தில் உள்ள அரசாங்கத்தின் இடையூறே மிகவும் பொதுவான காரணமாகும். சர்வாதிகாரிகள், பரவலான கருத்து அவர்களை அகற்றுவதற்குச் சார்பாக இருப்பினும், தாமே பதவியில் தொடர்ந்து நீடிப்பதற்காக நிர்வாகத்தை (காவல்துறை, ராணுவச் சட்டம், தணிக்கை முறை, தேர்தலில் உடல் வலிமைப் பிரயோகம் போன்றவை) தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தக் வாய்ப்பு அதிகம் உண்டு.பாராளுமன்றத்தில் ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சார்ந்தவர்களது பெரும்பான்மை சக்தியைப் பயன்படுத்தி (குற்றவியல் சட்டங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்றுவது, தகுதி மற்றும் மாவட்ட எல்லை போன்றவற்றை மறுவரையறுப்பது ஆகியவற்றை உள்ளிட்ட தேர்தல் இயங்குமுறையை வரையறுப்பது), அச்சபையின் அதிகாரம் ஒரு தேர்தலின் மூலமாக மாற்றுக் கட்சியினருக்குச் சென்று விடாதபடி தடுக்கலாம்.
தேர்தல் கண்காணிப்புகளை மீறி கள்ள வாக்களிப்பு, வாக்குப்பெட்டிகளை கடத்தல் என்பனவும் இடம்பெறலாம்.

## 4.2. மாற்று அரசியல் தேடலில் களைய வேண்டியவை:

மாற்று அரசியலை அமைக்க, ஒப்பீட்டடிப்படையில் ஜனநாயக விழுமியங்கள் பேணப்படவேண்டும். வரையறுக்கப்பட்ட அளவிலாவது சட்ட ஆட்சி, நீதித்துறையின் பாரபட்சமற்ற செயற்பாடுகள் போன்றன நடைபெற வேண்டும். இதனை நிறைவேற்ற பின்வருவன போன்றவைகள் களையப்பட வேண்டும்:

### 4.2.1. அடிப்படைவாதம்

தேர்தலில் தமது தெரிவை உறுதி செய்ய வாக்களரை அடிப்படை வாதத்துக்குள் தள்ளும் முயற்சி நடைபெறுகின்றது. இது உண்மையை மறைத்து, மக்களை உணர்ச்சி வசப்படுத்தி, அவர்களது வாக்குகளை தமதாக்க மேற்கொள்ளப்படும் முயற்சியாகும். இனம், மதம், மொழி,சாதியம், கல்விநிலை,பால், பிரதேசம்... போன்றவை இங்கு பாவிக்கப்படுகின்றன. பெண்களின் பிரதிநிதித்துவம் பற்றி பரப்புரையில் கூறுவது தவறல்ல. மாறாக பெண்ணான என்னால் மட்டுமே உங்களை பிரதிநிதித்துவப்படுத்த முடியும், நானே உங்கள் ஏகபிரதிநிதி... என குறிப்பிடுவது சிக்கலானது. வாக்களர்கள் எப்படி இவரை மட்டும் தங்கள் பிரதிநிதியாக நோக்குவது? ஏனைய பெண் அபேட்சகர்களை நிராகரிக்க வேண்டும் என நினைப்பது தவறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 4.2.2. பணஆதிக்கம்

தாராளமயக் கொள்கை காரணமாக சர்வதேச நிறுவனங்கள் முதல் சாதாரன முதலாளி வரை பணத்தை கொடுத்து தமது விருப்பை சாதிக்கலாம் என்பது அங்கீகரிக்கப்பட்டு வருகிறது. வாக்கை தனதாக்க சாராயப்போத்தல், சறம், உணவுப்பொதி கொடுத்தல் எந்தவிதத்திலும் அங்கீகரிக்கப்படக்கூடாதவை.

### 4.2.3. ஏமாற்று வாக்குறுதிகள்:

மக்கள் நலன் மைய அரசியலை கைவிட்டு கட்சி நலனுக்காக தேர்தல் அரசியலை முன்னெடுப்போரை கவனமாக அவதானிப்பது முக்கியம். ஒரு தேர்தல் பரப்புரைக்கு வருவோர் பாராளுமன்றத்துக்கு செல்லும் வாய்ப்பு கிடைத்த பின்னர் மீண்டும் அந்த மக்களிடம் செல்வது அடுத்த தேர்தல் பரப்புரைக்கே என்பது அதிகமாக சந்தர்ப்பங்களில் உண்மை. ஒரு சில விதிவிலக்குகளை அபூர்வமாக தேடிப்பிடிக்கலாம்.அப்படிப்பட்டவர்கள் வந்து உங்களுக்கு இலவச வீடு என கூறும்போது அதனை நம்பி வாக்களிக்க ஒருபோதும் மக்கள் சென்று ஏமாறக்கூடாது. யதார்த்தத்தில் நடைமுறைக்கு பொருத்தமற்றவற்றை குறிப்பிட்டு தமது பதவிக்காலத்தில் அவற்றை நடத்துவோம் என கூறுவதை மக்கள் எளிதாக நம்பி ஏமாறக்கூடாது.

### 4.2.4. வசைபாடும் அபேட்சகர்கள்

ஒவ்வொரு அபேட்சகர்களும் அவரவர் அங்கத்துவம் வகிக்கும் கட்சியின் கொள்கை அடிப்படையில் அவரவரது தேர்தல் விஞ்ஞாபனத்தை மனவுறுதியுடனும் செயற்பாட்டுத்தெளிவுடனும் முன்வைப்பது அவசியம். ஆனால் பலர் ஏனைய அபேட்சகர்கள் மற்றும் அவர்களது கட்சியின் செயற்பாடுகள் பற்றி வசைபாடிப்பாடி வாக்கு சம்பாதிக்க முயற்சிக்கின்றனர். இது அவரவருக்கு அவரவரில் நம்பிக்கையில்லை என்பதை தெளிவுபடுத்துகிறது. ஆத்துடன் பிறரை குறைசொல்லி மட்டுமே தன்னை நிலைநிறுத்த முனைவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தவிதத்திலும் ஆரோக்கியமான தலைமைத்துவத்தை முன்வைக்காது.

### 4.2.5. கட்சிகள் குறிப்பிட்ட அரசியல்வாதிகளின் சொந்தமாவது எப்படி?

சில அரசியல்வாதிகள் அவர்கள் அங்கம் வகிக்கும் கட்சிகளை அவர்களுடைய சொந்தமாக்கி விடுகின்றனர். இதனால் வயது முதிர்ந்த பின்னரும் தாமே தமது கட்சியை பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும், இல்லாவிட்டால் தோற்றுவிடும் எனக்கூறி தமது இருப்பை மீள உறுதி செய்கின்றனர். கட்சியை பாவித்து சுயநலமான வேலைகளை மேற்கொள்கின்றனர். இது ஆரோக்கியமானதல்ல.

### 4.2.6. வாரிசு அரசியல்

தேர்தலில் போட்டியிட வருவோர் அரசியலின் மூலம் மக்களுக்குரிய நல்வாழ்வை உறுதிசெய்ய போதுமான முழு அர்ப்பணிப்புடன் முன்வரவேண்டும். இதனை முக்கியத்துவப்படுத்தாமல் தந்தையை தொடர்ந்து அவருடைய இடத்தை நிரப்பும் பிள்ளைகளாகவோ அல்லது கணவனுடைய இடத்தை நிரப்பும் மனைவியாகவோ வருவது ஆரோக்கியமானதல்ல. அனுதாப வாக்குகள் மையமான தெரிவுகள் பொருத்தமானதல்ல.

### 4.2.7. சர்வாதிகாரப்போக்கு

அறப்பண்புகளை கைவிட்டுவிட்டு சமகால துப்பாக்கிக்கலாசாரத்தை முன்வைத்து தமது தலைமைத்துவம் பொருத்தம் என பரப்புரை செய்வதும், அந்த பரப்புரையில் தமது உள்ளத்தை பறிகொடுப்பதும் ஆரோக்கியமானதல்ல. உயிரை கொடுத்தல், உயிரை எடுத்தல்... என குறிப்பிட்டு வன்முறையை மிகைப்படுத்த முனையாமல் மனிதநேயப்போக்கை முன்வைப்பது முக்கியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. தேர்தலும் கிறிஸ்தவ பொறுப்பும்

கிறிஸ்தவ வாழ்வு என்பது பொறுப்பு மையமானது. முக்கியமாக வாழும் சூழ்நிலையில் அரசியல் சமூக பொருளாதார சமய கலவி சுகாதார கலாசாரரீதியில் பொறுப்புடன் வாழ்வது அனைவரதும் கடமையே. யதார்த்தத்தில் வாழ்வு உறுதி செய்யப்பட அரசியல் மாற்றங்கள் உட்பட அனைத்து துறைகளிலும் ஆரோக்கியமான மாற்றங்கள் தேவை.

### 5.1. இறையாட்சி மைய கிறிஸ்தவம்

மனம்மாறுங்கள் இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது (மாற்கு 1:15,16) என்பது கிறிஸ்து இயேசுவின் அழைப்பு. ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிப்பு (லூக்கா 4:18, 19) நாசரேத்துப் பிரகடனம். சோதனைகளை மேற்கொண்டமை (மத்தேயு 4: -11) முன்வைக்கும் சவால் கல்லை அப்பமாக்கும் இயற்கை ஒழுங்கு எதிர்ப்பு மீறல், கோவிலின் உச்சத்திலிருந்து குதித்து பலசாலி என பறைசாற்றுதல், தீமையை வழிபட்டு அனைத்தையும் பெறல் போன்ற குறுக்கு வழிகளுக்கு இறையாட்சியில் இடமில்லை.இதனால் சிலுவை வழியை தெரிந்தெடுத்தார். இறையாட்சியை மையமாக்கி இயேசு முன்வைத்த உவமைகள் மற்றும் போதனைகள், வாழ்க்கை முறை, புதுமைகள்... அனைத்தும் இறையாட்சி மையமே. இது அன்று நிலவிய ஆதிக்கப்போக்கை சவாலிட்டது. வாழ்வை உறுதி செய்யும் மாற்றுப்போக்கை முன்வைத்தது.

### 5.2. கிறிஸ்து இயேசுவின் அரசியல்

மக்கள் நலன் பேணும் அரசியலை கிறிஸ்து இயேசு தெரிந்தெடுத்திருந்தார்.சமூக பொருளாதார அநீதி, இனவாதம், அரசியல் வஞ்சகம் போன்றவற்றுக்கு எதிரான போக்கை (திருவிவிலியத்தின் இறைவாக்கினர் முன்வைத்திருந்த போக்கு) இயேசுவின் அரசியலில் காணமுடியும். ஒரு அரசியல் புரட்சியாளராக இயேசு அவரது கால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநியாய சமூகக் கொள்கைகளை சவாலிட்டார், முறியடித்தார். மக்களின் தேவைகளை புனிதமாகக் கருதுங்கள், குரலற்றவர்களுக்கு குரல் கொடுங்கள், அடக்குமுறையின் செயல்பாடுகளை அம்பலப்படுத்துங்கள் போன்ற நிலைப்பாடுகளை இயேசு எடுத்திருந்தார்.[10]

## 5.3. அடிமைத்தனம் புனித ஏடாக முடியுமா?

இறைவாக்கு ஒருபோதும் அடிமைத்தனத்துக்கு துணை போகாது. அடிமைத்தனத்துக்கு தெய்வீக தன்மை கொடுப்பது ஒடுக்குவோரின் வழக்கம். இதனால் பொருத்தமான பொருள்கோளியலின்படி திருவிவிலியத்தை வாசிப்பது முக்கியம்.

கிறிஸ்து இயேசுவின் அரசியல் வரலாற்றில் இருட்டடிப்பு செய்யப்பட்டது. கடவுளையும் அரசையும் வேறுவேறாக்கி, கடவுளை புனித வழிபாட்டுடனும், அரசை தேவையேற்படும் போது தீமைகளை அங்கீகரிக்கும் போக்குடனும் தொடர்புபடுத்தும் முயற்சி முன்னெடுக்கப்பட்டது. இதனை உறுதி செய்ய பின்வரும் திருவிவிலியப்பகுதி பாவிக்கப்படுகிறது: சீசருக்கு உரியவற்றை சீசருக்கும் கடவுளுக்கு உரியவற்றை கடவுளுக்கும் கொடுங்கள் (மாற்கு 12:17). இயேசுவின் மனப்பாங்கை புரிந்துகொள்ள இத்திருவிவிலியப்பகுதி உரிய முறையில் நோக்கப்படவேண்டும்.

மாற்கு நற்செய்தி நூலின் அதிகாரங்கள் 11 – 12 ஆழமாக நோக்கப்பட வேண்டும். அத்தி மரம் (மாற்கு 11), திராட்சைத் தோட்டம் என்பன இஸ்ரயேலை குறிக்கும். எருசலேம் கோவில் இஸ்ரயேலரின் வாழ்வின் அடிப்படை. கனி தராத அத்தி மரம் (11:12), கொடிய குத்தகைக்காரர் ஆதிக்கத்துக்குள்ளாகி விட்ட திராட்சைத்தோட்டம் என்பன ஒடுக்குமுறையில் வாழ்ந்த மக்களை குறிக்கின்றது. ஆலயம் (11:15 – 19) கள்வர் குகையாக்கப்பட்டிருந்தது. இந்தப்பின்னணியில் தீமையின் அடையாளங்களான (இயேசுவின் காலத்தில்) பரிசேயரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டப்படி,இயேசுவை குற்றவாளியாக்க ஏரோதியர் வந்தனர் (12:13).“சீசருக்கு வரி செலுத்துவது முறையா? இல்லையா? நாங்கள் செலுத்தவா, வேண்டாமா?” என்பதே அவர்கள் கேள்வி (12:14). வரி செலுத்துங்கள் என்று இயேசு கூறினால் அவரை உரோமை அரசின் ஆதரவாளராக காட்டி யூத விடுதலைக்கு எதிரான துரோகியாக சித்தரிப்பர். வரி செலுத்த வேண்டாம் என இயேசு கூறினால் உரோமை அரசுக்கு எதிரானவராக்கி, வரி செலுத்த வேண்டாம் என வெளிப்படையாக கூறி ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்ட செலோத்தேயர்களில் ஒருவராக்க திட்டம். இந்த சூழ்நிலையையே இயேசு,சீசருக்கு (உரோமைப் பேரரசர்) உரியவற்றை சீசருக்கும் கடவுளுக்கு உரியவற்றை கடவுளுக்கும் கொடுங்கள் (மாற்கு 12:17) என்பதை கூறி கையாண்டார்.[10]

உரோமையரின் ஆதிக்கத்துக்கு துணைபோன அதிகார வர்க்கத்தை அம்பலப்படுத்தும்படி அவர்கள் வழக்கத்திலிருந்த, தெனாரியம் எனும் உரோமை வெள்ளி நாணயத்தை கொண்டு வரும்படி இயேசு கூறினார். அதில் பொறிக்கப்பட்டிருந்த உருவமும் எழுத்தும் யாருடையவை எனும் இயேசுவின் வினாவுக்கு அவர்களின் பதில்,“சீசருடையவை”. இதன் மூலம் இயேசு வெளிப்படுத்திய முக்கியமான விடயம் அவர்கள் உரோமை காலணித்துவத்தை அங்கீகரித்துள்ள நிலையையே. அத்துடன் இது பத்துக்கட்டளையின் படி,“கடவுளை மட்டும் வழிபடுவோம்” என்னும் வாக்குறுதிக்கு மாறானது என்பதை எந்த ஒரு யூதரும் விளங்கிக் கொள்வார். இதனால் அவர்களது குற்றம் பிடிக்கும் திட்டம் நிறைவேறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. உரோமை பேரரசருடைய உருவமும் எழுத்தும் பொறிக்கப்பட்டவை யூதர்களால் பயன்படுத்தப்பட முடியாதவை என்பதே இங்கே முக்கிய விடயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 5.4. பெறுமதிமிக்க அறவியல் ஆன்மீகம்: பாதிக்கப்பட்டோரில் கடவுளை சந்திக்கும் பக்குவம்

"பசியாய் இருந்தேன், நீங்கள் உணவு கொடுத்தீர்கள். தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள், அன்னியனாக இருந்தேன், என்னை ஏற்றுக்கொண்டீர்கள்,...சிறைலிருந்தேன் என்னைத் தேடி வந்தீர்கள்..."(மத்தேயு 25:31 – 46) முன்வைக்கும் அறவியல் மற்றும் ஆன்மீகம் என்பது பாதிக்கப்பட்டோருடன் தம்மை இணைத்துக்கொள்வதே. இதுவே அவசியமான அரசியலின் அடிப்படை.

### 5.5. இன்றைய சூழ்நிலையில் (இணைய மைய வாழ்வு) மக்கள் நலன் மைய அரசியல்

இன்றைய சூழ்நிலை இணைய மையமாகிவிட்டது. அனைத்தும் இணையத்தின் வழியாக மேற்கொள்ளப்படுகிறது. தொடர்பாடல் பெருக்கம் உலகு தழுவிய வலைப்பின்னலை ஏற்படுத்தியுள்ளது. ரிம் பேர்னர்ஸ் லீ (Timothy John Berners - Lee) எனும் பிரித்தானிய விஞ்ஞானியின் இக்கண்டுபிடிப்பு (1989) வரலாற்றில் நடைபெற்ற பெரும் புரட்சியாக கருதப்படுகிறது. www என ஆங்கிலத்தில் இது,"உலகம் தழுவிய வலைப்பின்னல் (World Wide Web)" குறிப்பிடப்படுகின்றது. கைபேசி வழியாக இயங்கும் இணையப்பயன்பாடு, உலக உறவாடலை உள்ளங்கைகளுக்குள் கொண்டு வந்துவிட்டது.[10] கல்வி, வர்த்தகம், விளையாட்டு, அரசியல்... என அனைத்தும் இணையவழி வந்துவிட்டது. இதனைப்பாவித்து தீமைகள் பல நடைபெற்றாலும் நன்மைகளுக்காக பாவிப்பது இன்றைய தேவை ஆகும்.

இறையாட்சி மையமாக, அனைத்தினதும் வாழ்வை உறுதி செய்யும் போக்கு பேணப்படவேண்டும். அனைவருக்கும் நன்மை தரும் அறவியல் ஆன்மீகம் மைய வாழ்க்கை உறுதி செய்யப்படவேண்டும். அன்பு, அமைதி, சமத்துவம், நீதி போன்ற பண்புகள் மைய வாழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யதார்த்தமயமாக வேண்டும். இதனை உறுதி செய்ய சுயநலம் அல்லது இலாப நோக்கமுடைய எந்த அமைப்பும் பொருத்தமில்லை. வேறு வார்த்தைகளில் குறிப்பிடுவதானால் கட்சி அரசியல் மக்கள் நலன் மைய அரசியலால் மாற்றீட செய்யப்பட வேண்டும். ஒப்பீட்டடிப்படையில் இந்த முயற்சியில் ஈடுபடக்கூடிய இயக்கம் சிவில் சமூக அமைப்பே.

பின்காலனித்துவ சந்தை மைய முதலாளித்துவம் நாடுகளை பிரித்து வருகின்றது. வல்லரசுகளின் ஆதிக்கப்போட்டி பூகோள அமைதியை சீர்குலைத்துவருகிறது. கோவிட் 19 ஐ விட மிகவும் கொடுமையான அழிவுகள் எதிர்வுகூறப்படுகின்றன. தண்ணீருக்கான போர், அனுவாயுதப்போர்... போன்ற பற்றிய அச்சம் மனுக்குலத்தை வாட்டுகிறது. கோவிட் 19 ஆல் ஏற்பட்ட பொருளாதார பின்னடைவுகள் எப்படிப்பட்ட தாக்கத்தை இலங்கைக்கு ஏற்படுத்தியுள்ளது? தேர்தலின் பின்னர் எத்தகைய சூழல் நிலவும்?... போன்றனவும் முக்கியம். இவற்றை கையாள உலகளாவிய ரீதியல் சிவில் சமூக வலைப்பின்னல்கள் உழைப்பது முக்கியம், நிச்சயம் நம்பிக்கையை தரும்.

### 6. தொகுப்பு

அரசியல் அறம் ஆன்மீகம் சார்நத ஒன்று. அனைவருக்கும் வாழ்வை உறுதி செய்வதே அதன் நோக்கம். தேர்தல்கள், ஜனநாயக அடிப்படையில் ஒப்பீட்டளவில் பொருத்தமான தலைமைத்துவத்தை வாக்களித்து தெரிவு செய்ய தேர்தல்கள் உரிமையுடன் அனைவராலும் பாவிக்கப்பட வேண்டும். தேர்தலின் பின் தெரிவு செய்யப்பட்டவர்களை பாராட்டுவதும் கேள்விக்குள்ளாக்குவதும் தொடரவேண்டும். இது சிவில் சமூக இயக்கங்களால் இறையாட்சியின் விழுமியங்கள் அல்லது சமய விழுமியங்கள் அல்லது அனைவருக்கும் வாழ்வுதரும் பண்புகள் அடிப்படையில் கூட்டாக, தொடர்ந்தேட்சையாக மேற்கொள்ளப்படவேண்டும். இது ஒரு சிலரின் பொறுப்பு அல்ல இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரதும் பொறுப்பு. இதன் பொறுப்பு அனைவருக்கும் உரியது. யாரும் இதிலிருந்து தப்பிக்க முயன்று ஏமாற்றங்களை எதிர்கொள்ளக்கூடாது. அனைவரும் பொறுப்புகளை ஏற்று இயேசு மற்றும் இறைவாக்கினர் வழியில் இறையாட்சியை நோக்கி இணைந்து பயணிக்க வேண்டும்.

**பொறுப்புடன் இயங்குவோம்**

**புதுவுலகம் பிறக்கட்டும்**

## பின்னிணைப்பு


1. https://www.virakesari.lk/article/78277
2. http://www.thinakaran.lk/political; https://www.virakesari.lk/article/85914; https://www.virakesari.lk/article/85708; https://www.virakesari.lk/article/85704; https://www.virakesari.lk/article/85683; வீரகேசரி 12.07.2020, பக்கம். 02, 08, வீரகேசரி – 2, பக்கம் 01, வீரகேசரி – கதிர் குறிஞ்சி பக்கம். 01, சமகால அரசியல் பக்கம். 01,ஈழநாடு, 15.07.2020, பக்கங்கள்,4,6, காலைக்கதிர் 15.07.2020, பக்கங்கள். 01,11, வலம்புரி 15.07.2020 பக்கங்கள். 04, 05, 15, உதயன் 15.07.2020, பக்கங்கள். 10, 11,13, 15,
3. http://consumerandroad.blogspot.com/2014/03/2014_30.html
4. Cf., சபா. ஜெயராசா, (2009),*இளைஞர் இலக்கியம்: உலகை மாற்றிய நவீன சிந்தனைகள்*, கொழும்பு: சேமமடு பொத்தகசாலை. பக்கங்கள். 4 -5.
5. https://www.publishersweekly.com/978-0-385-51664-8
6. பவுல் லியோன், (1997),*பொருள் தேடும் அருள்வாக்கு*, திண்டுக்கல்: வைகறை வெளியீடு, பக்கம். 39.
7. See., Op cit சபா. ஜெயராசா, (2009),*இளைஞர் இலக்கியம்: உலகை மாற்றிய நவீன சிந்தனைகள்*,பக்கம். 32.


**ஆக்கம்: அருட்பணி S.D.P.செல்வன்**
**புனித மரியாள் ஆலயம்,**
**கோப்பாய்**
**15.07.2020**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா வைரஸ் : கிறிஸ்தவ தன்னிலை மாற்றம்

அருட்பணி : ராஜன் றோகான்

உலகின் அனைத்து நடைமுறைகளையும் ஒழுங்கமைப்புகளையும் தலைகீழாய் மாற்றிய கொரோனா வைரஸ் கொள்ளை நோய் பற்றிய அபாயம் புதியதாக இருந்த போதும்; தொடர் ஊடரங்கு சட்டம், சமூக முடக்கம், தனிமைப்படுத்தல் மற்றும் உணவு அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு என்பன, வடக்கு கிழக்கில் வளரும் தமிழராகிய எமக்கு புதியதல்ல, கடந்த முப்பது வருட யுத்தகால சூழலில் இவற்றைவிட கொடூரமான மரணங்களையும், ஊடரங்கு சட்டங்களையும், அடக்கு முறைகளையும் அனுபவித்த அனுபவம் எமக்கு பெரிதும் உண்டு.

மேலும், உலகின் ஏனைய வல்லரசு நாடுகளுடன் ஒப்பீடு செய்யும் போது, இலங்கையராகிய நாம் சற்று பாதுகாப்பாகவே உள்ளோம் எனும் உணர்வு மேலோங்கியுள்ளது. இதற்கு முதன்மையான காரணியாக அரசின் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் வெப்பம் கூடிய காலநிலையை மட்டும் குறிப்பிட முடியாது. இவற்றுடன், இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் இலவச மருத்துவ வசதிகள், உள்ளூர் சார்ந்த உணவு உற்பத்திகள், பாதுகாப்பான குடிநீர் வசதிகள் மற்றும் எமது உணவு பழக்கவழக்கங்களும் குறிப்பிடப்படுகின்றன. எவ்வாறாயினும், கொரோனா கொள்ளை நோய் தொடர்பான அனுபவங்களும் அவதானங்களும் எமக்கு பல சாதகமானதும் பாதகமானதுமான யதார்த்தங்களை வெளிப்படுத்தியுள்ளது. ஏலவே, முப்பது வருட யுத்தம் மற்றும் சுனாமி போன்ற அனர்த்தங்களின் வடுக்களோடு வாழும் எமக்கு மீண்டும் கொரோனா யதார்த்தமான பாடங்களை கற்றுக் கொடுத்துள்ளது. கொரோனாவின் ஆவேசம் சமூக, பொருளாதார, மற்றும் அரசியல் கட்டமைப்புகளை மட்டுமல்ல அத்துடன் சடங்குகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவங்களையும் முதன்மைப்படுத்தும் அனைத்து சமய நடைமுறைகளையும் கேள்விக்குறியாக்கியுள்ளது. இந்த உண்மை நிலையை புரிந்துகொண்டு கிறிஸ்தவ சமயமும், அதனுள் பிளவுபட்ட சபைகளும் நிறுவனங்களும் பதிலுரைக்க வேண்டும்.

கிறிஸ்தவ சபைகள், குழுக்கள் மற்றும் நிறுவனங்களின் பதிலுரைகள் அல்லது பொறுப்புக்கூறல் அதன் அருட்பணிகளின் அணுகுமுறைகளில் மட்டுமல்ல, அவற்றின் உள்ளகத்திலிருந்து இயக்கிக் கொண்டிருக்கும் கோட்பாடுகளிலும் இறையியல் தத்துவங்களிலும் மாற்றத்தை ஏற்படுத்தியதாக இருக்க வேண்டும். என்பதனை எனது சூழமைவு சார் அனுபவங்களுடன் இச்சிறிய கட்டுரையில் விளக்குகின்றேன்.

கொரோனா கொள்ளை நோய் பரவலை தடுக்க இலங்கை அரசு (உலக நாடுகள்) முன்னெடுத்த முதலாவது அணுகுமுறை தொடர் ஊடரங்கு சட்டம், சமூக முடக்கம் மற்றும் தனிமைப்படுத்தலாகும். இந்நடைமுறைகளினால் மானிட சமூகங்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டன மற்றும் அவற்றிலிருந்து கற்றுக் கொண்டவை எவை என்பதனையும் கவனிப்போம்.

1. வறுமை மற்றும் உணவு அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு. குறிப்பாக அன்றாடம் கூலி வருமானத்தை அடிப்படையாகக் கொண்ட குடும்பங்கள், நகர்புற வறிய குடும்பங்கள், சிறு மற்றும் வீதியோர வியாபாரிகள் சுயதொழிலாளர்கள் உடனடியாகவே பெரிதும் பாதிக்கப்பட்டனர். அன்றாட உணவு, பாதுகாப்பான குடிநீர் மற்றும் மருத்துவ உதவிகளை பெறுவதில் பெரிதும் கடினப்பாடுகள் ஏற்பட்டன.
2. புலம் பெயர்ந்த பணியாளர்கள் (Migrant wokers) கிராம புறங்களிலிருந்து தொழிலுக்காக நகர்புறங்களில் தங்கியிருந்து பணியாற்றியவர்கள் பெரிதும் சவால்களை சந்தித்தனர். குறிப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகம் மற்றும் எல்லைபுற கிராமங்களில் இருந்து கொழும்பு, கண்டி, மாத்தளை, நீர்கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய சென்ற நகர்களில் தொழிலாளிகளாக வசித்தவர்கள் உணவு, பாதுகாப்பான குடிநீர், வதிவிடம் இல்லாது பாதிக்கப்பட்டதாகவும் அவர்களின் தொழில் வழங்குனரினால் கைவிடப்பட்டதையும் சமூக வலைத்தளங்களில் காணக்கூடியதாக இருந்தன.

3. வீட்டு வன்முறை, தொடர்ச்சியாக குடும்பங்களும் சமூகங்களும் முடக்கப்பட்டதால், குடும்பங்களாக மற்றும் குழுக்களாக வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதனால் பல குடும்பங்களிலும் குழுக்களாக வாழும் குக்கிராமங்களிலும் வன்முறை வலுப்பெறத் தொடங்கின. குறிப்பாக சிறுவர்களும் பெண்களும், தங்கி வாழும் வயோதிபரும் வன்முறைக்கு ஆளாக வேண்டிய சூழல் ஏற்பட்டது. இதனால் கொடிகாமம், கிளிநொச்சி, வாழைச்சேனை மற்றும் அக்கரைப்பற்று கிராமங்கள் தற்கொலைகளும் கொலைகளும் நடைபெற்ற ஆதாரங்கள் உள்ளன.

4. மனவழு மற்றும் உளநலபாதிப்பு, கொரோனா முடக்கத்தால் மானிட சமூகத்தின் அனைத்து பிரிவினருக்கும் ஏற்பட்ட ஒரு பொதுவான பாதிப்பு உளநல பாதிப்பாகும். பொருளாதார சரிவு, தொழில் வாய்ப்பு இழப்பு, பிரயாணதடை, துண்டிக்கப்பட்ட உறவு, குடும்ப சுலபம் நாளாந்த செயற்பாடுகளில் ஏற்பட்ட மாற்றம் அனைத்து தரப்பினரையும் உளநோயாளியாக மாற்றியது.

5. சிறுவர்களின் கல்வி மற்றும் ஆளுமை வளர்ச்சியில் ஏற்பட்ட பாதிப்பு. குறிப்பாக பாடசாலை, கற்றல் சூழல், விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு என்பவற்றில் ஏற்பட்ட தடையினால் சிறுவர்களின் மனநிலையிலும் ஆளுமை வளர்ச்சியிலும் பெரிதும் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது. மேலும் இணையதள கல்வி செயற்பாடானது மேலும் சிறுவர்களிடையே வர்க்க வேறுபாட்டையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பாதிப்பையும், பிறழ்வு நடத்தையையும் தோற்றம் பெற செய்தன. இணையத்தள மற்றும் நவீன செல்லின வசதியற்ற ஏழை சிறுவர்களும் தாய் தந்தை அற்ற உறவுகளோடும் சிறுவர் இல்லங்களில் வாழும் சிறுவர்களும் இவ்வாறான பாதிப்புக்குள்ளானார்கள்.

6. ஆன்மீக பிறழ்ச்சி, பொதுவாக தொடர்ச்சியாக வழிபாட்டு தளங்களை தரிசித்தவர்களுக்கும், சடங்கு மற்றும் அருட்சாதனங்களுடன் தொடர்புற்றவர்களுக்கு திடீரென ஏற்பட்ட துண்டிப்பு நிலையானது மனச்சோர்வை ஏற்படுத்தியதுடன் எதிர்கால வாழ்வைக்குறித்த பயத்தையும் வலுப்பெற செய்தன. மேலும், சமய தத்துவங்களிலும் போதனைகளிலும் கொண்டிருந்த நம்பிக்கையில் பிறழ்ச்சியையும் ஏற்படுத்தியது. சில சமய போதனைகள், இக்கொள்ளை நோய் கடவுளால் ஏற்படுத்தப்பட்டதாகவும் உலகம் அழியப் போவதாகவும் கூறி மேலும் மானிட சமூகம் பிறழ்வுருவதற்கு காரணமாகவும் இருந்தனர்.
7. பிறழ்வு நடத்தை அதிகரிப்பு, மக்கள் தங்கள் நாளாந்த தேவைகளையும் ஆசைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு குற்றவியல் செயற்பாடுகளிலும் ஈடுபடத் தொடங்கினர். சட்டவிரோத மதுபானம் தயாரிப்பு, போதைப் பொருள் கடத்தல், மதவாதம், இனவாதம், சாதியவாதம், கொள்ளை, களவு கடத்தல் போன்ற சமூகத்தை நலிவுற செய்யும் அல்லது கூறுபோடும் நடவடிக்கைகள் அதிகரிக்கத் தொடங்கின.

மேலே கூறப்பட்ட பாதகங்களுடன் இன்றும் பல காரணிகள் சமூக, பொருளாதார, அரசியல் நிலைபாடுகளில் பாதகத்தையும் மாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளன. இவ்வாறான நிலைபாடுகளின் மத்தியில், கிறிஸ்தவ சமய திருச்சபைகளும், நிறுவனங்களும், குழுக்களும் எவ்வாறு பதிலுரைக்கின்றன. என்பது மிகவும் முக்கியமானதாகும். பொதுவாக பார்க்கின்ற போது, கிறிஸ்தவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சபைகளிலும் நிறுவனங்களிலும் ஏனைய சமூக சமய அமைப்புக்களைப் போலவே கொரோனா காலத்தில் செயற்பட்டனர். குறிப்பாக, மருத்துவதுறை மற்றும் பாதுகாப்பு துறையுடன் ஒப்பிடும் போது ஏனைய சமய சமூக அமைப்புகள் செயலிழந்து காணப்பட்டன என்பதும் உண்மையாகும். கிறிஸ்தவ நிறுவனங்களினதும் திருச்சபைகளின் பதில் செயற்பாடுகளும் ஏனைய தொண்டு நிறுவனங்களைப் போலவே நிவாரணப் பணியுடன் திருப்திக் கொள்வது கிறிஸ்தவத்தின் ஆன்மீக யதார்த்தத்திற்கு பொருத்தமற்றதாகவே உள்ளது. "பிறரின் நல்வாழ்வுக்காக தன்னை அர்ப்பணித்தல்" எனும் இயேசுவின் சிடத்துவ அணுகுமுறை மறக்கப்பட்டுள்ளது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

இப்போது, கிறிஸ்தவம் சமூக கலாசார மயப்படுத்தலிருந்தும், சடங்குத்துவத்திலிருந்தும், பாரம்பரிய நிறுவனப்படுத்தலிலிருந்து விடுபட்டு, மக்கள் நல்வாழ்வுக்கு இன்று தேவையானது எவை? உடல் உள சுகப்படுத்தலின் தற்கால அணுகுமுறை எவை? திருச்சபை மக்கள் நலம்-சூழல் நலம் சார்ந்த போதனைகள் எவை? முதலீடு செய்யக்கூடிய தேவைப்பாடுகள் எவை என்பதனை சிந்திக்க வேண்டும்.

பொதுவாக அனைத்து சமயங்களிலும் காணப்படும் மானிட விடுதலைக்கு, சுற்று சூழல் பாதுகாப்பிற்கு ஒவ்வாத மாயைகளில் இருந்து புனைவுகளிலிருந்தும் கிறிஸ்தவம் தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டும். இதனடிப்படையில் கிறிஸ்தவ திருச்சபைகளும் நிறுவனங்களும் தனது தத்துவங்கள், கோட்பாடுகள், இறையியல் தளங்களை மீள வாசிப்பது, மீளவும் வடிவமைப்பது, காலத்தின் தேவையாகும்.

"இதோ! நான் அனைத்தையும் புதியது ஆக்குகிறேன்"
(திருவெளி 21:5)

**அருட்பணி: ராஜன் றோகான்**
**மட்டக்களப்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் களஞ்சியம்

ஆண்டு சந்தா (அஞ்சல் செலவு உட்பட) 280.00
தனிப்பிரதி 80.00

தொடர்பு கொள்ள:-
"இறையியல் களஞ்சியம்"
இலங்கை கிறிஸ்தவ இறையியல் கல்லூரி
சுன்னாகம், யாழ்ப்பாணம்,
இலங்கை.

IRAI IYAL KALANJIYAM
A Tamil Theological quarterly
Annual subscription
(Including posting within Srilanka) 280.00
Single Copy 80.00

Subscription and Correspondence to:
"Irai-Iyal Kalanjiyam"
Christian Theological Seminary Srilanka,
Chunnakam, Jaffna,
Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Thurkka@Mallakam-0212243053